5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

**இலங்கையின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் 2015இல் உலகளாவிய பொருளாதாரச் சூழலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் அதேபோன்று உள்நாட்டுப் பொருளாதாரத்தில் இடம்பெற்ற பல்வேறு அபிவிருத்திகளையும் பிரதிபலித்தது.** வெளிநாட்டுப் பக்கத்தில் முன்னேற்றமடைந்த மற்றும் முக்கியமாகத் தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலான வளர்ச்சியின் மெதுவான போக்கு ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கைத் தளர்த்தல், இறுக்கமடைந்த நிதியியல் சந்தைகள் மற்றும் பூகோள அரசியல் பதட்டங்களின் அதிகரிப்புப் போன்ற உலகளாவிய அபிவிருத்திகளிலிருந்து கசிந்த தாக்கம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையின் செயலாற்றத்தை மோசமாகப் பாதித்தது. உள்நாட்டுப் பக்கத்தில் மிகையான இறை விரிவாக்கத்தினூடாக அதிகரித்த நுகர்வுக் கேள்வி, வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களிலான மெதுவடைவுடன் இணைந்த மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் இரண்டு தேசிய தேர்தல்களுக்கிடையிலான கொள்கை நிச்சயமற்ற தன்மைகளும் 2015இல் வெளிநாட்டுத் துறை மீது அழுத்தங்களைத் தோற்றுவித்தது.

**மேற்குறிப்பிட்ட பின்னணியில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை நடைமுறை மற்றும் நிதியியல் கணக்குகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்த உட்பாய்ச்சல்கள் மற்றும் உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களுடன் குறைந்த செயலாற்றத்தைக் காட்டியது.** குறைந்தமட்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுக்கிடையிலும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2015இல் 2014இன் மட்டமான ஐ.அ.டொலர் 2.0 பில்லியனில் பெருமளவுக்கு மாற்றமின்றியிருந்த போதும் மொ.உ.உற்பத்தியின் 2.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எண்ணெய் அல்லா இறக்குமதிகளின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட மெதுவான போக்கு என்பனவற்றின் காரணமாக 2015இல் வணிக வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்தும் விரிவடைந்த போதும், கணிசமான அதிகரிப்பானது மசகெண்ணெய் இறக்குமதிகள் மீதான குறைந்த செலவினத்தின் மூலம் பெருமளவிற்குத் தணிக்கப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளுடன் முதனிலை வருமானக் கணக்கும் விரிவடைந்தது. எனினும், பணிகள் மற்றும் இரண்டாம் நிலை வருமானக் கணக்குகளிலான மிகைகள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை முன்னைய ஆண்டின் மட்டத்தில் பெருமளவிற்கு மாற்றமின்றியிருப்பதற்கு இயலச்செய்தன. படுகடனை உருவாக்காத உட்பாய்ச்சல்களிலான வீழ்ச்சி, அரசிற்கான உட்பாய்ச்சல்களிலான மெதுவடைவு மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் வட்டி வீதங்கள் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு மற்றும் அதைத் தொடர்ந்து வட்டி வீதங்கள் அதிகரித்தமை என்பவற்றின் காரணமாக அரச பிணையங்களிலான முதலீடுகள் படிப்படியாக மீளப் பெறப்பட்டதனால் நிதியியல் கணக்கானது மோசமாகப் பாதிக்கப்பட்டது. இது, 2015இல் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 1,489 மில்லியன் கொண்ட திரண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்ய வழிவகுத்தது. சென்மதி நிலுவையில் காணப்பட்ட

குறைந்த செயலாற்றம் 2015 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.3 பில்லியனுக்கு அதாவது 4.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானளவில் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 2.42 சதவீதத்தினால் தேய்வடைந்த ரூபா, 2015 செத்தெம்பர் தொடக்கத்திலிருந்து செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதிக்கின்ற மத்திய வங்கியின் தீர்மானத்தினைத் தொடர்ந்து ஆண்டின் இறுதி நான்கு மாத காலப்பகுதியிலும் உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்தது. இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 9.03 சதவீதத்தினால் தேய்வடைந்தது. செலாவணி வீதத்திலான கூடியளவு நெகிழ்ச்சித்தன்மையானது 2015 இறுதியளவில் வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை உறுதிப்படுத்துவதற்கு உதவிய போதும் குறுங்கால மூலதன வெளிப்பாய்ச்சல்கள் 2016இலும் தொடர்ந்தன.

**செத்தெம்பர் ஆரம்பத்தில் செலாவணி வீதக் கொள்கையிலான மாற்றமானது இறக்குமதிக் கேள்வியினைக் கட்டுப்படுத்துதல், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை ஆரோக்கியமான மட்டத்தில் பேணுவதற்கு வசதியளித்தல் மற்றும் சீன யுவான் மற்றும் இந்திய ரூபா என்பன உட்பட பல பன்னாட்டு நாணயங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்தமைக்கு மத்தியிலும் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினைப் மேம்படுத்தல் என்பனவற்றைக் கவனத்தில் கொண்டிருந்தது.** மேலும், பெறுமதி விகிதத்தின் படியான உயர்ந்தபட்சக் கடன்களின் விதிப்பனவு, 2015இல் அறிமுகப்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீதம் கொண்ட குறைந்தபட்சக் காசு அளவுத்தேவைப்பாடு போன்ற ஏனைய கொள்கை வழிமுறைகளும் இறக்குமதிக்கான மிகையான கேள்வியினைக் கட்டுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருந்தன. இக்கொள்கை வழிமுறைகள் 2016இன் தொடக்கத்தில் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டமையுடன் சேர்த்து 2016இல் வெளிநாட்டுத் துறையை வலுவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதிகளை உயர்த்துவதற்கும் நாட்டின் தற்போதுள்ள ஏற்றுமதிகளின் உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் ஏனைய படுகடனை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்களைக் கவர்வதற்கும் கொள்கைகளையும் வழிமுறைகளையும் அறிமுகப்படுத்துவதற்கு வலுவான தேவை காணப்படுகின்றது. இவை நடுத்தரக் காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையில் கணிசமான மேம்பாடுகளை உருவாக்குவதற்கு இன்றியமையாததாகும். அதேவேளை, குறுங்காலத்தில் உறுதியான இறை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சென்மதி நிலுவைக்கான

### அட்டவணை 5.1 சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (பிபீஎம் 6 இன்படியான வெளிப்படுத்துகை வடிவமைப்பு)

| வகை | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2014 (அ) | 2015 (ஆ) | 2014 (அ) | 2015 (ஆ) |
| **நடைமுறை கணக்கு (தேறிய)** | **-1,988** | **-2,009** | **-259,436** | **-274,562** |
| **வர்த்தக நிலுவை** | **-8,287** | **-8,430** | **-1,081,987** | **-1,146,676** |
| ஏற்றுமதி | 11,130 | 10,505 | 1,453,176 | 1,425,791 |
| இறக்குமதி | 19,417 | 18,935 | 2,535,163 | 2,572,467 |
| **பணிகள் (தேறிய)** | **1,880** | **2,325** | **245,496** | **316,170** |
| பெறுகைகள் | 5,605 | 6,397 | 731,863 | 869,634 |
| கொடுப்பனவுகள் | 3,725 | 4,072 | 486,367 | 553,464 |
| **முதன்மை வருமானம் (தேறிய)** | **-1,808** | **-2,097** | **-236,073** | **-286,137** |
| பெறுகைகள் | 155 | 127 | 20,263 | 17,253 |
| கொடுப்பனவுகள் | 1,963 | 2,224 | 256,336 | 303,390 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **6,227** | **6,193** | **813,128** | **842,082** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 7,046 | 7,007 | 920,035 | 952,568 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,018 | 6,980 | 916,344 | 948,957 |
| அரசாங்க மாற்றல்கள் | 28 | 27 | 3,691 | 3,610 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 819 | 814 | 106,906 | 110,486 |
| **மூலதன கணக்கு (தேறிய)** | **58** | **46** | **7,684** | **6,256** |
| மூலதன கணக்கு: வரவு | 73 | 71 | 9,586 | 9,562 |
| மூலதன கணக்கு: செலவு | 15 | 24 | 1,903 | 3,306 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)** | **-1,929** | **-1,962** | **-251,752** | **-268,306** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-1,536** | **-2,271** | **-200,261** | **-338,298** |
| **நேரடி முதலீடு : சொத்துக்கள்** | **67** | **53** | **8,725** | **7,236** |
| **நேரடி முதலீடு : பொறுப்புக்கள்** | **894** | **681** | **116,721** | **93,681** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள்** | **-0.2** | **0.02** | **-29** | **3** |
| படுகடன் பிணையங்கள் | -0.2 | 0.02 | -29 | 3 |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள்** | **2,065** | **689** | **269,768** | **102,286** |
| பங்கு மூலதனம் | 178 | -58 | 23,275 | -7,835 |
| படுகடன் பிணையங்கள் | 1,887 | 747 | 246,492 | 110,121 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு: சொத்துக்கள்** | **973** | **553** | **127,197** | **77,021** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 276 | 143 | 36,115 | 21,127 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணம் | 383 | 166 | 50,000 | 21,866 |
| கிடைக்கவேண்டிய ஏனைய கணக்கு | 314 | 244 | 41,082 | 34,028 |
| **ஏனைய முதலீடு: பொறுப்புக்கள்** | **1,165** | **1,857** | **152,107** | **269,228** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | -292 | 1,457 | -38,152 | 209,324 |
| கடன்கள் | 1,713 | 734 | 223,475 | 99,315 |
| மத்திய வங்கி | -719 | -507 | -93,904 | -68,775 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,358 | 787 | 177,243 | 107,301 |
| பொது அரசாங்கம் | 646 | 470 | 84,199 | 63,951 |
| ஏனைய துறைகள் | 429 | -16 | 55,937 | -3,162 |
| வர்த்தக கொடுகடனும் முற்பணங்களும் | -407 | -376 | -53,145 | -51,067 |
| செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 151 | 41 | 19,929 | 11,657 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்கு சொத்துக்கள்** | **1,548** | **350** | **202,442** | **42,637** |
| நாணய தங்கம் | 9 | -39 | 1,154 | -5,156 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை | -6 | -2 | -748 | 16 |
| ப.நா.நி.இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | 1,545 | 391 | 202,036 | 47,777 |
| நாணயமும் வைப்புக்களும் | 496 | 116 | 64,720 | 12,566 |
| பிணையங்கள் | 1,049 | 275 | 137,316 | 35,183 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **393** | **-308** | **51,492** | **-69,993** |
| **திரண்ட நிலுவை (இ)** | **1,369** | **-1,489** | **180,904** | **-129,654** |
| **மொ.உ.உ.இன் சதவீதமாக** | | | | |
| வர்த்தக நிலுவை | -10.4 | -10.2 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -8.0 | -7.4 | | |
| நடைமுறை கணக்கு | -2.5 | -2.4 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -2.4 | -2.4 | | |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.11 பார்க்குக.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

மிகையான இறை விரிவாக்கத்தின் கசிவுத் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாததாகும். அத்தகைய வழிமுறைகள் வெளிநாட்டுத் துறையை உறுதிப்படுத்துவதற்காக நீண்ட கால வெளிநாட்டு மூலதனத்தைக் கவரும் பொருட்டு இலங்கை மீதான முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் உதவும்.

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**உலகளாவிய பொருளாதாரத்துடன் இலங்கை ஒருங்கிணைவதனை மேம்படுத்துவதன் மீதான வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் கவனம் 2015இலும் தொடர்ந்தது.** இது தொடர்பில், வெளிநாட்டுத் துறையின் வாய்ப்புக்கள் மற்றும் செயலாற்றத்தினை மேம்படுத்தும் விதத்தில் பன்னாட்டு வர்த்தகக் கொள்கைக் கட்டமைப்பினை உறுதிப்படுத்துவதற்காக 2015இல் அரசாங்கம் பரந்தளவிலான கட்டமைப்பு மாற்றங்களை முன்மொழிந்தது. அத்தகைய வழிமுறைகள் வர்த்தக சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மாற்றுவதற்கான முயற்சிகள், வர்த்தக உடன்படிக்கைகளை உருவாக்குவதன் மூலமும் உபாய வர்த்தகத்தினை ஊக்குவிப்பதன் மூலமும் வெளிநாட்டுச் சந்தைகளை அணுகுவதனை வலுப்படுத்துதல், வர்த்தகம் மற்றும் தீர்வைக் கொள்கைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் பன்னாட்டு முதலீடுகளையும் வெளிநாட்டு வர்த்தகத்தினையும் ஊக்குவிக்கும் நோக்குடன் அணிசாரா வெளிநாட்டுக் கொள்கையினை உருவாக்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் முக்கிய முன்னுரிமையொன்றாக ஏற்றுமதி ஊக்குவிப்பு பரிசீலனையில் கொள்ளப்பட்ட வேளையில் இறக்குமதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காகவும் குறிப்பிட்ட சில கொள்கை வழிமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**தற்போதுள்ள வர்த்தக உடன்படிக்கைகளின் காத்திரமான பயன்பாட்டினை வலுப்படுத்துவதற்கும் புதிய வர்த்தக உடன்படிக்கைகளில் நுழைவதற்கான சாத்தியங்களை ஆராய்வதற்கும் சந்தை ஆராய்ச்சி நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் இலங்கை உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளில் பெற்றுக்கொள்வதற்காக சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல் பிரச்சாரங்களை மேம்படுத்தல் போன்ற வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** பாரிய சந்தைகளுக்கான முன்னுரிமை கிடைப்பனவை ஊக்குவிப்பதுடன் முதலீடுகளையும் மேம்படுத்தும் இருபுடை உடன்படிக்கைகள் இலங்கை போன்ற சிறிய மற்றும் திறந்த பொருளாதாரங்களுக்கு இன்றியமையாததாகும். ஆகவே, அருகாமையுடன் இணைந்த குறிப்பிடத்தக்களவு போட்டித்தன்மை அநுகூலங்களைக் கருத்திற் கொண்டு பாகிஸ்தானுடனான உடன்படிக்கையினைப் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ளும் அதேவேளை இந்தியாவுடனான தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினையும் இலங்கை ஆழப்படுத்தி விரிவுபடுத்துவது அவசியமானதாகும். 2010இல் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை வசதி+ (ஜிஎஸ்பி+) இடைநிறுத்தப்பட்டமை, சட்டத்திற்கு மாறான மீன்பிடி தொடர்பான பன்னாட்டு விதிகளுக்கு இலங்கை இணங்கியொழுகவில்லை என்ற ஐயம் மற்றும் இலங்கை மீன்பிடித்தொழிலை மேற்கொள்பவர்களுக்குப் போதுமானளவு கட்டுப்பாட்டு முறைமைகள் இல்லாமை போன்ற காரணங்களுக்காக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிலிருந்தான மீன்பிடி இறக்குமதியை 2015 சனவரி நடுப்பகுதியில் தடைசெய்தமை என்பன இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத் துறைக்கு மிகப்பெரும் பின்னடைவாகும். எனினும், சாத்தியமான பொருளாதார நன்மைகளைப் பரிசீலனையில் கொண்டு புதிய அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை வசதிகள் + இற்கு மீண்டும் விண்ணப்பிப்பதற்கு தீர்மானித்ததுடன், இதற்கிணங்க ஐரோப்பிய ஒன்றியம் - பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை வசதி + இனை மீளப்பெறுவதற்கான தயாரிப்பு வேலைகளுக்காக வர்த்தகத் திணைக்களத்தினால் இணைக்கப்பட்ட துணைக் குழுவொன்று 2015 மாச்சில் நியமிக்கப்பட்டது. 27 பன்னாட்டு ஐக்கிய நாட்டு மாநாடுகளின் நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பான தொடர்பான முகவர்கள் மற்றும் அமைச்சுக்களுடன் தொடர்ச்சியான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஐரோப்பிய ஒன்றியத் தரப்பினரால் எழுப்பப்பட்ட பிரச்சனைகள் தொடர்பிலான அனைத்தையுமுள்ளடக்கிய வரைவு விண்ணப்பமொன்று தயாரிக்கப்பட்டது. மேலும், இலங்கை மீன்பிடி உற்பத்திகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை தொடர்பிலான பேச்சுவார்த்தைகளுக்காக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் இவ்விரண்டு விடயங்கள் தொடர்பில் கூடியளவு முன்னேற்றங்கள் அடையப்பட்டதுடன், ஐரோப்பிய சந்தைக்குள் மீளநுழைவதற்கான முக்கிய முற்தேவைப்பாடாக விளங்கும் மனித உரிமைப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பினைத் தொடர்ந்து 2016 இறுதியளவில் அது பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை + இனை மீண்டும் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தடைசெய்யப்பட்ட பகுதிகளில் மீன்பிடியினை நிறுத்தும் பொருட்டு பன்னாட்டு நீரில் தொழிற்படுகின்ற இலங்கைக் கலம்களின் மீது கலம்கள் கண்காணிப்பு முறைமை போன்ற ஐரோப்பிய ஒன்றியத்தினால் குறித்துரைக்கப்பட்ட பன்னாட்டு நியமங்களுக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கும் விதத்தில் இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்த

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகளின் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான மீன் ஏற்றுமதிகள் மீதான தடை 2016இன் நடுப்பகுதியில் நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா இது காலாவதியானதிலிருந்து பெரும்பாலும் இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2015 யூனில் "வர்த்தக முன்னுரிமை விரிவாக்கச் சட்டத்தில்" கையொப்பமிட்டதன் மூலம் பின்னோக்கிச் செயற்படும் விதத்தில் அதன் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமையினைப் புதுப்பித்தது. மேலும், வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமையின்[1] கீழான ஏற்றுமதிகள் 2015இல் கணிசமாக அதிகரித்ததுடன் உலகின் தென் பிராந்தியத்திற்கும் ஏற்றுமதிகள் பன்முகப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 2014இல் இலங்கை ஐ.அ.டொலர் 19 மில்லியன் பெறுமதியான பொருட்களை மெக்சிக்கோவிற்கும் பெருவிற்கும் ஏற்றுமதி செய்ததுடன் இது 2015இல் ஐ.அ.டொலர் 50 மில்லியனுக்கு அதிகரித்தது.

**2015இல் இலங்கையுடனான இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளைப் பயன்படுத்தியமை தொடர்பில் திருப்திகரமான முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டன.** வர்த்தக அமைச்சு இலங்கையின் வர்த்தகத்தின் மீது தாக்கத்தினைச் செலுத்தும் நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகள் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதாரப் பங்குடமை உடன்படிக்கை என்பனவற்றைத் தொடர்ச்சியாக மதிப்பிடுவதில் ஈடுபட்டிருந்தது. மேலும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை, அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதாரப் பங்குடமை உடன்படிக்கை என்பனவற்றிலிருந்து தோன்றுகின்ற பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்ட வேளையில் சீனா, எகிப்து, ருஷியா, மலேசியா, துருக்கி மற்றும் குவைத் போன்ற நாடுகளுடன் இணைந்த கூட்டங்கள் நடைபெற்றன. மேலும், ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கை மீதான பணிகளும் ஐரோப்பிய ஒன்றிய ஒத்துழைப்பின் மீதான பணிகளும் வியாபார சமூகத்தினருக்கான விழிப்புணர்வுப் பிரச்சாரங்களும் 2015இல் வர்த்தக அமைச்சு ஈடுபட்டிருந்த முக்கிய நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நியதிகளில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் வர்த்தக அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், இதன் விளைவாக, இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 2014இன் ஐ.அ.டொலர் 354 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 406 மில்லியன் (தற்காலிகமானவை) கொண்ட மட்டத்திற்கு மேம்பட்டன. 2015இல் இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள், இந்தியாவிற்கான மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 63 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான விரிவாக்கமொன்றாகக் காணப்படும் இந்தியாவிற்கான உத்தேசப் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையானது இந்தியாவுடனான மேம்பட்ட பொருளாதார பங்குடமையின் பொருட்டு அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ள மிக முக்கியமான சீர்திருத்தமொன்றாகக் காணப்படுகின்றது. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2015இல், மதிப்பீடுகளின்படி, இலங்கை ஐ.அ.டொலர் 59 மில்லியன் (தற்காலிகமானவை) பெறுமதியான பொருட்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்தது. இது பாகிஸ்தானுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 81 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. மேலும், இலங்கை உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினூடாக சீனாவுடன் இருபுடை வர்த்தக உறவுகளை விரிவாக்குவதற்குத் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டதுடன் இது பேச்சுவார்த்தைக் கட்டத்தினை அடைந்துள்ளது. உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான இன்னொரு சுற்றுப் பேச்சுவார்த்தை 2015 திசெம்பரில் நடைபெற்றவிடத்து உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய "மிக உயர்ந்த உணர்வுபூர்வத் தன்மையினைக் கொண்ட உற்பத்திகள்", "பொதுவான உணர்வுபூர்வத்தன்மையினைக் கொண்ட உற்பத்திகள்" மற்றும் "வழமையான உற்பத்திகள்" என்பன தொடர்பிலான பட்டியல்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் இரு நாடுகளும் ஈடுபட்டன. மேலும், உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய ஆரம்ப விதிகள் மற்றும் உற்பத்திப்பட்டியல்கள் மீதான பேச்சுவார்த்தைகள் முக்கியமாக மேற்கொள்ளப்பட வேண்டியவையாகவுள்ளன.

**பிராந்திய மற்றும் பல்புடை உடன்படிக்கைகளின் கீழான வர்த்தகமும் 2015இல் தொடர்ந்தது.** தென்னாசிய சுதந்திர வர்த்தக பிராந்தியத்தின் மீதான உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் 2014இன் ஐ.அ.டொலர் 13 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 15 மில்லியனுக்கு (தற்காலிகமானவை) அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டதுடன் இந்தியாவிற்கான கறுப்பு மிளகின் ஏற்றுமதிகள் அதிகரித்தமையே காரணமாகும். 2015இல் ஆரம்ப விதிகளைச் சரிபார்த்தல் தொடர்பான பொறிமுறைகளை வடிவமைத்தல் பற்றிய விடயங்களைக் கலந்துரையாடல், 100 தீர்வைத்

1. வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமையொன்றான இது 1989இல் நிறுவப்பட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையேயான உடன்படிக்கையொன்றாகும். இது, தெற்கு - தெற்கு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் ஆதரவின் கீழ் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட தீர்வைகளின் முன்னுரிமைத் திட்டமொன்றாகும்.

தொடர்களுக்கு உணர்வுபூர்வப் பட்டியல்களைக் குறைப்பதனூடாக மேலும் தீர்வைகளைத் தாராளமயப்படுத்தல் மற்றும் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிராந்திய உடன்படிக்கைக்கான இறுதி நோக்கத்தை இறுதிப்படுத்தல் என்பன தொடர்பான கலந்துரையாடல்களுக்காக மூன்று அலுவல்சார் மட்டத்திலான கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில், ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் மீதான துணைநில் குழுக் கூட்டங்களில் 3 கூட்டத் தொடர்களில் இலங்கை வெற்றிகரமாகப் பங்கேற்றதுடன் இங்கு தீர்வைச் சலுகைகளை ஆழமாக்குதல், ஆரம்ப விதிகளைத் தளர்த்துதல் மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல், முதலீடு மற்றும் பணிகள் மீதான கட்டமைப்பு உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல் என்பன தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. 2015 காலப்பகுதியில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 2014இன் ஐ.அ.டொலர் 120 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 119 மில்லியனாக (தற்காலிகமானவை) மதிப்பிடப்பட்டது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் உறுப்பு நாடுகளாக வங்காளதேசம், சீனா, இந்தியா, லாவோஸ், தென் கொரியா, மங்கோலியா மற்றும் இலங்கை என்பன விளங்குகின்றன. இது, ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையேயான மிகப் பழைய முன்னுரிமை வாய்ந்த வர்த்தக உடன்படிக்கையாகும். ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் உறுப்பினர் நாடுகளிடையே சீனா இலங்கைக்கான முக்கிய சந்தையாக விளங்குவதுடன் இது அந்நாடுகளுக்கான ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 76 சதவீதத்திற்கு வகைகூறியது. மேலும், பணிகள் துறைக்கான பிராந்திய வர்த்தகத்தினை விரிவாக்குவதற்கான மேலதிக நடவடிக்கையொன்றாக 2010இல் நடைபெற்ற 16ஆவது உச்சிமாநாட்டின் போது கையெழுத்தான பணிகளிலுள்ள வர்த்தகம் மீதான சார்க் கட்டமைப்பு உடன்படிக்கை 2015இல் நடைபெற்ற சார்க்கின் பணிகளிலுள்ள வர்த்தகம் மீதான ஏற்றுமதிக் குழுமத்தின் பதினோராவது கூட்டத்தில் கடப்பாடுகளின் தேசிய அட்டவணைகளை இறுதிப்படுத்துகின்ற செயற்பாட்டிலிருந்தது.

**புறூணை, சிலி, நியூசிலாந்து, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, கனடா, யப்பான், மலேசியா, மெக்சிக்கோ, பெரு, வியட்னாம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றை உள்ளடக்கிய 12 பசுபிக் சூழ் நாடுகளிலிருந்தான தலைவர்கள், 20 ஆண்டுகளில் இடம்பெற்ற மிகப்பெரிய புதிய வர்த்தக உடன்படிக்கையான ரான்ஸ் பசுபிக் பங்குடமையின் மீது இணங்கிக் கொண்டமையின் மூலம் 2015 ஒத்தோபரில் உலகளாவிய வர்த்தகம் உத்வேகமடைந்தது.** ரான்ஸ் பசுபிக் பங்குடமையானது ஐ.அ.டொலர் 28 றில்லியனை உள்ளடக்கிய பாரிய பிராந்திய உடன்படிக்கையாக இருப்பதுடன் உலகளாவிய மொ.உ.உற்பத்தியில் 40 சதவீதத்திற்குச் சமனானதாக விளங்கியதுடன் கைத்தொழில், வேளாண்மை, பணிகள் மற்றும் முதலீடுகள் அதேபோன்று சுற்றாடல் மற்றும் தொழிலாளர் பிரச்சனைகள் ஆகிய வர்த்தகம் தொடர்பான அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. இப்பங்குடமைக்குள் நுழைவதன் மூலம் மற்றைய ரான்ஸ் பசுபிக் பங்குடமை நாடுகளுடனான அதிகரித்த வர்த்தகம், இலங்கை உற்பத்திகளுக்கு புதிய சந்தைகள் திறந்துவிடப்படுகின்றமை, பிராந்திய உற்பத்திகள் மற்றும் வழங்கல் சங்கிலிகளில் பங்கேற்பதன் மூலம் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி செய்யப்படுதல், இலங்கையின் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்துடன் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படுவதற்கு தீர்வையற்ற தடைகள் குறைவடைகின்றமை போன்ற நன்மைகளை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**புதிய ஏற்றுமதிச் சந்தைகளைக் கைப்பற்றுதல், தற்போதைய ஏற்றுமதிச் சந்தைகளை விரிவாக்குதல் மற்றும் ஏற்றுமதி உற்பத்திகளைப் பன்முகப்படுத்தல் என்பனவற்றின் பொருட்டு ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில் முதலீடுகளை ஊக்குவிக்கும் விதத்தில் 2015இல் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் இறக்குமதிகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன.** இதனைப் பொறுத்தவரை, 2020 அளவில் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களை ஐ.அ.டொலர் 20 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கும் அதன் மூலம் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்திக் குறிக்கோள்களுக்குப் பங்களிப்பதற்காக இலங்கையின் ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஊக்குவிப்பதற்குமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை புதிய உபாய அணுகுமுறைகளைப் பின்பற்றியது. இவ்விலக்கினை அடையும் விதத்தில், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தூண்டுதலளிக்கும் வியாபாரச் சூழலை உருவாக்குதல், பன்னாட்டுச் சந்தைத் தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் விதத்தில் உற்பத்திகளையும் பணிகளையும் அபிவிருத்தி செய்து பின்பற்றுதல், சந்தைகளை அடையாளம் காணுதல், நுழைதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றை பன்முகப்படுத்துவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு சிறப்பியல்புமிக்க பணிகளை வழங்குதல், வழங்கல் சங்கிலியின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதிசார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் குறிப்பாக மாகாணங்களில் வசதிகளை அளிக்கும் நோக்குடன் அதன் புதிய உபாயத் திட்டம் 2015 - 2020 உடன் இசைந்து செல்லும் விதத்தில் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. "தூய்மையான இலங்கைக் கறுவா" வர்த்தக நாமத்தினை விரிவாக்கி ஊக்குவிக்கும் பொருட்டு

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, தகைமைபெற்ற ஏற்றுமதியாளர்கள் “தூய்மையான இலங்கைக் கறுவா” இலட்சினையை அவர்களது பெறுமதிகூட்டப்பட்ட கறுவா ஏற்றுமதிகளுக்குப் பயன்படுத்துவதற்கான உரிமத்தினை வழங்கியது. மேலும், 2015 ஓகத்தில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை முதல் தடவையாக இலங்கையில் ஆசிய வர்த்தக ஊக்குவிப்பு மாநாடொன்றினை நடத்திய சிறப்பினைக் கொண்டிருந்தது. அதேவேளை, வேளாண்மை, மீன்பிடி, கைத்தொழில் துறைகள் மற்றும் ஏற்றுமதிப் பணிகள் என்பனவற்றின் அபிவிருத்திக்காக 2015இல் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 160 இற்கும் மேற்பட்ட நாடுகள் தொடர்பில் வர்த்தக மற்றும் அரசியல் இடர்நேர்வுகளுக்கெதிராக ஏற்றுமதியாளர்களுக்கு கொடுகடன் காப்புறுதிப் பாதுகாப்பினைத் தொடர்ந்தும் வழங்கியது. 2015இல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட காப்புறுதி வசதிகள் 9.0 சதவீத வளர்ச்சியைக் காட்டியதன் மூலம் மொத்தக் காப்புறுதி 2014இன் ரூ.25.5 பில்லியனிலிருந்து 27.8 பில்லியனை அடைந்தது. 2015இல் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஈரான், ருஷியா என்பன இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி செய்யப்பட்ட மொத்த வியாபாரத்தில் 47 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்தன. 2015 மேயில் பிரேசிலின் சாஓ போலோவில் நடைபெற்ற பன்னாட்டு ஆடைகள் வள கண்காட்சி 2015இல் கூட்டு ஆடைகள் சங்க அமைப்பு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் சேர்ந்து பேராளர் குழுவொன்றுக்குத் தலைமை தாங்கியது. இக்கண்காட்சியானது ஆடைத் தயாரிப்பாளர்கள் மற்றும் வாங்குநர் குறிப்பாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கிழக்காசியா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகள் ஒன்றுகூடிய மிகப்பெரும் கூட்டமாகக் கருதப்படுகிறது. உள்நாட்டில், தென்னாசியப் பிராந்தியத்தில் நவநாகரீக மற்றும் வடிவமைப்பு மையம் என்ற நிலையினை அடையும் விதத்தில் இலங்கை ஆடைக் கைத்தொழிலின் பலத்தினையும் அதன் வடிவமைப்பு திறனாற்றலையும் எடுத்துக்காட்டும் வடிவமைப்பு விழாவொன்று “வடிவமைப்பு மற்றும் வள இலங்கை” என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை கூட்டு ஆடைகள் சங்க அமைப்பின் உதவியுடன் ஏழாவது தடவையாக 2015 நவெம்பரில் வடிவமைப்பு விழாவொன்று வடிவமைப்புக் கல்லூரியினால் ஒழுங்குசெய்யப்பட்டது. அதேநேரம், கூட்டு ஆடைகள் சங்க அமைப்பும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் இலங்கை நவநாகரீக மற்றும் வடிவமைப்புக் கைத்தொழிலுடன் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு புதிய ஈடுபாடுகளை ஏற்படுத்தும் நோக்குடன் வாங்குநர்களை குறிப்பாக ஐரோப்பா மற்றும் தென்னமெரிக்காவிலிருந்தான வாங்குநர் பேராளர் குழுவினை ஏற்பாடு செய்தன.

**இலங்கை வர்த்தகச் சம்மேளனம், முக்கியமாக கொள்கை வகுப்போர் மற்றும் வியாபாரச் சமூகத்தினரின் பங்கேற்புடன் “ஐ.அ.டொலர் 50 பில்லியனை நோக்கிய ஏற்றுமதிகள்” என்ற தொனிப்பொருளில் ஓகத்தில் “இலங்கை பொருளாதார உச்சிமாநாடு - 2015” இனை ஒழுங்கு செய்தது.** “வியாபாரத்தினைச் செய்யுங்கள் தொடர்பான பிரச்சனைகளை இலகுபடுத்தல்” இற்கு தீர்வுகாணும் விடயத்தில் இலங்கை வர்த்தக சம்மேளனம் வியாபாரச் சமூகத்தினருடனும் நிதி அமைச்சுடனும் நெருங்கிச் செயற்பட்டது. அதேவேளை, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் 2015இல் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ரீதியாக இடம்பெற்ற “ஆயுர்வேத எக்ஸ்போ 2015” மற்றும் 2015 யூலையில் 5ஆவது தடவையாக நடத்தப்பட்ட ஆய்வு மாநாடு உட்பட அநேக வர்த்தக வசதிப்படுத்தல் முன்முயற்சிகளிலும் பங்குபற்றியது.

**ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு நிறுவன ரீதியான ஆதரவினை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தினை பரிசீலனையில் கொண்டு அரசாங்கத்தினால் பல்வேறு வழிமுறைகள் முன்மொழியப்பட்டன.** இதன்படி, தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தி முதலீடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றை மீளமைப்பதற்கு 2016 வரவு செலவுத்திட்டம் முன்மொழிந்த அதேவேளையில் மீளமைத்தல் செயற்பாடுகள் நிறைவடையும் வரை இடைக்கால வழிமுறையொன்றாக “அபிவிருத்திக்கான முகவரொருவரை” நிறுவுவதற்கு முன்மொழிந்தது. உள்ளார்ந்த வளத்தினை பயன்படுத்திக் கொள்வதற்கும் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலினூடாக தொடர்பான நிலையினை மேம்படுத்திக் கொள்வதற்கும் ஏற்றுமதி வளர்ச்சியை நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்குமாக 2016 வரவு செலவுத்திட்டம் வெளிநாட்டுத் துறைக்கு வசதியளிக்கும் விதத்தில் ஏற்றுமதி இறக்குமதி வங்கியொன்றினை ஏற்படுத்துவதற்கும் (எக்சிம் வங்கி) வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலுள்ள வர்த்தகப் பிரிவுகளை வலுப்படுத்தும் பொருட்டு மீளமைப்பதற்கும் ஏற்றுமதி ஊக்குவிப்பினை மேலும் மேம்படுத்தும் விதத்தில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினை வலுப்படுத்தவும் ஏற்றுமதிக் காப்புறுதிப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்காக இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினை விரிவுபடுத்துவதற்குமான உயர்ந்த மட்டக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அமைச்சர்களைக் கொண்டு

ஏற்றுமதி அபிவிருத்தி அவையொன்றினை உருவாக்குவதற்கு முன்மொழிந்தது. தனியார் துறை முகாமைத்துவக் கம்பனிகளிடம் முகாமைத்துவப் பொறுப்புக்களை ஒப்படைக்கும் விதத்தில் பல புதிய ஏற்றுமதி பதனிடல் வலயங்களை உருவாக்குகின்ற அதேவேளையில் நாட்டில் புதிய சிறப்பியல்பு வாய்ந்த வேளாண்மை மற்றும் மீன்பிடி வலயங்களின் உருவாக்கமும் முன்மொழியப்பட்டது. மேலும், அதிகரித்த சுற்றுலாப் பயணத்தின் நன்மைகளை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலும் பெற்றுக்கொள்ளும் விதத்தில் வானூர்தி நிலையத்தில் "ஜெம் எம்போறியம்" தீர்வையற்ற இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கடைகளை நிறுவுவதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். பன்னாட்டு வர்த்தகக் கொள்கை கட்டமைப்பினை வலுப்படுத்தும் பொருட்டு பன்னாட்டு வர்த்தக முகவரொருவரைக் கூட்டிணைப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது. மேலும் ஐக்கிய அமெரிக்கா, தென் கொரியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் யப்பான் போன்ற நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்குள் நுழைவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவதற்கான முன்மொழிவுகளும் காணப்படுகின்றன.

**2015இல் தேசிய அபிவிருத்திக் கட்டமைப்பில் வர்த்தக ஊக்குவிப்பின் ஒருங்கிணைப்பினை மேம்படுத்துவதற்கு வர்த்தகம் மற்றும் வர்த்தகக் கொள்கைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டது.** இதன்படி, பெறுமதிகூட்டல்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஆரம்ப வடிவிலான தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் கறுவா என்பனவற்றின் ஏற்றுமதி மீதான செஸ்வரி தொடர்ந்தும் பேணப்பட்ட வேளையில் மிளகு, கராம்பு மற்றும் சாதிக்காய் என்பனவற்றின் ஏற்றுமதி மீதான செஸ் வரியின் நீக்கல் முன்மொழியப்பட்டது. மேலும், 2016 வரவு செலவுத்திட்டம் சலுகை அடிப்படையில் கொடுகடன் வசதிகளை வழங்குதல், வாசனைத்திரவியங்களின் பயிர்ச் செய்கைக்காக குத்தகை அடிப்படையில் அரச நிலங்களை விடுவித்தல், வேளாண்மை ஆராய்ச்சி வசதிகளை வலுப்படுத்தும் பொருட்டு நிதிகளை ஒதுக்குதல் மற்றும் இலங்கையினை தேயிலை மையமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குள் இறக்குமதிகளைத் தாராளமயப்படுத்துவதன் மூலம் தேயிலை உள்ளடங்கலான மீள்ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் என்பனவற்றை முன்மொழிந்தது.

**இறக்குமதிகள் மீதான செலவினத்தினை சிக்கனப்படுத்துவதற்காக 2016 வரவு செலவுத்திட்டத்தில் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** உள்நாட்டு ஆபரண கைவினைஞர்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஆபரண இறக்குமதிகளின் மீது செஸ் தீர்வையினை அறிமுகப்படுத்துவதற்கும் கட்டடவாக்கத் தொழிலை உத்வேகப்படுத்துவதற்காக கட்டுமானத்துடன் தொடர்பான பொறிகள் மற்றும் சாதனங்களின் மீதான இறக்குமதித் தீர்வைகளைக் குறைக்கின்ற வேளையில் சுற்றுலாப் பயணிகளுக்கான கொள்வனவுகளின் சொர்க்கமாக இலங்கையின் பரிணாமத்தினை வளர்க்கும் விதத்தில் ஆடைகள், சப்பாத்துக்கள், இலத்திரனியல் பொருட்கள் என்பன மீதான இறக்குமதி வரிகளில் திருத்தங்களைச் செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. 2015இல் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்கதொரு ஒழுங்குவிதி யாதெனில் சுற்றாடலுக்கு மோசமான தாக்கத்தினை ஏற்படுத்துமென எடுத்துக்காட்டி கிளிப்போசட் இன் இறக்குமதி தடைசெய்யப்பட்டமையாகும். கூடுதலான வினைத்திறன் மிக்க இறக்குமதி ஏற்றுமதி முறைமையை உறுதிப்படுத்துவதற்காக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் உட்பட வர்த்தகத்துடன் தொடர்பான விதிகளினதும் ஒழுங்குவிதிகளினதும் திருத்தத்திற்கும் முன்மொழியப்பட்டது. மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்யும் நேரத்தில் முதலீட்டாளர்களினால் எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சனைகளையும் பரிசீலனையில் கொண்டு தேவையான அனைத்து அனுமதிகளையும் தீர்ப்பனவுகளையும் மற்றும் ஒப்புதல்களையும் ஒரே இடத்தில் வழங்குகின்ற விதத்தில் "ஒரே கூரையின் அனைத்துப் பணிகளையும் வழங்கல் நிலையம்" ஒன்றினை இலங்கைச் சுங்கத்தில் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கமைய, 2016 சனவரியில் இலங்கைச் சுங்கம், சுலபமான ஒப்புதல்களுக்கு வசதியளிப்பதற்காக முறைமையுடன் இணைக்கப்பட்ட 15 எல்லை ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்களுடன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது.

**இலங்கை, 2015ஆம் ஆண்டுப் பகுதியில் உலக வர்த்தக அமைப்பின் பல்புடை முன்முயற்சிகளுடன் தொடர்ந்து ஈடுபட்டிருந்தது.** விதியினை அடிப்படையாகக் கொண்ட பல்புடை வர்த்தக முறையினை உருவாக்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் பொறுப்பான நிறுவனமொன்று என்ற முறையில் உலக வர்த்தக அமைப்பின் வகிபாகம் 2015 திசெம்பரில் கென்யாவில் நடைபெற்ற 10ஆவது அமைச்சர் மாநாட்டின் பேச்சுவார்த்தையின் போது பெருமளவு கவனத்தினைப் பெற்றது. இலங்கை அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றைய நாடுகளுடன் சேர்ந்து, சிறிய பொருளாதாரம் என்ற ரீதியில் குறிப்பாக வர்த்தகத்துடன் தொடர்பான அபிவிருத்தித் தேவைகளை வலியுறுத்துவதில் தீவிரமான பங்கினையாற்றியது. டோகா அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் எஞ்சிய பிரச்சனைகள் தொடர்பான மீதான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதில் இணக்கப்பாடுகள்

காணப்படாதபோதும் அபிவிருத்தியடைந்துவரும் பெரும்பாலான நாடுகள் டோகா அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் கீழ் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியுள்ளன. இதன் பெறுபேறாக, அமைச்சரவையின் தீர்மானம் பின்பற்றப்படும் நாளிலிருந்து எஞ்சியுள்ள வேளாண்மை ஏற்றுமதி உதவுதொகைகளை நீக்குவதற்கு எதிர்பார்க்கின்ற வேளையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் 2018 இறுதியில் ஏற்றுமதி உதவுதொகைகளை நீக்குவதற்கு எதிர்பார்க்கின்றன. அமைச்சரவைப் பிரகடனத்தின் 27ஆவது உறுப்புரையின்படி, சிறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரத்தினை இலங்கை கொண்டிருக்கின்றது என்பதனால் அது அதன் வர்த்தகத்துடன் தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உலக வர்த்தக அமைப்பினூடாக தொழில்நுட்பம் மற்றும் இயலாற்றல் அபிவிருத்தி உதவிகளை எதிர்பார்க்கும் வாய்ப்பினைக் கொண்டிருக்கிறது. மேலும், 2013இல் பாலியில் நடைபெற்ற 9ஆவது அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைத் தொடர்ந்து, வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர்களினால் தொடரப்பட்டதுடன் 2015 திசெம்பரில் 68 நாடுகள் உடன்படிக்கையினை ஏற்றுக்கொண்டன. மூன்றிலிரண்டு பங்கு உறுப்பினர்கள் (108 உறுப்பினர்கள்) இவ்வுடன்பாட்டினை உறுதிப்படுத்தியதும் இது சட்ட ரீதியாக நடைமுறைக்குவரும். இலங்கை வர்த்தக வசதிப்படுத்தல் பேச்சுவார்த்தைகளைத் தீவிரமாகத் தொடர்ந்ததுடன் வரைவு உடன்படிக்கையினையும் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தது. வர்த்தகப்படுத்தல் உடன்படிக்கையினை முழுமையாக நடைமுறைக்கிடுவது வர்த்தகக் கொடுக்கல்வாங்கல் செலவினை கணிசமானளவில் குறைக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் மூலம் ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் ஆகிய இரு சாராரும் போட்டித்தன்மையினை மேம்படுத்த வசதியளிக்கின்றது.


**பன்னாட்டு வர்த்தகம் மீதான உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சவால்கள் 2015இல் தொடந்ததுடன் குறிப்பாக சீனாவின் பொருளாதாரம் மெதுவடைந்ததுடன் இது 2016இலும் தொடரும்போல் தோன்றுகிறது.** இலங்கை உயர் மத்தியதர வருமான நாடென்ற அந்தஸ்தைப் பெற்றதுடன் தலைக்குரிய வருமானமும் உயர்வடைந்தமையினைத் தொடர்ந்து பெரும்பாலான சந்தைகளில் சலுகை முறையில் அணுகும் வசதி மட்டுப்படுத்தப்பட்டது. ஆகவே, தீவிரமடைந்த உலகளாவிய போட்டியை ஏற்றுமதியாளர்கள் எதிர்த்து நிற்பதற்கும் புதிய சந்தைகளையும் புதிய தொழில்நுட்பங்களையும் அவர்கள் பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்துவதற்கும் அதேவேளையில் ஏற்கனவேயுள்ள சந்தைகளின் போட்டித்தன்மையினைப் பேணுவதற்கும் நிறுவன ரீதியான ஆதரவு மிக இன்றியமையாததாகும். எனவே, இலங்கை அதன் ஏற்றுமதிக் கூடையினைப் பற்றி மீளச்சிந்திப்பதற்கும் ஏற்றுமதிகளை பாரம்பரிய ஏற்றுமதிகளுக்கு மட்டுப்படுத்தாமல், குறிப்பாக, உயர் தொழில்நுட்பம் வாய்ந்த உற்பத்திகளுக்கு கைத்தொழிலை பன்முகப்படுத்துவதற்கும் இதுவே மிகச் சிறந்த நேரமாக இருப்பதனால் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையானது உயர் பெறுமதிகூட்டப்பட்ட பொருட்களை ஊக்குவிப்பதனை நோக்கி நெறிப்படுத்தப்பட வேண்டும். பணிகள் துறையும் கூட முறையான உபாயங்கள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவுடன் சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் அறிவை அடிப்படையாகக் கொண்ட பணிகள் துறையுடன் சேர்ந்து சிறப்பாகச் செயலாற்றமுடியும். மேலும், முக்கிய பன்னாட்டுச் சந்தைகளில் காணப்படும் தொடர்ச்சியான புவிசார் அரசியல் பிரச்சனைகளும் இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு சவால்களை ஏற்படுத்தி ஏனைய சந்தைகளுக்குள் நுழைவதற்குச் சரியான நேரத்தில் எடுக்க வேண்டிய உபாயங்களின் தேவையினையும் ஏற்படுத்துகிறது.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை, வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### 5.3.1 ஏற்றுமதிச் செயலாற்றம்

**ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 2015இல் சுருக்கமடைந்து பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட கீழ் நோக்கிய அசைவினையும் பாரிய பொருளாதாரங்களிலும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளிலும் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியையும் பெருமளவிற்குப் பிரதிபலித்தது.** இதன்படி, 2014இல் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015இல் 5.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 10,505 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வேளாண்மை அதேபோன்று கைத்தொழில் ஏற்றுமதிகள் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

வரைபடம் 5.1 பண்டங்களின்படி ஏற்றுமதிகள் - 2015



அட்டவணை 5.2

ஏற்றுமதிகளின் பகுப்பாய்வு

| வகை | 2014 | | 2015 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,793.9** | **25.1** | **2,481.5** | **23.6** | **-312.4** | **-11.2** | **50.0** |
| தேயிலை | 1,628.3 | 14.6 | 1,340.5 | 12.8 | -287.8 | -17.7 | 46.0 |
| இறப்பர் | 45.3 | 0.4 | 26.1 | 0.2 | -19.2 | -42.3 | 3.1 |
| தெங்கு | 356.4 | 3.2 | 351.7 | 3.3 | -4.6 | -1.3 | 0.7 |
| வாசனைப் பொருட்கள் | 264.6 | 2.4 | 377.4 | 3.6 | 112.9 | 42.7 | -18.1 |
| மரக்கறிகள் | 40.1 | 0.4 | 30.5 | 0.3 | -9.6 | -24.0 | 1.5 |
| உற்பத்தியாக்கப்படாத புகையிலை | 41.3 | 0.4 | 31.8 | 0.3 | -9.5 | -23.1 | 1.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 165.2 | 1.5 | 160.4 | 1.5 | -4.9 | -2.9 | 0.8 |
| கடல் உணவுகள் | 252.7 | 2.3 | 163.1 | 1.6 | -89.7 | -35.5 | 14.3 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **8,262.0** | **74.2** | **7,975.6** | **75.9** | **-286.5** | **-3.5** | **45.8** |
| புடவைகளும் ஆடைகளும் | 4,929.9 | 44.3 | 4,820.2 | 45.9 | -109.8 | -2.2 | 17.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 889.8 | 8.0 | 761.2 | 7.2 | -128.6 | -14.5 | 20.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 338.0 | 3.0 | 373.9 | 3.6 | 35.9 | 10.6 | -5.8 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 393.6 | 3.5 | 331.7 | 3.2 | -61.9 | -15.7 | 9.9 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 289.3 | 2.6 | 265.2 | 2.5 | -24.0 | -8.3 | 3.8 |
| பொறி மற்றும் இயந்திர துணைக்கருவிகள் | 342.9 | 3.1 | 293.8 | 2.8 | -49.1 | -14.3 | 7.9 |
| அச்சு கைத்தொழில் உற்பத்திகள் | 52.4 | 0.5 | 45.7 | 0.4 | -6.7 | -12.8 | 1.1 |
| போக்குவரத்துக் கருவிகள் | 151.8 | 1.4 | 243.7 | 2.3 | 91.9 | 60.5 | -14.7 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 138.9 | 1.2 | 135.7 | 1.3 | -3.2 | -2.3 | 0.5 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 41.3 | 0.4 | 35.2 | 0.3 | -6.2 | -14.9 | 1.0 |
| ஏனைய கைத்தொழில்கள் உற்பத்திகள் | 694.1 | 6.2 | 669.4 | 6.4 | -24.7 | -3.6 | 4.0 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **59.5** | **0.5** | **28.4** | **0.3** | **-31.1** | **-52.3** | **5.0** |
| **வகைபடுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **14.7** | **0.1** | **19.5** | **0.2** | **4.8** | **32.4** | **-0.8** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **11,130.1** | **100.0** | **10,504.9** | **100.0** | **-625.1** | **-5.6** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி நாணயமாற்று வீதம் (ஈ)** | **130.56** | | **135.94** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டவை
(இ) மீள் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் நாணயமாற்று வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வாசனைத்திரவியங்கள் மற்றும் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் தவிர்ந்த வேளாண்மை உற்பத்திகளின் அனைத்து முக்கிய வகைகளிலுமிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்து தாழ்ந்த கேள்வியையும் உலகளாவிய விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் பெருமளவிற்கு பிரதிபலித்தது. இதன்படி, மொத்த ஏற்றுமதிகளில் 23.6 சதவீதத்திற்கு வகைகூறும் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இல் ஐ.அ.டொலர் 2,481 மில்லியனுக்கு 11.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தேயிலை மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே காரணமாகும். மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 13 சதவீதத்திற்கு வகைகூறும் இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதிப் பண்டமான தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,340 மில்லியனுக்கு 17.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைந்த பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது. புவிசார் அரசியல் அபிவிருத்திகள், முக்கிய இறக்குமதி நாடுகளில் காணப்பட்ட நாணயத் தேய்வு மற்றும் எண்ணெயிலிருந்தான வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி என்பன ருஷியா மற்றும் மத்திய கிழக்கின் சில நாடுகள் போன்ற முக்கிய வாங்குநர்களிடமிருந்தான இலங்கைத் தேயிலைக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைத் தோற்றுவித்தன. இதன்படி, தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைகள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 4.97 இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.37 இற்கு 12.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஏற்றுமதி அளவுகளும் 307 மில்லியன் கி.கிறாமிற்கு 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இன் ஐ.அ.டொலர் 163 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 35.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2015 சனவரி

நடுப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சந்தைகளை அணுகுவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான கடலுணவு ஏற்றுமதிகள் 75.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவு செய்தமையே முக்கிய காரணமாகும். எனினும், தெங்கு உள்ளீட்டு உற்பத்தியிலிருந்தான வருவாய்கள் 3.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டமைக்கிடையிலும் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகளில் 100 சதவீதத்திற்கும் மேற்பட்ட வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டமையே காரணமாகும். முக்கிய ஏற்றுமதிப் பயிர்களான மிளகு, கராம்பு, சாதிக்காயும் சாதிப்பத்திரியும் போன்றவற்றின் அபரிதமான அறுவடையின் விளைவாக வாசனைத்திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இல் ஐ.அ.டொலர் 377 மில்லியனுக்கு 42.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. எனினும், கறுவாவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 0.2 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு விலைகளின் மட்டத்தில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டமைக்கிடையிலும் ஏற்றுமதி அளவுகளில் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவு வீழ்ச்சியே காரணமாகும்.

**இவ்வாண்டுப் பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இறப்பர், தெங்கு உள்ளீடு அல்லாத உற்பத்திகள், காய்கறிகள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பன கணிசமானளவிற்குப் பங்களித்தன.** 2012ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்த இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இல் மேலும் நலிவடைந்து குறைந்த உலகளாவிய கேள்வியின் காரணமாக உலகளாவிய இறப்பர் விலைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான குறைப்பின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இல் ஐ.அ.டொலர் 26 மில்லியனுக்கு 42.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி அளவுகள் மற்றும் விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட குறைப்புக்களே வழிவகுத்தன. இறப்பர் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட 36.4 சதவீதமான வீழ்ச்சியுடன் சேர்ந்து இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலைகள் 2014இன் கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 2.78 இலிருந்து 2015இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.52 இற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. 2015இல் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 352 மில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் மிதமாக வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய் தும்பு மற்றும் கயிறு போன்ற உள்ளீடு அல்லாத உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட தாழ்ந்த செயலாற்றமே காரணமாகும். மேலும், காய்கறிகள், தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முறையே 24.0 சதவீதத்தினாலும் 23.1 சதவீதத்தினாலும் 2.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

**பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் தாழ்ந்த உலகளாவிய கேள்வி என்பனவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இல் ஐ.அ.டொலர் 7,976 மில்லியனுக்கு 3.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.** புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் பொறி மற்றும் எந்திர துணைக் கருவிகள் என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட தாழ்ந்த செயலாற்றம் இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தது. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 46 சதவீதத்திற்கு வகைகூறும் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு புடவைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்களில் பதிவுசெய்யப்பட்ட முறையே 4.5 சதவீதம் மற்றும் 13.4 சதவீதம் கொண்ட வளர்ச்சி காணப்பட்ட போதும் ஆடை ஏற்றுமதிகளில் பதிவுசெய்யப்பட்ட 2.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். 2015இல் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 12.5 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவிற்கு பங்களித்த போதும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் மற்றைய பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் முறையே 6.0 சதவீதம் மற்றும் 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. பன்னாட்டு இறப்பர் விலைகளில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015இல் ஐ.அ.டொலர் 761 மில்லியனுக்கு 14.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து இறப்பர் ரயர்கள் மற்றும் சத்திரசிகிச்சைக்கான மற்றும் ஏனைய கையுறைகள் போன்ற பெரும்பாலும் ஒவ்வொரு துணை வகைகளிலும் வீழ்ச்சிகள் ஏற்பட்டமையைப் பிரதிபலித்தது. 2015இல் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் சேர்ந்து ஐ.அ.டொலர் 332 மில்லியனுக்கு 15.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, இரத்தினக்கற்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 5.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் வைரங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான ஏற்றுமதி

வருவாய்கள் முறையே 25.2 சதவீதத்தினாலும் 13.7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, பொறிகள் மற்றும் எந்திர துணைக் கருவிகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இரசாயன உற்பத்திகள், மர மற்றும் தாள் உற்பத்திகள், அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள், தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணிகள், பிளாத்திக்கு மற்றும் அவற்றுடன் தொடர்பான பொருட்கள், அடிப்படை உலோகம் மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்கள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைந்த செயலாற்றமே கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சிக்குப் பங்களித்தது.


**இவ்வாண்டுப் பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழான போக்குவரத்துக் கருவிகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் விலங்குத்தீன் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன.** கப்பல்கள், படகுகள் மற்றும் மிதவைகள் அதேபோன்று வீதி ஊர்திகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் விளைவாக 2015இல் போக்குவரத்துக் கருவிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 244 மில்லியனுக்கு 60.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற பிராந்திய நாடுகளிலிருந்தான உயர்வடைந்த போட்டிக்கிடையிலும் நீர்க்கல எரிபொருள் மற்றும் வானூர்திகளுக்கான எரிபொருளை முக்கியமாக உள்ளடக்கிய பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் 10.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு விலைகளில் 51.6 சதவீதம் வீழ்ச்சி காணப்பட்ட போதும் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு பாரிய அதிகரிப்புக்களே காரணமாக அமைந்தன. 2015இல் விலங்குத்தீனிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 16.5 சதவீதத்தினால் அதிகரித்தன.

### 5.3.2 இறக்குமதிச் செயலாற்றம்

**2015இல் இறக்குமதிகள் மீதான செலவினம் பன்னாட்டு பண்ட விலைகளில், குறிப்பாக மசகெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட கீழ் நோக்கிய அசைவினையும் இறக்குமதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளையும் பெருமளவிற்கு பிரதிபலித்தது.** இதன்படி, 2015இல் இறக்குமதிகள் மீதான செலவினம் 2014இன் ஐ.அ.டொலர் 19,417 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 18,935 மில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் மிதமாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, எரிபொருள் அல்லா இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 16,235 மில்லியனுக்கு 9.6 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு அதிகரித்து உலகளாவிய எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தை எடுத்துக்காட்டியது. எண்ணெய் அல்லா இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு தெரிந்தெடுக்கப்பட்ட உந்து ஊர்திகளுக்கான இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டமை அதேபோன்று யப்பானிய யென்னின் தேய்வு என்பனவற்றின் காரணமாக தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

**2015இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2014இன் ஐ.அ.டொலர் 11,398 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 9,638 மில்லியனுக்கு 15.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து எரிபொருள் இறக்குமதிகளின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.** 2015இல் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 2,700 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 1,898 மில்லியனால் வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டினை விட 41.3 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு இறக்குமதி விலைகள் மற்றும் அளவுகள் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியுடன் இசைந்துசெல்லும் விதத்தில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2014இல் பதிவுசெய்யப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 104.53 இலிருந்து 2015இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 54.80 இற்கு 47.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2015இல் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகள் என்பனவற்றின் அளவு முறையே 2.0 சதவீதத்தினாலும் 1.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு 2015இன் மாச்சு மற்றும் ஏப்பிறல் காலப்பகுதியில் பேணல் நோக்கங்களுக்காக தூய்மி மூடப்பட்டிருந்தமையும் வெப்பவலு உருவாக்கம் கணிசமானளவிற்குக் குறைந்தமையும் காரணங்களாக அமைந்தன. இதன்படி, 2015இல் மொத்த இறக்குமதிகளின் பங்காக எரிபொருள் இறக்குமதிகள் முன்னைய ஆண்டில்

வரைபடம் 5.2 பண்டங்களின்படி இறக்குமதிகள் - 2015



அட்டவணை 5.3

## இறக்குமதிகளின் பகுப்பாய்வு

| வகை | 2014 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2014 பங்கு (%) | 2015 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2015 (அ) பங்கு (%) | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,852.5** | **19.8** | **4,713.5** | **24.9** | **861.0** | **22.3** | **-178.6** |
| உணவும் குடிபானங்களும் | 1,633.7 | 8.4 | 1,627.8 | 8.6 | -5.9 | -0.4 | 1.2 |
| அரிசி | 281.7 | 1.5 | 135.1 | 0.7 | -146.5 | -52.0 | 30.4 |
| சீனி மற்றும் சீனி இனிப்பு வகை | 257.1 | 1.3 | 254.4 | 1.3 | -2.7 | -1.1 | 0.6 |
| பால் உற்பத்திகள் | 339.4 | 1.7 | 250.9 | 1.3 | -88.5 | -26.1 | 18.3 |
| பருப்பு வகை | 121.2 | 0.6 | 148.0 | 0.8 | 26.8 | 22.1 | -5.6 |
| ஏனையவை | 634.4 | 3.3 | 839.4 | 4.4 | 205.0 | 32.3 | -42.5 |
| ஏனைய உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 2,218.8 | 11.4 | 3,085.7 | 16.3 | 866.9 | 39.1 | -179.8 |
| வாகனங்கள் | 896.7 | 4.6 | 1,359.6 | 7.2 | 463.0 | 51.6 | -96.0 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 380.5 | 2.0 | 459.8 | 2.4 | 79.3 | 20.8 | -16.4 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 156.4 | 0.8 | 221.0 | 1.2 | 64.6 | 41.3 | -13.4 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 282.7 | 1.5 | 390.1 | 2.1 | 107.4 | 38.0 | -22.3 |
| ஏனையவை | 502.5 | 2.6 | 655.0 | 3.5 | 152.5 | 30.4 | -31.6 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **11,397.7** | **58.7** | **9,638.2** | **50.9** | **-1,759.5** | **-15.4** | **364.9** |
| எரிபொருள் | 4,597.3 | 23.7 | 2,699.6 | 14.3 | -1,897.7 | -41.3 | 393.6 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,327.6 | 12.0 | 2,296.2 | 12.1 | -31.3 | -1.3 | 6.5 |
| வைரங்கள் மற்றும் அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் | 175.4 | 0.9 | 161.5 | 0.9 | -13.9 | -7.9 | 2.9 |
| இரசாயன உற்பத்திகள் | 808.2 | 4.2 | 870.3 | 4.6 | 62.1 | 7.7 | -12.9 |
| கோதுமை மற்றும் சோளம் | 404.7 | 2.1 | 357.2 | 1.9 | -47.5 | -11.7 | 9.9 |
| வளமாக்கி | 272.4 | 1.4 | 289.6 | 1.5 | 17.2 | 6.3 | -3.6 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,812.0 | 14.5 | 2,963.7 | 15.7 | 151.7 | 5.4 | -31.5 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,152.2** | **21.4** | **4,567.0** | **24.1** | **414.8** | **10.0** | **-86.0** |
| கட்டடப் பொருட்கள் | 1,308.9 | 6.7 | 1,352.0 | 7.1 | 43.1 | 3.3 | -8.9 |
| போக்குவரத்துக் கருவிகள் | 707.3 | 3.6 | 930.9 | 4.9 | 223.7 | 31.6 | -46.4 |
| பொறியும் கருவியும் | 2,131.0 | 11.0 | 2,278.1 | 12.0 | 147.1 | 6.9 | -30.5 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 4.9 | .. | 5.9 | .. | 1.0 | 20.6 | -0.2 |
| **வகைபடுத்தப்படாத இறக்குமதிகள்** | **14.4** | **0.1** | **15.9** | **0.1** | **1.5** | **10.3** | **-0.3** |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ)** | **19,416.8** | **100.0** | **18,934.6** | **100.0** | **-482.2** | **-2.5** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி நாணயமாற்று வீதம் (ஈ)** | **130.56** | | **135.94** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது
(இ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(ஈ) ரூபா/ ஐ.அ.டொ. நாணயமாற்று வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

பதிவுசெய்யப்பட்ட 23.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிலக்கரியின் இறக்குமதி அளவு 17.1 சதவீதத்தினால் அதிகரித்து, நிலக்கரி இறக்குமதிகள் மீதான செலவினம் 2015இல் ஐ.அ.டொலர் 159 மில்லியனுக்கு சிறிதளவு அதிகரிப்பதற்கு வழிவகுத்தமைக்கு நிலக்கரி வலு உருவாக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். ஆடை ஏற்றுமதிகளில் பதிவுசெய்யப்பட்ட குறைப்புடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஆடை மற்றும் ஆடைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் 2014இன் ஐ.அ.டொலர் 2,328 உடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,296 மில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையைக் காட்டின. எனினும், இடைநிலைப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இறப்பர் மற்றும் இறப்பரிலிருந்து செய்யப்பட்ட பொருட்கள், இரசாயன உற்பத்திகள், ஊர்திகள் மற்றும் பொறிகளின் உதிரிப்பாகங்கள், வளமாக்கி மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பன 2015இல் அதிகரித்த இறக்குமதிச் செலவினங்களுக்கு சாதகமாகப் பங்களித்தன.

**உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினத்தில் சிறிதளவு குறைப்புப் பதிவுசெய்யப்பட்ட போதும், நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு நீண்ட கால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே காரணமாகும்.** 2015இல் நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 4,713 மில்லியனுக்கு 22.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு தனிப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதி மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினத்தின் காரணமாக நீண்ட கால நுகர்வுப் பொருட்களின் மீதான செலவினத்தில் பதிவுசெய்யப்பட்ட இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 3,086 மில்லியனுக்கு 39.1 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான செலவினம் 47.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து ஊர்திகளின் இறக்குமதிச் செலவினம் 2014இன் ஐ.அ.டொலர் 897 இலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 1,360 மில்லியனுக்கு 51.6 சதவீதத்தினால் அதிகரிப்பதற்குப் பங்களித்தது. அரச ஊழியர்களுக்கான சலுகை

**அட்டவணை 5.4**

**முக்கிய இறக்குமதிகளின் அளவு**

மெ.தொ. '000

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015(அ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **28** | **36** | **23** | **600** | **286** |
| 1ஆம் காலாண்டு | 8 | 15 | 9 | 6 | 176 |
| 2ஆம் காலாண்டு | 2 | 7 | 6 | 102 | 91 |
| 3ஆம் காலாண்டு | 9 | 10 | 4 | 145 | 9 |
| 4ஆம் காலாண்டு | 9 | 4 | 4 | 348 | 9 |
| **கோதுமை (ஆ)** | **1,242** | **1,084** | **895** | **1,179** | **1,208** |
| 1ஆம் காலாண்டு | 322 | 353 | 197 | 271 | 242 |
| 2ஆம் காலாண்டு | 455 | 235 | 326 | 324 | 342 |
| 3ஆம் காலாண்டு | 254 | 291 | 170 | 291 | 373 |
| 4ஆம் காலாண்டு | 211 | 205 | 201 | 292 | 251 |
| **சீனி** | **606** | **569** | **548** | **520** | **624** |
| 1ஆம் காலாண்டு | 163 | 158 | 126 | 131 | 169 |
| 2ஆம் காலாண்டு | 170 | 135 | 175 | 162 | 161 |
| 3ஆம் காலாண்டு | 124 | 114 | 118 | 152 | 156 |
| 4ஆம் காலாண்டு | 149 | 162 | 129 | 75 | 137 |
| **மசகு எண்ணெய் (ஆ)** | **2,070** | **1,486** | **1,743** | **1,824** | **1,763** |
| 1ஆம் காலாண்டு | 557 | 558 | 482 | 548 | 369 |
| 2ஆம் காலாண்டு | 555 | 413 | 545 | 365 | 355 |
| 3ஆம் காலாண்டு | 410 | 137 | 315 | 462 | 472 |
| 4ஆம் காலாண்டு | 547 | 379 | 401 | 449 | 567 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்(ஆ)** | **3,501** | **3,961** | **2,907** | **3,385** | **3,321** |
| 1ஆம் காலாண்டு | 702 | 1,036 | 673 | 970 | 799 |
| 2ஆம் காலாண்டு | 807 | 903 | 756 | 762 | 952 |
| 3ஆம் காலாண்டு | 1,022 | 997 | 791 | 1,006 | 744 |
| 4ஆம் காலாண்டு | 970 | 1,025 | 687 | 647 | 826 |
| **வளமாக்கி** | **801** | **640** | **600** | **765** | **873** |
| 1ஆம் காலாண்டு | 131 | 129 | 61 | 202 | 163 |
| 2ஆம் காலாண்டு | 207 | 176 | 139 | 190 | 244 |
| 3ஆம் காலாண்டு | 266 | 226 | 187 | 95 | 189 |
| 4ஆம் காலாண்டு | 197 | 108 | 214 | 277 | 277 |


(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

ரீதியான உந்து ஊர்தி அனுமதிப்பத்திரம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டமை, குறிப்பாக 1000 சி.சி எந்திர இயலளவிற்கும் குறைவான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான வரிகள் குறைக்கப்பட்டமை மற்றும் யப்பானிய யென்னின் தேய்வு என்பன நீண்ட கால இறக்குமதிகளில் குறிப்பாக உந்து ஊர்திகளின் இறக்குமதியில் அதிகரிப்பு ஏற்படக் காரணமாகின. 2015இல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான குறிப்பிடத்தக்க உள்நாட்டுக் கேள்வி ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள் (38.0 சதவீதம்), தொடர்பூட்டல் கருவிகள் (60.3 சதவீதம்), மருந்துகள் மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் (20.8 சதவீதம்) மற்றும் வீட்டுஉபயோகப் பொருட்கள் (41.3 சதவீதம்) என்பன மீதான ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களில் பிரதிபலித்தது. மேலும், காய்கறிகள் மீதான இறக்குமதிச் செலவினம் 39.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பருப்பு வகை, வெங்காயம் மற்றும் பயற்று இனவகை காய்கறிகள் போன்ற முக்கிய வகைகளின் இறக்குமதிகளில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். அதேவேளை, இவ்வாண்டுப் பகுதியில் இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்புக்கள் கடலுணவு (53.4 சதவீதம்), எண்ணெய் மற்றும் கொழுப்பு (66.5 சதவீதம்), வாசனைத்திரவியங்கள் (15.4 சதவீதம்), பழவர்க்கங்கள் (30.5 சதவீதம்) மற்றும் குடிபானங்கள் (26.1 சதவீதம்) என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்டன. எனினும், அரிசி இறக்குமதி மீதான செலவினம் 2014இன் ஐ.அ.டொலர் 282 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 135 மில்லியனுக்கு வீழ்ச்சிடைந்தது. 2014 ஏப்பிறலிலிருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த அரிசி இறக்குமதிகள் 2015 மேயிலிருந்து வீழ்ச்சியடையத் தொடங்கியமைக்கு 2015 பெரும்போகம் மற்றும் சிறுபோகம் இரண்டிலும் அறுவடை செய்யப்பட்ட அபரிதமான நெல் அறுவடையின் காரணமாக உள்ளூர் சந்தையில் அரிசியின் நிரம்பல் பெருமளவில் காணப்பட்டமையின் விளைவாக இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்பட்டமையே காரணமாகும். மேலும், 2015இல் பாற்பண்ணை உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் 26.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதி அளவில் பெருமளவு அதிகரிப்புக் காணப்பட்ட போதும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தமையின் காரணமாக பால்மா இறக்குமதிகள் மீதான செலவினத்தில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.

**2015இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 4,567 மில்லியனுக்கு 10.0 சதவீதத்தினால் அதிகரித்து அனைத்துத் துணை வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது.** எனினும், இவ்வதிகரிப்பிற்கான பெரும் பங்களிப்பு போக்குவரத்துக் கருவிகளிலிருந்தும் அதைத் தொடர்ந்து பொறிகள் மற்றும் கருவிகளிலிருந்தும் கிடைத்தது. போக்குவரத்துக் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் 2015இல் ஐ.அ.டொலர் 931 மில்லியனுக்கு 31.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு குறிப்பாக, முச்சில்லு வண்டிகள், சரக்கு வண்டிகள், வர்த்தக ரீதியான வாடகை ஊர்திகள் மற்றும் வேளாண்மை உழுபொறிகள் போன்ற வீதிவழி ஊர்திகளின் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். பொறியியற்படுத்தல் கருவிகள், இலத்திரனியல் கருவிகள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் மற்றும் அலுவலகப் பொறிகள் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கிய பொறிகள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் 2015இல் ஐ.அ.டொலர் 2,278 மில்லியனுக்கு 6.9 சதவீதத்தினால் அதிகரித்தது. சிமெந்து, இரும்பு மற்றும் உருக்கு, அலுமினியப்

வரைபடம் 5.3 ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை




பொருட்கள் மற்றும் கனிப்பொருட்களை முக்கியமாக உள்ளடக்கிய கட்டடப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2015இல் ஐ.அ.டொலர் 1,352 மில்லியனுக்கு 3.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு பொருட்கள் மீதான செலவினம் முன்னைய ஆண்டினை விட 19.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தமையே காரணமாக அமைந்தது.

### 5.3.3 வர்த்தக நிலுவை

**2014இன் மூன்றாம் காலாண்டிலிருந்து விரிவடையத் தொடங்கிய வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2015இன் நடுக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதன் வளர்ச்சி உத்வேகத்தை மிதப்படுத்தி சிறிதளவு விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது.** ஏற்றுமதியில் காணப்பட்ட உயர்ந்த வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி மீதான செலவினத்தின் குறைப்பு குறைந்தளவில் காணப்பட்டமை 2015இல் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைய பங்களித்தது. இதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 2014இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,287 மில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 8,430 மில்லியனுக்கு 1.7 சதவீதத்தினால் சிறிதளவில் விரிவடைந்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2014இன் 10.4 சதவீதத்திலிருந்து 2015இல் 10.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


### 5.3.4 வர்த்தக மாற்று விகிதம்

**ஏற்றுமதி விலைகளின் மிதமான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், பெற்றோலியத்தினால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட இறக்குமதி விலைகளின் கணிசமான வீழ்ச்சியினால், 2015இல் வர்த்தக மாற்று விகிதம் 2.3 சதவீதத்தால் மேம்பட்டது.** இதற்கேற்ப, ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணின் 9.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி விலைச் சுட்டெண்ணின் 11.8 சதவீத வீழ்ச்சியை பிரதிபலித்தது.

**2015இல் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்து அனைத்து முக்கிய வகைகளினதும் விலைகள் வீழ்ச்சியடைந்தமையை பிரதிபலித்தன.** 2015இல் தேயிலை, இறப்பர் மற்றும் கடலுணவு என்பனவற்றின் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சேர்ந்து வேளாண்மை ஏற்றுமதிகளுடன் தொடர்பான ஏற்றுமதி விலைச் சுட்டெண் 4.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தேயிலையின் ஏற்றுமதி விலைச் சுட்டெண் 2015இல் 11.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ருஷியா மற்றும் மத்திய கிழக்கிலிருந்தான இலங்கைத் தேயிலைக்கான கேள்வி குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, இறப்பர் மற்றும் கடலுணவு என்பனவற்றின் சராசரி ஏற்றுமதி விலைச் சுட்டெண் முறையே 11.3 சதவீதத்தினாலும் 5.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. 2015இல் கைத்தொழில் உற்பத்திகளுடன் தொடர்பான ஏற்றுமதி விலைச் சுட்டெண் 10.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணில் பதிவுசெய்யப்பட்ட 50.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். எனினும், கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கருவிகள், மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி, அத்துடன் வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், சிறுவேளாண்மை உற்பத்திகள் மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பனவற்றின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் இவ்வாண்டில் அதிகரித்தன.

**2015இல் இறக்குமதி விலைச் சுட்டெண் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே வழிவகுத்தது.** இடைநிலைப் பொருட்களுடன் தொடர்புபட்ட இறக்குமதி விலைச் சுட்டெண் 2015இல் 19.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டில் நிலவிய தாழ்ந்த

வரைபடம் 5.4 வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்கள்



**அட்டவணை 5.5**

**வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

2010 = 100


| வகை | பெறுமதிச் சுட்டெண் 2014 | பெறுமதிச் சுட்டெண் 2015 (ஆ) | பெறுமதிச் சுட்டெண் ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | அளவுச் சுட்டெண் 2014 | அளவுச் சுட்டெண் 2015(ஆ) | அளவுச் சுட்டெண் ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | அலகு விலைச் சுட்டெண் 2014 | அலகு விலைச் சுட்டெண் 2015 (ஆ) | அலகு விலைச் சுட்டெண் ஆண்டுக்காண்டு மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **121.2** | **107.6** | **-11.2** | **103.2** | **95.6** | **-7.4** | **117.5** | **112.6** | **-4.1** |
| தேயிலை | 113.1 | 93.1 | -17.7 | 98.5 | 91.3 | -7.3 | 114.9 | 102.0 | -11.2 |
| இறப்பர் | 26.2 | 15.1 | -42.3 | 32.3 | 21.0 | -34.9 | 81.0 | 71.8 | -11.3 |
| தெங்கு | 215.1 | 212.3 | -1.3 | 170.7 | 159.4 | -6.6 | 126.0 | 133.2 | 5.7 |
| வாசனைப் பொருட்கள் | 127.7 | 182.2 | 42.7 | 85.8 | 118.3 | 37.8 | 148.8 | 154.0 | 3.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 231.4 | 224.6 | -2.9 | 232.2 | 205.3 | -11.6 | 99.7 | 109.4 | 9.7 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **135.6** | **130.9** | **-3.5** | **133.2** | **144.4** | **8.4** | **101.8** | **90.6** | **-10.9** |
| புடவைகளும் ஆடைகளும் | 147.0 | 143.7 | -2.2 | 128.2 | 126.4 | -1.4 | 114.7 | 113.7 | -0.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 128.4 | 142.1 | 10.6 | 92.6 | 208.6 | 125.4 | 138.7 | 68.1 | -50.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 159.8 | 136.7 | -14.5 | 108.1 | 96.9 | -10.4 | 147.9 | 141.1 | -4.6 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **245.4** | **117.2** | **-52.3** | **158.6** | **82.4** | **-48.1** | **154.7** | **142.2** | **-8.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **129.1** | **121.8** | **-5.6** | **122.3** | **128.0** | **4.6** | **105.5** | **95.2** | **-9.8** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **155.7** | **190.5** | **22.3** | **143.3** | **177.9** | **24.1** | **108.6** | **107.1** | **-1.4** |
| உணவும் குடிப்பானங்களும் | 123.5 | 123.1 | -0.4 | 125.8 | 128.1 | 1.9 | 98.2 | 96.0 | -2.2 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 192.7 | 268.0 | 39.1 | 163.5 | 235.0 | 43.7 | 117.9 | 114.0 | -3.2 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **141.6** | **119.8** | **-15.4** | **122.9** | **128.7** | **4.7** | **115.2** | **93.1** | **-19.2** |
| எரிபொருள் | 151.2 | 88.8 | -41.3 | 117.7 | 116.6 | -1.0 | 128.4 | 76.2 | -40.7 |
| வளமாக்கி | 113.4 | 120.6 | 6.3 | 112.6 | 129.5 | 15.1 | 100.8 | 93.1 | -7.6 |
| இரசாயன உற்பத்திகள் | 155.4 | 167.4 | 7.7 | 138.3 | 155.6 | 12.5 | 112.4 | 107.6 | -4.3 |
| கோதுமை மற்றும் சோளம் | 152.5 | 134.6 | -11.7 | 123.5 | 121.3 | -1.7 | 123.5 | 110.9 | -10.2 |
| புடைவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 128.7 | 126.9 | -1.3 | 115.8 | 120.4 | 4.0 | 111.1 | 105.4 | -5.2 |
| பிளாத்திக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவை | 143.7 | 145.5 | 1.2 | 131.1 | 142.6 | 8.8 | 109.6 | 102.0 | -6.9 |
| வைரங்கள் மற்றும் மதிப்புமிக்க உலோகங்கள் | 46.5 | 42.8 | -7.9 | 57.7 | 49.1 | -14.9 | 80.5 | 87.1 | 8.1 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **150.7** | **165.8** | **10.0** | **158.2** | **179.7** | **13.6** | **95.3** | **92.2** | **-3.2** |
| கட்டடப் பொருட்கள் | 159.3 | 164.5 | 3.3 | 153.0 | 167.8 | 9.7 | 104.1 | 98.1 | -5.8 |
| போக்குவரத்துக் கருவிகள் | 119.4 | 157.1 | 31.6 | 114.4 | 156.5 | 36.8 | 104.3 | 100.4 | -3.8 |
| பொறியும் கருவியும் | 159.3 | 170.3 | 6.9 | 180.7 | 197.3 | 9.2 | 88.2 | 86.3 | -2.1 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 147.9 | 178.4 | 20.6 | 162.2 | 184.6 | 13.8 | 91.2 | 96.7 | 6.0 |
| **மொத்த இறக்குமதிகள்** | **144.8** | **141.2** | **-2.5** | **134.0** | **148.2** | **10.6** | **108.1** | **95.3** | **-11.8** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **97.6** | **99.9** | **2.3** |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது


மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி.
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

உலகளாவிய எண்ணெய் விலைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் எரிபொருளின் சராசரி இறக்குமதி விலைச் சுட்டெண் 40.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். இதன்படி, எரிபொருளின் சராசரி இறக்குமதி விலைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 128.4 சுட்டெண் புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2015இல் 76.2 சுட்டெண் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்தது. வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்களின் இறக்குமதி விலைச் சுட்டெண்கள் தவிர்ந்த இடைநிலைப் பொருட்களிலுள்ள அனைத்து வகைகளினதும் இறக்குமதி விலைச் சுட்டெண்கள் 2015இல் வீழ்ச்சியடைந்தன. பொறிகள் மற்றும் கருவிகள், கட்டட மூலப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் 2015இல் 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டுச் சந்தையில் மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்துசெல்லும் விதத்தில் கட்டடப்பொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், ஐ.அ. டொலருக்கெதிராக யப்பானிய யென் 12.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்தமையும் போக்குவரத்துக் கருவிகளின் விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைவதற்குப் பங்களித்தது. அதேவேளை, உணவு மற்றும் குடிபானம் மற்றும் நீண்ட கால நுகர்வுப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி விலைச் சுட்டெண் முறையே 2.2 சதவீதத்தினாலும் 3.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து நுகர்வுப் பொருட்களுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைய வழிவகுத்தது.

**வரைபடம் 5.5 நாடுகளின்படி ஏற்றுமதிகள்**




**வரைபடம் 5.6 நாடுகளின்படி இறக்குமதிகள்**




### 5.3.5 வர்த்தகத்தின் போக்கு

**2015இல் மேற்கு நாடுகள் இலங்கையின் ஏற்றுமதிக்கான முக்கிய சேரிடங்களாக தொடர்ந்தும் இருந்த வேளையில் ஆசிய நாடுகள் இலங்கையின் இறக்குமதிக்கான ஆதிக்கத்தைக் கொண்டிருந்தன.** ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன பாரிய ஏற்றுமதி சேரிட நாடுகளாகத் தொடர்ந்தும் விளங்கிய வேளையில் இந்தியா அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கின. இந்தியா, சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்காவுடனான மொத்த வர்த்தகம் 2015இல் ஐ.அ.டொலர் 3 பில்லியனையும் விஞ்சி இலங்கையின் முன்னணி வர்த்தகப் பங்காளர்களாக அவற்றை மாற்றின. மேலும், ஐக்கிய இராச்சியம், யப்பான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சிங்கப்பூர் என்பன இலங்கையின் மற்றைய வர்த்தகப் பங்காளர்களாக விளங்கி 2015இல் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் கூடுதலான வர்த்தகத் தொகையைக் கொண்டிருந்தன. இந்தியா, சீனா, யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுடனான மொத்த வர்த்தகம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் அதிகரித்த வேளையில் ருஷியா, மத்திய கிழக்கிலுள்ள சில நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது.

**ஐக்கிய அமெரிக்கா இலங்கையிலிருந்தான பொருட்களின் முக்கிய வாங்குநராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகளின் பங்கு முன்னைய ஆண்டின் 25 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் ஏறத்தாழ 27 சதவீதத்திற்கு அதிகரித்தது.** 2015இல் ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 2,810 மில்லியனுக்கு 2.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 46.3 சதவீதமாக விளங்கும் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 2,108 மில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்து 2007இன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தினை விஞ்சின. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவு ஏற்றுமதிகள் கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்த போதும் ஐக்கிய இராச்சியம் 2015இல் இரண்டாவது பாரிய ஏற்றுமதி நாடாக தொடர்ந்தும் விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் 9.8 சதவீதத்திற்கு வகைகூறியது. 2015இல் ஐக்கிய இராச்சியத்திற்கான மொத்த ஏற்றுமதிகளில் முறையே 79.2 சதவீதத்திற்கும் 2.9 சதவீதத்திற்கும் வகைகூறிய ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் முக்கிய ஏற்றுமதி விடயங்களாகக் காணப்பட்டன. 2015இல் ஐக்கிய இராச்சியத்திற்கான மொத்த ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1,029 மில்லியனுக்கு 7.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு

ஆடை ஏற்றுமதிகளிலும் அதனைத் தொடர்ந்து இறப்பர் உற்பத்தி மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளிலும் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். 2015இல் மொத்த ஏற்றுமதிகளில் 6.1 சதவீதத்தினை உள்ளடக்கிய இந்தியாவிற்கான மொத்த ஏற்றுமதிகள் 2014இன் ஐ.அ.டொலர் 625 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 643 மில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வாசனைத்திரவியங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் விலங்குத்தீன் என்பனவற்றின் ஏற்றுமதிகளே பெருமளவிற்குத் தூண்டுதல்களாக விளங்கின. 2015இல் இலங்கையின் மூன்றாவது பெரும் ஏற்றுமதியாளரான இந்தியா வாசனைத்திரவியங்கள், சிறுவேளாண்மை உற்பத்திகள் மற்றும் விலங்குத்தீன் என்பனவற்றின் முக்கிய வாங்குநராக விளங்கிய வேளையில் இலங்கையிலிருந்தான ஏற்றுமதி செய்யப்பட்ட போக்குவரத்துக் கருவிகளின் இரண்டாவது பெரும் வாங்குநராகவும் விளங்கியது. இவ்வாண்டில் சீனா முக்கிய வாங்குநராக மாறியதுடன் முன்னைய ஆண்டின் பதின்மூன்றாவது நாடாகவிருந்த அதன் நிலையினை ஆறாவது மிகப் பெரிய நாடு என்ற நிலைக்கு உயர்த்திக் கொண்டமைக்கு போக்குவரத்துக் கருவிகள், ஆடைகள் மற்றும் தேயிலை ஏற்றுமதிகளில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியே காரணமாகும்.

**இந்தியா தொடர்ந்தும் இறக்குமதிகளில் மிகப் பெரிய மூலமாக விளங்கி 2015இன் மொத்த இறக்குமதிகளில் 23 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்தது.** 2015இல் இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவினம் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 4,268 மில்லியனுக்கு 6.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2015 சனவரியில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் உந்து ஊர்திகளின் மீது குறிப்பாக 1000 சி.சி இற்கும் குறைவான சிறிய ஊர்திகளுக்கான இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டதன் காரணமாக தனிப்பட்ட பயன்பாட்டிற்கும் முதலீட்டு நோக்கங்களுக்குமான உந்து ஊர்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. இதன்படி, 2015இல் இந்தியாவிலிருந்தான உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள் மற்றும் முச்சில்லு வண்டிகள் என்பனவற்றின் இறக்குமதிகள் முறையே 565.6 சதவீதத்தினாலும் 15.5 சதவீதத்தினாலும் 56.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், இந்தியாவிலிருந்தான மொத்த செலவினத்தின் மிகப் பெரிய பங்கினை உள்ளடக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிகள் 2015இல் 20.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த எண்ணெய் விலைகளின் தாக்கமே காரணமாகும். அதேவேளை இறக்குமதிகளில் ஏறத்தாழ 20 சதவீதத்திற்கு வகைகூறும் சீனாவிலிருந்தான இறக்குமதிகள் 2015இல் ஐ.அ.டொலர் 3,712 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அடிப்படை உலோகம், பொறி மற்றும் கருவிகள், கட்டட மூலப்பொருட்கள், வளமாக்கி, கடல் உணவு மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதிகளே வழிவகுத்தன. 2015இல் யப்பானிலிருந்தான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 1,389 மில்லியனுக்கு 47.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு முக்கியமாக தனிப்பட்ட பயன்பாடு மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்கான ஊர்திகளின் இறக்குமதிகளில் பதிவுசெய்யப்பட்ட பெருமளவு அதிகரிப்பும் யப்பானிய யென்னில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க தேய்வும் இலங்கையின் இறக்குமதித் தீர்வை அமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுமே காரணமாகும். 2012இலிருந்து இலங்கையின் ஐந்தாவது மிகப் பெரிய இறக்குமதியாளராக விளங்கிய யப்பான், ஐக்கிய அரபு எமிரேட்சையும் சிங்கப்பூரையும் விஞ்சி 2015இல் இலங்கையின் மூன்றாவது மிகப் பெரிய இறக்குமதியாளராக அதன் நிலையை உயர்த்திக் கொண்டது.

## 5.4 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

### 5.4.1 பணிகளிலுள்ள வர்த்தகம்

**பயணம், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைகளில் காணப்பட்ட திருப்திகரமான செயலாற்றத்தின் காரணமாக பணிகள் கணக்கு 2015இல் மிகையொன்றினைப் பதிவுசெய்தது.** கடல் மற்றும் துறைமுகத்துடன் தொடர்பான போக்குவரத்து நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான போக்கின் காரணமாக 2015இன் முதலரைப் பகுதியில் பணிகள் கணக்கு சிறிதளவான அதிகரிப்பினைப் பதிவுசெய்த போதும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் பணிகளின் ஏற்றுமதியில் பதிவுசெய்யப்பட்ட விரைவடைந்த வளர்ச்சி பணிகள் கணக்கில் ஒட்டுமொத்த மிகையினைத் தோற்றுவித்து 2014 உடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 2,325 மில்லியனுக்கு 23.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

### போக்குவரத்துப் பணிகள்

**2015இல் பணிகள் கணக்கின் விரிவாக்கத்திற்கு போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்ந்தும் ஆதரவளித்தன.** ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக கடல் மற்றும் வான் சரக்கு போக்குவரத்தில் மெதுவான தன்மைகள் காணப்பட்டமைக்கிடையிலும் பயணிகள் கட்டணங்கள், வான் சரக்குக் கட்டணங்கள், துறைமுகம் மற்றும் வானூர்திநிலையத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளின் பேரிலான உட்பாய்ச்சல் 2015இல் 9.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டியது. அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின்

**அட்டவணை 5.6 நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2014 (அ) | | | 2015 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **16,735** | **23,142** | **-6,407** | **16,902** | **23,006** | **-6,105** |
| **பொருட்கள்** | **11,130** | **19,417** | **-8,287** | **10,505** | **18,935** | **-8,430** |
| பொது வணிகம் | 11,130 | 19,405 | -8,275 | 10,505 | 18,892 | -8,387 |
| நாணயமல்லா தங்கம் | - | 12 | -12 | - | 42 | -42 |
| **பணிகள்** | **5,605** | **3,725** | **1,880** | **6,397** | **4,072** | **2,325** |
| போக்குவரத்து | 1,923 | 1,462 | 462 | 2,105 | 1,579 | 526 |
| கடல்வழி போக்குவரத்து | 969 | 722 | 246 | 997 | 762 | 234 |
| சரக்குத் தொகுதி | 969 | 722 | 246 | 997 | 762 | 234 |
| வான்வெளி போக்குவரத்து | 954 | 739 | 215 | 1,108 | 816 | 292 |
| பயணிகள் | 847 | 659 | 188 | 997 | 732 | 266 |
| சரக்குத் தொகுதி | 108 | 80 | 27 | 111 | 85 | 26 |
| பயணம் (இ) | 2,431 | 1,263 | 1,169 | 2,981 | 1,420 | 1,561 |
| கட்டுமானம் | 58 | 29 | 29 | 60 | 30 | 30 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 115 | 90 | 26 | 119 | 92 | 27 |
| நிதியியல் பணிகள் | 256 | 350 | -94 | 254 | 380 | -126 |
| தொலைதொடர்பு, மற்றும் கணனி பணிகள் | 748 | 398 | 350 | 805 | 429 | 375 |
| தொலைத்தொடர்புகள் | 120 | 98 | 22 | 128 | 102 | 26 |
| கணனி பணிகள் | 628 | 300 | 328 | 677 | 327 | 349 |
| ஏனைய வியாபார பணிகள் | 43 | 58 | -16 | 42 | 63 | -21 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் (என்.ஐ.இ) | 31 | 77 | -45 | 31 | 79 | -48 |
| **முதலாந்தர வருமானம்** | **155** | **1,963** | **-1,808** | **127** | **2,224** | **-2,097** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 19 | 68 | -50 | 19 | 83 | -63 |
| முதலீட்டு வருமானம் | 137 | 1,895 | -1,758 | 108 | 2,142 | -2,034 |
| நேரடி முதலீடு | 17 | 670 | -653 | 17 | 811 | -794 |
| பங்குலாபம் | 17 | 289 | -273 | 17 | 469 | -453 |
| மீள் முதலீடப்பட்ட வருவாய்கள் | - | 380 | -380 | - | 341 | -341 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 828 | -828 | - | 868 | -868 |
| பங்கு மூலதனம் | - | 69 | -69 | - | 108 | -108 |
| வட்டி | - | 758 | -758 | - | 760 | -760 |
| குறுங்காலம் | - | 61 | -61 | - | 27 | -27 |
| நீண்டகாலம் | - | 697 | -697 | - | 734 | -734 |
| ஏனைய முதலீடு | 18 | 398 | -379 | 25 | 463 | -438 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 102 | - | 102 | 66 | - | 66 |
| **இரண்டாந்தர வருமானம்** | **7,046** | **819** | **6,227** | **7,007** | **814** | **6,193** |
| அரசாங்கம் | 28 | - | 28 | 27 | - | 27 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 7,018 | 819 | 6,199 | 6,980 | 814 | 6,167 |
| **நடைமுறை கணக்கு** | **23,936** | **25,924** | **-1,988** | **24,036** | **26,044** | **-2,009** |
| **மூலதன கணக்கு** | **73** | **15** | **58** | **71** | **24** | **46** |
| மூலதன மாற்றல்கள் | 73 | 15 | 58 | 71 | 24 | 46 |
| அரசாங்கம் | 52 | - | 52 | 50 | - | 50 |
| கூட்டுத்தாபன மற்றும் வீட்டுத்துறை | 21 | 15 | 6 | 21 | 24 | -3 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு** | **24,009** | **25,938** | **-1,929** | **24,107** | **26,069** | **-1,962** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் போக்குவரத்து பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வருகையுடன் இசைந்து காணப்பட்ட வான் பயணிகள் போக்குவரத்து பணிகளிலிருந்தான உட்பாய்ச்சல்கள் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. மேலும் புதிதாகக் கட்டப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுகத்திலுள்ள கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி 2015இல் முழு அளவில் தொழிற்பட்டதன் காரணமாக மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் கொள்கலன் கையாளல் இவ்வாண்டு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக்காட்டியது. அதேவேளை, 2015இல் போக்குவரத்துப் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 1,579 மில்லியனுக்கு 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த துறைமுகம் மற்றும் வானூர்திநிலையத்துடன் தொடர்பான கொடுப்பனவுகள் குறிப்பாக, பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்த கப்பற் சரக்கு மீதான உயர்ந்த செலவிடல்களே பெருமளவிற்குக் காரணமாகும். இதன் விளைவாக 2015இல் போக்குவரத்துத் துறைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 462 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 526 மில்லியனாக விளங்கியது.

**2015இல் பயணிகள் கட்டணங்களின் பேரிலான உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டிலும் பார்க்க 17.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 997 மில்லியனுக்கு அதிகரித்தன.** இதற்கு, இவ்வாண்டுப் பகுதியில் வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பும் மற்றைய உலகளாவிய வான் நிறுவனங்களினால் வான் கட்டணங்கள் உயர்த்தப்பட்டமையினைத் தொடர்ந்து சிறிலங்கன் எயார்லையின்சும் வான் கட்டணங்களை மேல் நோக்கித் திருத்தியமையும் பக்கபலமாக அமைந்தன. அதேவேளை, சிறிலங்கன் எயார்லையின்ஸ் 2015இல் ஐந்து வானூர்திகளை மாற்றியதைத் தொடர்ந்து அதன் தொழிற்பாட்டு வினைத்திறனை மேலும் அதிகரிப்பதற்காக 2016இல் மூன்று புதிய வானூர்திகளைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடுகிறது. தொழிற்பாட்டு வினைத்திறனில் ஏற்படுகின்ற இம்முன்னேற்றம் சிறிலங்கன் எயார்லையின்ஸின் பறப்பு சேரிடங்களின் விரிவாக்கம் மற்றும் அது தொழிற்படுத்துகின்ற பறப்புக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றுடன் சேர்ந்து நடுத்தர காலத்தில் பயணிகள் கட்டணங்களின் பேரிலான பெறுகைகளில் உறுதியான வளர்ச்சியொன்றைத் தோற்றுவிக்கும்.

**சரக்குக் கட்டணம் மற்றும் துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் குறைவடைந்த உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளுடன் சேர்ந்து 2015இல் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன.** ஆண்டுக் காலப்பகுதியில் உலகளாவிய வர்த்தக அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இலங்கை துறைமுகத்துடன் தொடர்பான பணிகளின் அளவுகளில் வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது. எனினும், புதிதாகக் கட்டப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுகம் முழு அளவில் தொழிற்பட்டதனைத் தொடர்ந்து, இது கொழும்பு துறைமுகத்திற்கு வருகைதரும் கப்பல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பினைத் தோற்றுவித்ததன் மூலம் மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் கொள்கலன் கையாளல் மற்றும் நீர்க்கல எரிபொருள் பணிகள் உட்பட துறைமுகத்துடன் தொடர்பான பணிகள் மேம்பட்டன.


## பயணம் மற்றும் சுற்றுலா

**இலங்கை சுற்றுலாத் தொழில்துறை, மோதலுக்குப் பின்னரான பொருளாதாரத்தில் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் தொழில்துறைகளிலொன்றாக மாற்றமடைந்து வருவதுடன் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் பெருமளவான வெற்றிகளையும் எய்தியிருக்கிறது.** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1,798,380 வருகைகளைப் பதிவுசெய்து இவ்வாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட திருத்தப்பட்ட இலக்கான 1.8 மில்லியன் வருகைகளை அடைந்தது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டு சுற்றுலாத் தொழில்துறையின் முதலீடுகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, சுற்றுலாவுடன் தொடர்பான உட்கட்டமைப்பின் அபிவிருத்தி, புதிய சுற்றுலாப் பயணிகளுக்காக வசீகரமிக்க அம்சங்களை அறிமுகப்படுத்தியமை மற்றும் தனியார் துறையினாலும் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட உபாயம் மிக்க ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் என்பன இவ்வெற்றியை அடைய உதவியது.

**கிழக்கு ஐரோப்பா தவிர்ந்த மற்றைய அனைத்து முக்கிய பிராந்தியங்களிலுமிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2015இல் அதிகரித்தன.** மேற்கு ஐரோப்பா இலங்கைக்கான மிகப் பெரிய சுற்றுலா பிராந்தியமாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் இப்பிராந்தியத்திலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் எண்ணிக்கை 552,442 இற்கு 15.3 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 2012 இலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக மொத்த வருகைகளின் பங்காக மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை 2012இன் 37.1 சதவீதத்திலிருந்து 2015இல் 30.7 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்து பாரம்பரியமற்ற மூலங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலித்தது. கிழக்காசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் பங்கு 2010 இலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்தமைக்கு, வரவேற்கத்தக்க வளர்ச்சி வீதமொன்றுடன் சீனா இப்பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்தியமையே முக்கிய காரணமாகும். தனிப்பட்ட நாடுகளின் அடிப்படையிலான நியதிகளில் 2015இல் இந்தியா 316,247 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் சுற்றுலா மூலத்தில் முன்னணி நாடாகத் தொடர்ந்தும் விளங்கிய வேளையில், சீனா ஐக்கிய இராச்சியத்தினை விஞ்சி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியதுடன் அதனைத் தொடர்ந்து ஜேர்மனி, மாலைதீவு மற்றும் பிரான்ஸ் என்பன காணப்பட்டன. ஆறு நாடுகளும் ஒன்றுசேர்ந்து 2015இல் இலங்கைக்கான சுற்றுலாப் பயணங்களில் 54.8 சதவீதத்திற்கு வகைகூறின. சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை 214,783 ஆக விளங்கி 67.6 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் அதனைத் தொடர்ந்து நெதர்லாந்தும் டென்மார்க்கும் விளங்கி முறையே 32,742 வருகைகளையும் 15,203 வருகைகளையும் கொண்டிருந்து 35.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2015இல் வருகைக்கான நோக்கத்தின் நியதிகளில் சுற்றுலாப் பயணிகளில் ஏறத்தாழ 67 சதவீதமானோர் விடுமுறையைக் கழிப்பதற்காக வந்திருந்தவர்களாவர். வியாபார நோக்கங்களுக்காக வருகைதந்த சுற்றுலாப் பயணிகள் 1 சதவீதம் கொண்ட குறைந்த அளவினைப் பதிவுசெய்த வேளையில் நண்பர்கள் உறவினர்களைப் பார்ப்பதற்காகவும் சமயம் மற்றும் கலாச்சார நோக்கங்களுக்காகவும் நலம், கல்வி மற்றும் விளையாட்டு போன்ற நோக்கங்களுக்காக வருகைதந்தோரின் பங்கு 2015இல் ஏறத்தாழ 32 சதவீதமாகக் காணப்பட்டது.

**2015இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, பணிகள் கணக்குத் தொடர்ந்தும் உயர்வாக இருந்தமைக்கு உதவியளித்தது.** 2015இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2014இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,431 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,981 மில்லியனுக்கு 22.6 சதவீதத்தினால் அதிகரித்தன. சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு சுற்றுலாப் பயணிகளின்

**வரைபடம் 5.7** நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2015




**வரைபடம் 5.8** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்




## சிறப்புக்குறிப்பு 9 — சுற்றுலாக் கைத்தொழில்: வாய்ப்புக்களும் சவால்களும்

இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழில் பல பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியிலும் மோதலுக்குப் பின்னராக பொருளாதாரத்தின் மிகப் பெரியதும் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் துறைகளுள் ஒன்றாக வருவதற்கு விரைந்த விரிவாக்கத்தையும் பன்முகப்படுத்தலையும் அனுபவித்து வருகிறது. இலங்கைக்கான சுற்றுலா வருகைகள் 2009இன் 448,000 இலிருந்து 2015இல் 1.8 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. சுற்றுலாவிலிருந்தான வருகைகளும் 2009இன் ஐ.அ.டொலர் 349 மில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 2,981 மில்லியனுக்கு பெருமளவில் அதிகரித்து நாட்டின் மூன்றாவது மிகப்பெரிய வெளிநாட்டு செலாவணி உழைப்பாளராக வந்து தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருமானத்தை விட மட்டுமே குறைந்து காணப்பட்டது.

இந்தியாவிலிருந்தான வருகைகள் கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தியிருக்கையில் சீனா ஐக்கிய இராச்சியத்தை மிஞ்சி இரண்டாவதாக வந்ததுடன் ஜேர்மனி மற்றும் மாலைதீவிலிருந்தான வருகைகளும் 2015இல் அவற்றின் இருப்பை ஏற்படுத்தின. இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழில் லோன்லி பிளனற் சஞ்சிகை, பிரான்சிஸ்கொண்டி நாஸ்ற் சஞ்சிகை, போப்ஸ் சஞ்சிகை மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் சண்டே ரைம்ஸ் போன்ற உலகில் பிரபல்யமான ஊடக நிறுவனங்களிலிருந்து அதிகரித்த விருதுகளைப் பெற்று வருகிறது.

வரைபடம் B 9.1 சுற்றுலா வளர்ச்சியின் போக்கு 1970 இலிருந்து 2014 வரை




### வளர்ச்சி உத்வேகம்

இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சியடைவதற்கான அளவிடமுடியாத உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளது. கீழே தரப்பட்ட அட்டவணையின் படி, இலங்கை உலகின் மொத்த சுற்றுலா வருவாய்களில் 0.2 சதவீதத்தையும் கொண்டுள்ளது. எனவே, இலங்கை தற்போது உலகச் சுற்றுலாவின் ஒரு சிறு பகுதியை பிடித்துள்ளதால் முன்னால் பாரிய உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது.

உலகப் பயணம் மற்றும் சுற்றுலா சபையால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, இலங்கையின் பயண மற்றும் சுற்றுலாத்துறையால் மொ.உ.உற்பத்தி மற்றும் தொழில்நிலைக்குச் செய்யப்பட்ட நேரடி மற்றும் தொழில்நிலை இரண்டுக்கும் பயண மற்றும் சுற்றுலாவின் நேரடி மற்றும் மொத்த பங்களிப்பு[1] மாலைதீவு, கம்போடியா, தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற பிராந்திய போட்டியாளர்களைவிட ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாகும்.

அட்டவணை B 9.1 2014இல் தெரிவுசெய்யப்பட்ட நாடுகளிலிருந்தான சுற்றுவாப் பயணிகளின் வருகைகள் மற்றும் வருவாய்கள்

| நாடு / பிராந்தியம் | 2014இல் வருகைத் தந்தவர்களின் எண்ணிக்கை ('000) | சந்தைப் பங்கு (%) | 2014இல் சுற்றுலாவில் இருருந்தான வருவாய்கள் (ஐ.அ.டொ.மில்லியன்) | சந்தைப் பங்கு % |
|---|---|---|---|---|
| உலகம் | 1,133,000 | 100.00 | 1,245,000 | 100.00 |
| இதில் ஆசிய மற்றும் பசுபிக் | 263,305 | 23.24 | 376,815 | 30.27 |
| ஹொங்கொங் | 27,770 | 2.45 | 38,376 | 3.08 |
| சிங்கப்பூர் | 11,858 | 1.05 | 19,203 | 1.54 |
| இந்தியா | 7,703 | 0.68 | 19,700 | 1.58 |
| மாலைத்தீவு | 1,205 | 0.11 | 2,661 | 0.21 |
| **இலங்கை** | **1,527** | **0.13** | **2,431** | **0.20** |

மூலம்: உலக சுற்றுலா ஒழுங்கமைப்பு

மரபு ரீதியாக, இயற்கை அழகு, சுகமான காலநிலை, வரலாற்று ரீதியான மற்றும் கலாசாரப் பரம்பரைச் சொத்து மற்றும் சமய பல்வகை இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சி உள்ளார்ந்த வளங்களின் முக்கிய துறைகளாக கருதப்படுகிறது. மேலும் சுற்றுலாவின் வெற்றி நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஆபத்தின்மையில் பெருமளவில் தங்கியுள்ளது. தற்போது இலங்கை எந்த விதமான பயங்கரவாத அச்சுறுத்தலின்றி உலகிலுள்ள ஒருசில சுற்றுலா சேருமிடங்களிடையே காணப்படுகிறது.

1. உலக பயண மற்றும் சுற்றுலாச் சபையின்படி, மொ.உ.உற்பத்திக்கான பயண மற்றும் சுற்றுலாவின் நேரடிப் பங்களிப்பு வியாபார மற்றும் சுற்றுலா நோக்கங்கள் தொடர்பாக வதிவோர் மற்றும் வதியாதோரால் பயணம் மற்றும் சுற்றுலா மீது குறிப்பிட்ட நாட்டினுள் மேற்கொள்ளப்பட்ட செலவிடலையும் அதுபோல் நூதனசாலை, தேசிய பூங்காக்கள், சுற்றுலா விடுதிகள், வான் நிறுவனங்கள், விமான நிலையங்கள், பயண முகவர்கள் மற்றும் பொழுதுபோக்கு மற்றும் களியாட்டப் பணிகள் போன்றவற்றுடன் விருந்தினர்களை நேரடியாக இணைக்கும் பயண மற்றும் சுற்றுலாப் பணிகள் மீது அரசால் மேற்கொள்ளப்பட்ட செலவிடலையும் பிரதிபலிக்கிறது. மொ.உ.உற்பத்திக்கு பயணம் மற்றும் சுற்றுலாவின் மொத்த பங்களிப்பு பொருளாதாரத்தின் மீதான அதன் பரந்த தாக்கங்களையும் (அதாவது மறைமுகமான மற்றும் தூண்டப்பட்ட தாக்கங்கள்) உள்ளடக்குகிறது. அத்துடன் இலங்கை 1,500 கிலோ மீற்றர் கரையோரத்துடன் ஆசிர்வதிக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவரை இதன் உண்மையான உள்ளார்ந்த வளத்தை அடைவதற்கு இது பயன்படுத்தப்படவில்லை. எனவே, இலங்கை .... (கூட்டங்கள், ஊக்குவிப்புகள், மாநாடுகள் மற்றும் நிகழ்ச்சி) சுற்றுலா, நலச் சுற்றுலா, சூழல் சிநேகபூர்வமான சுற்றுலா, புதியவற்றைக் கண்டுபிடிக்கும் சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, வேளாண்

1. உலக போக்குவரத்து மற்றும் சுற்றுலா சபையின்படி வியாபாரம் மற்றும் ஓய்வுநேர நோக்கங்களுக்காக வதிவுள்ளோர் மற்றும் வதியாதோர் என்போரினால் மேற்கொள்ளப்படும் செலவினம் அதேபோன்று நூதனசாலை, தேசிய பூங்காக்கள், உணவகங்கள், விமானம், விமானநிலையம், போக்குவரத்து முகவர்கள் மற்றும் ஓய்வுநேர மற்றும் மீள்உருவாக்கள் சேவைகள் போன்றன சுற்றுலா சேவையுடன் நேரடியாக தொடர்புடையவையாக ஒள்ளதுடன் போக்குவரத்து மற்றும் சுற்றுலா தொடர்பில் குறிப்பிட்டதொரு நாட்டில் இடம்பெற்ற செலவினத்தை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான போக்குவரத்து மற்றும் சுற்றுலாவின் நேரடியாக பங்களிப்பை வெளிப்படுத்துகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பயணம் மற்றும் சுற்றுலாத்துறையின் பங்களிப்பானது பொருளாதாரம் மீதான அதனது 'பரந்த தாக்கங்கள்' (நேரடி மற்றும் தூண்டப்பட்ட தாக்கங்கள்) உள்ளடக்குகின்றது.

சுற்றுலா, உல்லாசமான கப்பற் பிரயாணம் மற்றும் ஆழ்கடல் சுற்றுலா, கிராமிய மற்றும் நகரச் சுற்றுலா மற்றும் களியாட்டச் சுற்றுலா போன்ற சுற்றுலாவின் முன்பு அறியப்படாத மிகச் சிறிய பிரிவுகளில் உயர் உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது.

சுற்றுலாவின் முன்பு அறியப்படாத இச்சிறு பிரிவுகளின் உள்ளார்ந்த வளத்தை அடையும் பொருட்டு தேசிய பரம்பரைச் சொத்து மற்றும் சூழலைப் பாதுகாக்கும் அதே வேளையில் பொருளாரத்தின் அனைத்துத் துறைகளை உள்ளடக்கும் அமைப்பு ரீதியிலான உருமாற்றத்துக்கு மேலதிகமாக மிகப்பெரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களிலிருந்து பாரிய அதிகரிப்பு தேவைப்படுகிறது. ஊக்கப்படுத்தும் விதத்தில் அரசின் உத்தேசிக்கப்பட்ட மேல்மாகாண பாரிய அபிவிருத்திப் பிரதான திட்டம் 2016இல் வெளியிடப்பட்டதுடன் 2016 இற்கான அரசின் வரவு செலவுத்திட்டம் புதிய உள்ளார்ந்தவளம் மிக்க துறைகளிலான நேரடிக் கவனத்துடன் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கான முன்மொழிவுகளை உள்ளடக்கியுள்ளது.

### சுற்றுலாக் கைத்தொழிலால் முகம்கொடுக்கப்படும் சவால்கள்

- பொருளாதாரத்தில் எந்தவொரு வளர்ச்சியடைந்து வரும் கைத்தொழிலும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதுடன் இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழிலும் இதற்கு விதிவிலக்கல்ல. பின்வருவன இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் நிபுணர்களால் இனங்காணப்பட்ட முக்கிய சவால்களாகும்.

- எதிர்பார்க்கப்படும் சுற்றுலா வளர்ச்சி தொடர்பாக சுற்றுலா விடுதி அறைகளின் போதுமானதற்ற தன்மை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின்படி, 2016 இல் 202 மில்லியனுக்கும் கூடுதலான சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர். அத்தகைய உயர் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிட்டத்தட்ட 40,000 இலிருந்து 50,000 வரையான அறைகள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2015 இறுதியில் சுற்றுலா விடுதிகள் மற்றும் துணை நிறுவனங்கள் இரண்டிலும் கிட்டத்தட்ட 30,000 அறைகள் மட்டுமே காணப்படுகிறது. 2016இல் 6,000 இற்கும் கூடுதலான சுற்றுலா விடுதி அறைகள் கூட்டப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் வசதிகளை அதிகரிப்பதற்கு பல புதிய சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எனினும் சுற்றுலா விடுதி அறைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை நோக்கி கவனம் செலுத்தப்படாவிடில் இது வளர்ச்சியடைந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு ஓரளவு மட்டுமே போதுமானதாகும்.

- தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் தேவைப்பாடு மற்றும் தொழிலாளர் குடிப்பெயர்வு: விருந்தோம்பல் கைத்தொழிலில் பயிற்றுவிக்கப்பட்ட பல எண்ணிக்கையான இலங்கை மனிதவலு உயர் கூலிகளுக்காக ஏனைய நாடுகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளனர். சுற்றுலாக் கைத்தொழிலுக்கான கிரமமான மனித வலு வழங்கலும் இக்கைத்தொழிலின் உயர் உள்ளாந்ர வளத்துக்கு பணியாற்ற போதுமாதல்ல. இரசால் மட்டும் தேவையான பயிற்சியை வழங்க முடியாததால் தினயார் துறையுடனான பங்குடமை சுற்றுலாக் கைத்தொழிலில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் வளர்ந்து வரும் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமாகிறது.

- இலங்கையின் அநேகமான பிரசித்தி பெற்ற சுற்றுலாபகுதிச் சந்திலியால் போதுமானதற்ற ஆர்வம் மற்றும் கொழும்பு சுற்றுலாவிடுதிகளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்குறைந்த வீதம் இலங்கையிலுள்ள உலக சுற்றுலாச் சங்கிலியால் காட்டப்பட்ட அன்மைய ஆர்வத்துக்கு மத்தியிலும், பல முன்னணி சுற்றுலா விடுதிச் சங்கிலிகள் இலங்கைக்கு அவற்றின் வியாபாரத்தை இதுவரை விரிவுபடுத்தவில்லை. போப் சஞ்சிகையால் பெயரிடப்பட்ட முதல் பத்து பன்னாட்டு சொகுசு சுற்றுலாவிடுதி வியாபார அடையாளங்களின்படி மூன்று மட்டுமே இலங்கையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை கோழும்பிலுள்ள நட்சத்திர சுற்றுலாவிடுதிகளில் அரசால் விதிக்கப்பட்ட ஆகக்குறைந்த வீதத்தின் சாதகங்கள் மற்றும் பாதகங்களும் வளர்ச்சியடைந்து வரும் இக்கைத்தொழிலின் பின்னணியில் கடுமையாகப் பரிசீலிக்கவேண்டும்.

- உயர்ந்தளவில், நடுத்தர அளவில் மற்றும் குறைந்த மட்டத்தில் செலவழிக்கும் சுற்றுலாப்பயணிகளை இலக்கிடும் சுற்றுலா உபாயத்தில் கவனம் செலுத்தல், இலங்கை சார்புரிதியில் குறைந்த பணத்துக்கான பெறுமதி சேருமிடமாக கருதப்பட்ட போதிலும் இலங்கைக்கு உயர்ந்தளவில் செலவு செய்யும் சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்கு பலவழிகளில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. கூடியளவுக்கு உயர்ந்தளவில் செலவு செய்யும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்தல், தற்போது ஐ.அ.டொலர் 164 ஆக விளங்கும் சுற்றுலாப் பயணி ஒருவருக்கான பெறுகையை அதிகரிக்க உதவும். இதேவேளை, உயர்ந்தளவில் செயலிடுவோரில் மட்டும் விசேட கலனம் செலுத்துவது கைத்தொழின் பலவீனத்தை அதிகரிக்கும் என்பதால் இலங்கை போன்ற நாடு அனைத்துவகை சுற்றுலாப் பயணிகளையும் கவர்வதை நோக்கி கொள்கை வழிமுறைகளை நெறிப்படுத்துவது பாதுகாப்பானதாகும்.

- முறைசாராத் துறையை உள்வாங்கல்: சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசார்துறை உயர்ந்தளவில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதற்கு மத்தியிலும் இக்கைத்தொழிலினுள் குறிப்பிடத்தக்களவு முறைசார்ந்த துறை தொழிற்படுகிறது. எனவே, முறைசார்ந்த துறையினுள் பிந்தியதை உள்வாங்குவதற்கு கவனம் செலுத்துவதன் மூலம் உரிய ஒழுங்குவிதியை இயலச் செய்கிறது. முறைசாராத்துறை சுற்றுலா தொடர்பாக பாதுகாப்பு மற்றும் நீதிநெறியை முன்னேற்ற வேண்டியிருப்பதால், இதைச் செய்யத் தவறின் நாட்டின் சாதகமான நற்பெயரை குறைவடையச் செய்யும். மேலும், முறைசாராத்துறை தொடர்பான நம்பத்தகுந்த தரவு இல்லாமையும் கைத்தொழில் தொடர்பான திட்டமிடல் சம்பந்தமாக பிரச்சினைகளையும் உருவாக்கும்.

- **பாரிய உள்ளார்ந்த வளத்தைக்கொண்டுள்ள சீனாவிலிருந்தான வளர்ச்சியடைந்துவரும் சுற்றுலா வருகைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றல்: சுற்றுலாக் கைத்தொழிலான தற்போதைய அபிவிருத்திகள் வளர்ச்சியடைந்துவரும் சீன சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதில் புதிய சவால்களை உருவாக்கியுள்ளது. இங்கு அர்ப்பணிக்கப்பட்ட சீன மொழியிலான தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசை மற்றும் சீன மொழி பேசும் சுற்றுலா வழிகாட்டிகள் போன்றவை தேவைப்படுகிறது.**

- இரவுகளின் எண்ணிக்கையான கணிக்கப்படும் அறைகளிலான சராசரி தங்கும் வீதம் கடந்த ஆண்டுகளாக 10 விருந்தினர் இரவுகளாக நிலையில் காணப்பட்டது. இது பெரும்பாலும் இலங்கையில் சுற்றுலாச் செயற்பாடுகளின் கிடைப்பனவை பன்முகப்படுத்துவதற்கான கொள்கை முன்னெடுப்பு தேவைப்படுகிறது. இங்கு, ஆகக் குறைந்தது இரண்டு வாரங்கள் கொண்ட சராசரி விருந்தினர் இரவுகளை இலக்கிடும் பொருட்டு ஆள்கடல் மற்றும் ஆடம்பர கப்பல் பயணச் சுற்றுலா,

பொழுதுபோக்குச் சுற்றுலா மற்றும் களியாட்டச் சுற்றலா போன்ற சுற்றுலாக் கைத்தொழிலின் பின்தங்கிய துறைகளை நோக்கி கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். இலங்கையை தெற்காசியாவில் ஏற்பாடுகள், நிதி, வர்த்தகம் மற்றும் அறிவில் மத்திய மையமாக அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிகளுடன் இலங்கைக்கு பொதுவாக குறைந்த உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட சராசரி தங்கும் காலத்தைக் கொண்டுள்ள வியாபார சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அவர்களின் வருகையின் நோக்கத்தின்படி அவர்களைக் கவனிப்பதற்கு வெவ்வேறான உபாயங்கள் தேவைக்கபடுகின்றன.

- புதியவற்றைக் கண்டுபிடிப்பதற்கான அணுகுமுறைக்கான தேவை முக்கிய சுற்றுலா மையங்கள் மற்றும் பிரதான போக்குவரத்து மையங்களில் பல்நோக்குடைய சுற்றலா தகவல் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தேவை காணப்படுகிறது. இது தகவலை மட்டுமன்றி பேருந்து, தொடர்ந்து, வாடகை வண்டி மற்றும் சுற்றுலாப் பதிவுகள், செல்லிட இணைப்புகள், வை-பை சுற்றுலா திட்டதிடல் போன்ற விரிவான பணிகளை வழங்குகிறது. உயர் வேகத்தையுடைய இணையத்துடன் முழுநாட்டையும் உள்ளடக்கும் விதத்தில் கூகிள் லூன் செயற்றிட்டம் போன்ற புதியவற்றைக் கண்டுபிடிக்கும் செயற்றிட்டங்களூடாக செல்லிட மற்றும் இணைய பரப்பெல்லையை அதிகரிக்கிறது. இது இணைப்பு மற்றும் குறிப்பாக சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பை அதிகரிக்கும். "சுற்றுலா அனுமதி" மற்றும் காட்சி வழித்தடங்களில் சிறப்புச் சுற்றுலா தொடருந்து மற்றும் பேருந்து, விநோதமான புகையிரத வழித்தடங்கல்கள் கேபிள்கார், உயர் தரத்திலான குதூகலமான பூங்காக்கள், உள்நாட்டு ஆடம்பர கப்பல் பயணம் மற்றும் படகோட்ட சேவைகள் போன்ற பயண அட்டை வசதிகளுடனான உரிய சுற்றுலாப்பயணி சிநேகபூர்வமான போக்குவரத்துப் பணியும் கூடிய சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான முக்கிய துறைகளாக விளங்கின.
- மேலும், தனியார்துறையுடன் சேர்ந்து சுற்றுலா சார்ந்த அரச நிறுவனங்கள் உள்ளிட்ட சுற்றுலாக் கைத்தொழிலின் அனைத்து ஆர்வலரை மேற்பார்வை செய்வதற்கு உயர் மட்டத்திலான அரச நிறுவனம் வேைப்படுகிறது. இதன் மூலம் உயர் மட்ட உபாயங்களை கூடிய இசைவுடன் நடைமுறைப்படுத்துவதை அனுமதிக்கிறது. இத்துடன், சிறந்த வீதிப பாதுகாப்பு மற்றும உபசாரத்துக்கான சமூக உருமாற்றம், உரிய கழிவகற்றல் பழக்கவழக்கங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த மனப்பாங்கு மற்றும் சுற்றுலாப்பயணிகளை நோக்கிய கலாச்சார ஒப்புதலளிப்பு சுற்றுலாச் கைத்தொழிலின் வளர்ச்சி மற்றும் நீடித்து நிலைத்திருத்தலையும் இறுதியாக முழுச் சமுதாயத்துக்கும் மறைமுகமாக உதவும்.
- தற்போதுள்ள சவால்களுக்கு முகம் கொடுக்கவும் புதிய அபிவிருத்திகளை ஆரம்பிக்கும் பொருட்டும் 2016 இற்கான அரசின் வரவு செலவுத்திட்டம் சுற்றுலாக் கைத்தொழில் சம்பந்தமான பல முன்மொழிவுகளை இனங்கண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2035 அளவில் சுற்றுலா வருகைகளை 4.5 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கு மேல் மாகாணத்தை உயர்ந்தளவில் செலவழிக்கும் சுற்றுலா முடிவிடமாக முன்னேற்றுவதற்கும் அரசின் புதிய மேல்மாகாணத்துக்குரிய பாரிய பிரதான திட்ட கவனமாக உபாயப்படுத்தப்பட்ட நீண்ட கால திட்டத்தை அறிமுகப்படுத்தியது வான் கடல்சார்ந்த வர்த்தக மையம், "மிக உயர்ந்த" மத்திய வர்த்தக மாவட்டம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா நகரங்கள், விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப சூழல்சிநேகபூர்வமான இயற்கையான மற்றும் பெருந்தோட்ட நகரம் மற்றும் பல்புடை மாதிரி போக்குவரத்து மையங்கள் போன்ற எண்ணக்கருவான செயற்றிட்டங்கள் என்பன இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்மையடைச் செய்யக் கூடிய செயற்றிட்டங்களில் சிலவாகும். இப் புதிய உபாயங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட திட்டம் சுற்றுலாக் கைத்தொழில் முகம்கொடுக்கும் பிரச்சனைகளிலிருந்து விடுபட உதவுவதுடன் அடுத்த தசாப்தத்தினுள் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியை அடையும் பொருட்டு வளர்ச்சிப்பாதையை நோக்கி சுற்றுலாக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தும் உசாத்துனைகள்.


உசாத்துணைகள்

From Island to Continent: Western Region Megapolis Plan, Ministry of Megapolis and Western Development, (2016)

Travel and Tourism; Economic Impact 2015 Sri Lanka, World Travel and Tourism Council, (2015)

World Travel and Tourism Council, https://www.wttc.org

Sri Lanka Tourism Development Authority, https://www.sltda.gov.lk

Various paper articles


உயர் செலவிடலும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு ஆதரவாக விளங்கியது. நாளொன்றிற்கு சுற்றுலாப் பயணியொருவரின் செலவிடல் 2014இல் ஐ.அ.டொலர் 160.8 இலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 164.1 இற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்த செலவிடல்களைக் கொண்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தமையும் மேம்பட்ட வசதிகள் வழங்கப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். அதேவேளை, சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் சராசரிக் காலம் 2015இல் 10.1 நாட்களாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. சுற்றுலாத் தொழில்துறை பெறுமதிகூடிய சிறிய சந்தைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டமையும் பாரம்பரியமற்ற துறைகளின் அபிவிருத்தியும் இத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. வளர்ச்சி உத்வேகம் பல்வேறுபட்ட சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் ஆதரவுடனும் சுற்றுலாவிடுதிகளின் இயலாற்றலில் ஏற்பட்ட விரிவாக்கத்துடனும் இனிவரும் காலங்களிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை பொழுதுபோக்கு, கல்வி மற்றும் நல நோக்கங்களுக்கான வெளிநாட்டுப் பயணங்களில் இலங்கையில் வதிபவர்களின் புதிய ஈடுபாடுகளின் காரணமாக பயணத்தின் பேரிலான வெளிப்பாய்ச்சலும் வளர்ச்சியடைந்ததெனினும் இது உட்பாய்ச்சலிலும் பார்க்கக் குறைந்த வீதத்தில் காணப்பட்டது. பொதுவாகப் பயணம் மற்றும் சுற்றுலா துணைக் கணக்கின் மிகை 2015இல் 33.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

**சுற்றுலாத் துறையின் முதலீடுகள் 2015இல் மேலும் விரிவடைந்தன.** சங்கிறி - லா, கயாட், மூவென்பிக், செறட்டன், ஆர்ஜயு, ரமடா, பன்யன்ரீ, அனன்றறா, ஐரிசி மற்றும் நெக்ஸ்ட் என்பன உள்ளிட்ட பன்னாட்டு சுற்றுலாவிடுதிச் சங்கிலிகள்

அட்டவணை 5.7

## சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2015 |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகை (எண்ணிக்கை) | 855,975 | 1,005,605 | 1,274,593 | 1,527,153 | 1,798,380 | 17.8 |
| வருகையின் நோக்கங்களின் படி | | | | | | |
| பொழுதுபோக்கு | 687,830 | 748,436 | 915,208 | 1,037,644 | 1,198,240 (இ) | 15.5 |
| வியாபாரம் | 68,436 | 90,040 | 67,946 | 29,381 | 23,323 (இ) | -20.6 |
| ஏனையவை | 99,709 | 167,129 | 291,439 | 460,128 | 576,817 (இ) | 25.4 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 8,560 (ஆ) | 10,056 | 10,909 (ஆ) | 15,119 | 18,163 | 20.1 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 77.1 | 71.2 | 71.7 | 74.3 | 74.5 | 0.3 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 91,926 | 132,427 | 221,720 | 317,479 (ஆ) | 405,492 | 27.7 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 107,393 | 131,688 | 173,954 | 207,889 | 225,238 | 8.3 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) | 138,685 | 162,869 | 270,150 | 299,890 | 319,436 (இ) | 6.5 |
| நேரடி தொழில்வாய்ப்புக்கள் | 57,786 | 67,862 | 112,550 | 129,790 | 135,930 (இ) | 4.7 |
| மறைமுக தொழில்வாய்ப்புக்கள் (இ) | 80,899 | 95,007 | 157,600 | 170,100 | 183,506 (இ) | 7.9 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) மதிப்பீடுகள்

மூலங்கள் : இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

அவற்றின் கட்டுமான வேலைகளை இவ்வாண்டில் தொடர்ந்தன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் 2,242 சுற்றுலாவிடுதி அறைகளுடன் கூடிய 35 புதிய சுற்றுலாவிடுதி செயற்றிட்டங்களுக்கான முதலீட்டு முன்மொழிவுகள் ஐ.அ.டொலர் 889 மில்லியன் பெறுமதியுடன் ஒப்புதலளிக்கப்பட்டன. இது 2014இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 425 மில்லியன் கொண்ட முதலீட்டினைவிட 109 சதவீதம் அதிகமானதாகும். மேலும், 20 புதிய சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் தொழிற்படத் தொடங்கப்பட்டதுடன் மொத்தமாக 354 சுற்றுலாவிடுதிகள் மூலம் 867 அறைகள் சேர்க்கப்பட்டன. இதன் மூலம் 2015இல் அறைகளின் இயலளவு 19,377இற்கு விரிவடைந்தது. மேலும், கடைமாளிகைகள், விருந்தினர் இல்லங்கள், வீடுகளில் தங்குதல், பாரம்பரிய இல்லங்கள், பங்களாக்கள் மற்றும் வாடகைக்கு விடப்படும் தொடர்மாடிகள் என்பனவற்றை உள்ளடக்கிய துணை நிறுவனங்கள் போன்றன 1,409 இற்கு அதிகரித்தமையின் மூலம் 2015இல் அறைகள் 10,702 இற்கு அதிகரித்தன. உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுற்றுலா தொழில் துறை செழிப்படைந்து வருவதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏற்கனவே இம்மாகாணங்களை நோக்கி படிப்படியாக நகரத் தொடங்கியுள்ளனர். இச்சூழ்நிலையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மோதல் முடிவடைந்ததிலிருந்து 2015 வரை சுற்றுலா அபிவிருத்தி தொடர்பில் முறையே 56 மற்றும் 18 செயற்றிட்டங்கள் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் நிறைவுபெற்றுள்ளன. மேலும், இலங்கை முதலீட்டுச் சபை கல்பிட்டியில் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா வாசஸ்தலங்களையும் தெத்துவவில் சுற்றுலா வாசஸ்தலம் மற்றும் பொழுதுபோக்கு அபிவிருத்தி மற்றும் குச்சவெளியில் கடற்கரை சுற்றுலா வாசஸ்தலம் என்பனவற்றை அபிவிருத்தி செய்ய முன்மொழிந்திருக்கிறது.

**சுற்றுலாவுடன் தொடர்பான துறைகளை அபிவிருத்தி செய்வது அதிகரித்த பெறுமதிகூட்டல்களினூடாக பொருளாதாரத்திற்கு நன்மையளிக்கும்.** இதன் கீழ், வசதிகள், சுகாதார நிலைமைகள் மற்றும் பணிகளின் தரம் போன்ற அடிப்படை நியமங்களைத் தரமுயர்த்தும் நோக்குடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்படாத சுற்றுலா வலயத்திலுள்ள உணவகங்களுக்குச் சான்றிதழ் வழங்கும் திட்டமொன்று நல அமைச்சு மற்றும் மாநகர சபைகளின் ஒத்துழைப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. தனிச்சிறப்பு வாய்ந்த தீவின் பொக்கிஷத்தன்மை, இலங்கைக்கு மீண்டும் மீண்டும் விஜயம் செய்யத் தூண்டும் கலாச்சாரம் மற்றும் துணிகர முயற்சி போன்றவற்றை ஊக்குவிக்கும் 20 முக்கிய சந்தைகளை கவனத்திற் கொண்டு, தொழில்துறை ஆர்வலர்களின் ஆலோசனையுடன் 2015இல் இந்நாட்டிற்கே உரித்தான உபாய சந்தைப்படுத்தல் திட்டமொன்று இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தினால் உருவாக்கப்பட்டது. 2015இல் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் வெளிநாடுகளில் நடத்தப்பெற்ற 50 இற்கு மேற்பட்ட பயணக் கண்காட்சிகளிலும் தெருவோர நிகழ்வுகளிலும் பங்குபற்றியதுடன் புதிய வியாபாரத் தொடர்புகளையும் அத்துடன் அவர்களின் ஏற்கனவேயுள்ள வர்த்தக இணைப்புக்களை வலுப்படுத்துவதற்காகவும் உள்ளூர் பயணத் தொழில்துறைக்கு பல்வேறு வாய்ப்புக்களை உருவாக்கியது. மேலும், இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் திடீர் விஜயம் செய்யும் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டமானது உலகளாவிய ரீதியில் முக்கிய சந்தைகளிலிருந்து உயர் தோற்றப்பாடு வாய்ந்த பத்திரிகையாளர்களைக் கொண்டு வருவதன் மூலம் இலங்கை தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. மேலும்,

இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் இலங்கை தொடர்பான அனுபவங்களுக்கான மேடைகளை உருவாக்குகின்ற 35 உள்ளூர் நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தியது. கலாச்சாரம் மற்றும் சமய ஊர்வலங்கள், சன்சரக்கா உடவ, கொழும்பு நவநாகரீக வாரம், சுற்றுலாவிடுதிகள் கண்காட்சி, நேரடி திருகோணமலை திருவிழா மற்றும் உலகின் மிகப்பெரிய தேநீர் விருந்துபசாரத்தினை மேற்கொண்டதன் மூலம் கின்னஸ் உலக சாதனைக்கான முயற்சி என்பன 2015இல் நடத்தப்பட்ட வெற்றிகரமான நிகழ்வுகளில் சிலவாகும்.

### தொலைத்தொடர்பூட்டல்கள், கணினி மற்றும் தகவல் பணிகள்

**2015இல் தொலைத்தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகளிலிருந்தான உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் அதிகரித்தன.** தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2015இல் ஐ.அ.டொலர் 805 மில்லியனாக விளங்கி 2014இனை விட 7.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டின. தொலைத் தொடர்பூட்டல் துணைத் துறையின் வளர்ச்சி உத்வேகம் மொத்த வருவாய்கள் 2014இன் ஐ.அ.டொலர் 120 மில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 128 மில்லியனுக்கு அதிகரித்தமையின் மூலம் பேணப்பட்டது. தொலைத்தொடர்பூட்டல் துறையில் காணப்பட்ட உயர்ந்த போட்டி அண்மைய ஆண்டுகளில் பன்னாட்டுக் குரல் அழைப்புக் கட்டணங்களின் உள்நாட்டு விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு வழிவகுத்த போதும், இணையத்தள பணிகளின் பெருமளவு பயன்பாடு 2015இல் பன்னாட்டு நேரடி அழைப்பின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் குரல் அழைப்பு நிமிடங்கள் இரண்டின் மீதும் 2014 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. அதேவேளை தொலைத்தொடர்பூட்டல் தொழில்துறை, வளர்ந்துவரும் டிஜிட்டல் மற்றும் செல்லிடத் தொலைபேசி தொடர்பான சந்தைகளின் அதிகரித்துவரும் கேள்வியை ஈடுசெய்யும் விதத்தில் விரைந்த மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றது. நாடு முழுவதும் இணையத்தள வசதியைப் பெற்றுக்கொள்வதனை உத்வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்ற “கூகிள்லூன்” செயற்றிட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலானது இத்துறையின் செயலாற்றத்தினை மேலும் மேம்படுத்தும்

**2015இல் கணனி மற்றும் தகவல் பணிகளின் செயலாற்றம் மேலும் மேம்பட்டிருக்கிறது.** கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் 2015இல் ஐ.அ.டொலர் 677 மில்லியனுக்கு 7.8 சதவீதத்தினால் அதிகரித்தன. வெளியிலிருந்து வியாபாரச் செயன்முறைகளைப் பெற்றுக்கொள்ளுதல், வெளியிலிருந்து அறிவுச் செயன்முறைப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப்படுத்தல் பணிகள் இலங்கையில் உயர் வளர்ச்சி வாய்ப்பைக் கொண்ட துறைகளாக தோற்றம் பெற்று, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சலைத் தோற்றுவித்தன. இதன் விளைவாக, இலங்கை ஏ.ரி. கேர்ணி குளோபல் சேர்விஸ் லொகேஷன் சுட்டெண்ணின்படி, 2015இன் நிலைமையிலிருந்து இரண்டு புள்ளிகளினால் முன்னோக்கி நகர்ந்து 2016இல் பதினான்காவது இடத்தினைப் பெற்றுக்கொண்டது. தகவல் தொழில்நுட்பம், வெளியிலிருந்து செயன்முறைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவுச் செயன்முறைகளினைப் பெற்றுக்கொள்ளும் துறைகளுக்குத் தேவையான தேர்ச்சிபெற்ற மனித வளங்களை உருவாக்கக்கூடிய இயலாற்றலை இலங்கை கொண்டிருப்பதனால் தொழிற்சந்தையில், குறிப்பாக, வெளியிலிருந்து செயன்முறைப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவுச் செயன்முறைப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு சட்டவாக்கத்தினைத் திருத்துவதற்காக 2016 வரவு செலவுத்திட்டத்தினூடாக அரசாங்கம் முன்மொழிவுகளை எடுத்துரைத்தது. வெளியிலிருந்து செயன்முறைப் பணிகளை பெற்றுக்கொள்ளும் தொழில்துறையை மேம்படுத்துவதற்காக பன்னாட்டு ஊக்குவிப்பு மற்றும் அடித்தள அளவுமுறை நடவடிக்கையொன்றினை மேற்கொள்வதற்கும் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 5.4.2 முதலாந்தர வருமானம்

**2015இல் ஒதுக்குச் சொத்துக்களின் முதலீடுகள் மீதான வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பு, அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள், பங்கிலாபங்கள் மற்றும் மீள்முதலீட்டு வருவாய்கள் வடிவிலான வெளிப்பாய்ச்சல்கள் என்பன முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையை மேலும் விரிவுபடுத்தின.** முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2014இன் ஐ.அ.டொலர் 1,808 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 2,097 மில்லியனாகக் காணப்பட்டது. முதலாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல் 2014இன் ஐ.அ.டொலர் 155 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 127 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஒதுக்குச் சொத்துக்கள் மீதான வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுப் பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கின் மட்டத்தில் ஏற்பட்ட குறைப்பு, ஒதுக்கிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் 2014இன் ஐ.அ.டொலர் 102 மில்லியன் கொண்ட வருவாய்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 66 மில்லியனுக்கு வீழ்ச்சியடைவதற்குப் பங்களித்தது.

**2015இல் முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தன.** முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான மொத்த வெளிப்பாய்ச்சல் 2014இன்

ஐ.அ.டொலர் 1,963 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 2,224 மில்லியனாக விளங்கி 13.3 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இதற்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் நேரடி உள்முக முதலீடுகளின் மீதான பங்கிலாபக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புமே முக்கிய காரணங்களாக விளங்கின. பங்கிலாபத்தின் பேரிலான வெளிப்பாய்ச்சல் மற்றும் நேரடி முதலீடு தொழில்முயற்சிகளின் மீள்முதலீடு செய்யப்பட்ட வருவாய்கள் என்பன முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 670 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 811 மில்லியனுக்கு அதிகரித்தன. இது ஐ.அ.டொலர் 469 மில்லியன் கொண்ட பங்கிலாபக் கொடுப்பனவுகளையும் ஐ.அ.டொலர் 341 மில்லியன் கொண்ட மீள்முதலீட்டு வருவாய்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் இவை முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் நிதியியல் கணக்கிற்கான நேரடி முதலீடுகள் வடிவிலான உட்பாய்ச்சல்கள் தொடர்பானவையாகும். உள்முகநேரடி முதலீடுகள் மீதான பங்கிலாபக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிக உயர்வானதாக விளங்கியவிடத்து மீள்முதலீட்டு வருவாய்கள் முன்னைய ஆண்டினைவிடக் குறைவாக விளங்கி நேரடி முதலீட்டாளர்கள் இலாபங்களை மீள முதலீடு செய்வதிலும் பார்க்க தாய் நாட்டிற்கு மீளவனுப்புவதில் நாட்டமுடையவர்களாக இருந்தமையினை எடுத்துக்காட்டியது. அதேவேளை, 2015இன் சொத்துப்பட்டியல் முதலீட்டின் மீதான ஐ.அ.டொலர் 868 மில்லியன் கொண்ட மொத்த வட்டிக் கொடுப்பனவுகளில் ஐ.அ.டொலர் 108 மில்லியன் பங்குரிமை மூலதன முதலீட்டின் மீதான பங்கிலாபக் கொடுப்பனவாகக் காணப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 760 மில்லியன் படுகடன் பிணையங்கள் மீதான நறுக்கு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளாகக் காணப்பட்டன. மேலும், வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய ஏனைய முதலீடுகளின் வடிவிலான முதலாந்தர வருமான வெளிப்பாய்ச்சல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 398 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 463 மில்லியனாகக் காணப்பட்டது. 2015இல் வெளிநாட்டுக் கடன்கள் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளில் அரசாங்கம், தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், வைப்பை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முறையே ஐ.அ.டொலர் 266 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 118 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 67 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 13 மில்லியனாகவும் காணப்பட்டன. அண்மைய ஆண்டுகளில் நறுக்கு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளில் அமைப்பியல் மாற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற தொகை குறைவாக இருந்தபோதிலும் செயற்றிட்டக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான நறுக்குக் கொடுப்பனவுகளாக அரசாங்கம் உயர்ந்த தொகையினைச் செலுத்தி வருகின்றது.

### 5.4.3 இரண்டாந்தர வருமானம்

**இவ்வாண்டுப் பகுதியில் இரண்டாந்தர வருமானக் கணக்கு தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டமைக்கு, இரண்டாந்தர வருமான உட்பாய்ச்சலின் பெரும்பங்கிற்கு வகைகூறும் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட மெதுவான போக்கே முக்கிய காரணமாகும்.** தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 6,980 மில்லியனுக்கு 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2014இல் அவதானிக்கப்பட்ட 9.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலிருந்து மிகக் கடுமையாக மிதமடைந்தமையினைப் பிரதிபலித்தது. அரச மாற்றல்களும் 2014இனை விட 4.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, 2015ஆம் ஆண்டுப் பகுதியில் இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 7,007 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினை விட 0.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு புலம்பெயர் தொழிலாளர்களின் வருமான மாற்றல்களின் பாரம்பரிய முதன்மை மூலமாக விளங்குகின்ற மத்திய கிழக்கிலுள்ள எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதன் விளைவாக இந்நாடுகளில் ஏற்பட்ட மந்தமான வளர்ச்சியுமே பெருமளவு காரணமாகும். மேலும், வீட்டுப் பணிப்பெண்கள் உட்பட ஓரளவு தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெறாத வகைகளின் கீழான தொழிலாளர் புலம்பெயர்வுகளில் காணப்பட்ட 23.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியும் இவ்வாண்டுப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்திருக்கக்கூடும். தொழிலாளர் புலம்பெயர்வில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சியானது வீட்டுப் பணிப்பெண்களும் தேர்ச்சியற்ற வேலையாட்களும் வெளிநாட்டிற்குச் செல்வதனை ஊக்கம் குன்றச் செய்வதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு கொள்கை வழிமுறைகளினதும் மத்திய கிழக்குப் பிராந்தியங்களில் நிலவும் நிச்சயமற்ற புவிசார் அரசியல் நிலைமைகளினதும் பெறுபேறேயாகும். அதேவேளை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்ட தரவுகள் தொழில்சார் நிபுணர்கள் உட்பட, தேர்ச்சிபெற்ற வகையினரின் கீழ் புலம்பெயர்ந்த தொழிலாளர் இவ்வாண்டில் 12.5 சதவீதத்தினால் அதிகரித்து இனிவரும் ஆண்டுகளில் தொழிலாளர் பணவனுப்பல்களின் உள்ளமைப்பில் மாற்றங்கள் ஏற்படும் என்பதனை எடுத்துக்காட்டியது.

## 5.5 நடைமுறைக் கணக்கு மீதி

**வர்த்தகம் மற்றும் வருமானக் கணக்குகளின் பற்றாக்குறையில் விரிவாக்கம் காணப்பட்ட போதும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 2015இல் ஐ.அ.டொலர் 2.0 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டமைக்கு பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் காணப்பட்ட மிகைகளே முக்கிய காரணமாகும்.** வணிக வர்த்தகப் பற்றாக்குறை 2015இல் தொடர்ந்தும் விரிவடைந்தமைக்கு நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட மெதுவான தன்மையுமே காரணங்களாகும். எனினும், வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு பன்னாட்டுச் சந்தைகளில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினால் மசகெண்ணெயின் இறக்குமதி மீதான செலவினம் குறைவடைந்தமையின் மூலம் பெருமளவிற்குத் தணிக்கப்பட்டதுடன் இதன் விளைவாக வணிக வர்த்தகப் பற்றாக்குறை முன்னைய ஆண்டிலும் பார்க்க 2015இல் 1.7 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை பதிவுசெய்தது. எனினும், வர்த்தகம் மற்றும் வருமானக் கணக்குகளில் காணப்பட்ட பற்றாக்குறைகள் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு மற்றும் இரண்டாந்தரக் கணக்கில் ஏற்பட்ட மிகை என்பனவற்றின் காரணமாக பணிகள் கணக்கில் ஏற்பட்ட மிகையினால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டன. இருந்தபோதும் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியின் காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் குறிப்பிடத்தக்க பின்னடைவொன்றினை பின்னயது எடுத்துக்காட்டியது. அதைத் தொடர்ந்து, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,988 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 2,009 மில்லியனாக விளங்கியது. எனினும், பெயரளவு மொ.உ. உற்பத்தி வளர்ச்சி மிதமாக வளர்ச்சியடைந்தமையின் விளைவாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2014இன் மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் மொ.உ.உற்பத்தியின் 2.4 சதவீதத்திற்கு சிறியளவில் சுருக்கமடைந்தது.


## 5.6 மூலதனக் கணக்கு மீதி

**2015இல் மூலதன மாற்றல்களிலான குறைந்த உட்பாய்ச்சல் மூலதனக் கணக்கின் மீதியில் குறைவினை ஏற்படுத்தியது.** மூலதனக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 58 மில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 46 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு, மூலதன மாற்றல்களின் வெளிப்பாய்ச்சல் 2014இன் ஐ.அ.டொலர் 15 மில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 24 மில்லியனுக்கு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, அரசாங்கத்தினாலும் தனியார் துறையினாலும் பெறப்பட்ட மூலதன மாற்றல்களும் 2014இன் ஐ.அ.டொலர் 73 மில்லியனிலிருந்து 2015இல் ஐ.அ.டொலர் 71 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

## 5.7 நிதியியல் கணக்கு

**சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் தேறிய நிதியியல் சொத்துக்களின் கையேற்பு ஆகிய இரண்டும் 2014இலும் பார்க்க 2015இல் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தன.** 2015இல் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் 2014இன் ஐ.அ.டொலர் 4,124 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 3,227 மில்லியன் பெறுமதியான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்த அதேவேளையில் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2014இன் ஐ.அ.டொலர் 2,588 மில்லியன் பெறுமதியான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 957 மில்லியன் கொண்ட மிதமானதொரு அதிகரிப்பினை மட்டுமே பதிவுசெய்தது. ஒப்பீட்டு ரீதியில் உட்பாய்ச்சல்களின் குறைவான இம்மட்டங்களுக்கு 2015இல் உலகளாவிய பொருளாதாரத்தின் செயலாற்றம் ஓரளவு காரணமாகவிருந்த வேளையில் இரண்டு முக்கிய தேசிய தேர்தல்களுக்கிடையே முதலீட்டாளர்களின் மனோபாவம் தளர்வடைந்தமையும் வெளிநாட்டுத் தேறிய முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க இவ்வாண்டுப் பகுதியில் குறைவாக இருந்தமைக்குப் பங்களித்தது. ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளில் ஐக்கிய அமெரிக்காவில் வட்டி வீதம் உயர்வடையும் என்ற எதிர்பார்ப்பும் அதனைத் தொடர்ந்து நான்காவது காலாண்டில் வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் இலங்கை உட்பட அநேக தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் வெளிநாட்டு முதலீடுகளின் மீது ஆழமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாக அரச பிணையங்களில் அதாவது திறைசேரி

வரைபடம் 5.9 நிதியியல் கணக்குக்கான உட்பாய்ச்சல்கள்



உண்டியல்கள் மற்றும் முறிகளிலான வெளிநாட்டு முதலீடுகளும் அதேபோன்று கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளும் குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் சென்மதி நிலுவையில் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களின் முக்கிய மூலமாக ஆண்டின் தொடக்கத்தில் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவுகளைத் தொடர்ந்து மொத்தமாக ஐ.அ.டொலர் 2,150 மில்லியன் கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் காணப்பட்டது. நிதியியல் கணக்கிற்கான மற்றைய முக்கிய உட்பாய்ச்சலாக இந்திய ஒதுக்கு வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளின் பெறுகைகள் காணப்பட்டது. இதில் ஐ.அ.டொலர் 400 மில்லியன் 2015இல் மீளச்செலுத்தப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் அரசாங்கமும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல்களூடாக வெளிநாட்டு நிதியிடலில் அதன் கவனத்தைப் புதுப்பித்தது. மேலும், அரசு, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் தனியார் துறை என்பனவற்றிற்கான கடன்கள் போன்ற நிதியியல் கணக்கிற்கான பாரம்பரிய மூலங்களின் உட்பாய்ச்சல்களும் 2015இல் மிதமான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன.

### 5.7.1 நேரடி முதலீடுகள்

**முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2015இல் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தன.** முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 1,161 மில்லியனாக விளங்கிய வேளையில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2015இல் ஐ.அ.டொலர் 681 மில்லியனாக விளங்கின. இது 2014இல் பதிவுசெய்யப்பட்ட முறையே ஐ.அ.டொலர் 1,635 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 894 மில்லியனுடன் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு மிதமாகக் காணப்பட்டது. 2015இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பல காரணங்கள் பங்களித்திருக்க முடியும். முதலாவது, இவ்வாண்டுப் பகுதியில் நடைபெற்ற இரண்டு தேசிய தேர்தல்கள் அரசியல் சூழ்நிலை உறுதியடையும் வரை காத்திருக்கும் அணுகும் முறையொன்றினை முதலீட்டாளர்கள் பின்பற்றுவதற்கு இரண்டாவது, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வின் வீதத்தை உயர்த்தக்கூடிய சாத்தியப்பாட்டுடன், குறிப்பாக தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களின் பிணையங்கள் சந்தைகளிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களின் பின்னணியில், அநேக முதலீட்டாளர்கள் தோற்றம்பெற்றுவரும் சந்தைகளில் முதலீடு செய்வதற்கு தயக்கம் காட்டினர். மூன்றாவது, மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்ற அரசின் தீர்மானத்தின் காரணமாக கொழும்பு துறைமுக நகரச் செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டமையும் ஆண்டுக் காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை மோசமாகப் பாதித்தன. மொத்த வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சலில் ஐ.அ.டொலர் 84 மில்லியன் பங்குரிமை மூலதன வடிவத்திலும்

**அட்டவணை 5.8 அ**
**நிதியியல் கணக்கு (பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2014 (அ) | | 2015 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப் படுத்துகை | தேறிய நிகழ்த்தக்க பொறுப்புக்கள் | நிதியியல் சொத்துக் களில் தேறிய கைப் படுத்துகை | தேறிய நிகழ்த்தக்க பொறுப்புக்கள் |
| **நிதியியல் கணக்கு** | **2,588** | **4,124** | **957** | **3,227** |
| **நேரடி முதலீடு** | **67** | **894** | **53** | **681** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | 67 | 469 | 53 | 426 |
| வருமானத்தின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 67 | 88 | 53 | 84 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 67 | 88 | 53 | 84 |
| பீஓஐ கம்பனிகள் | - | 10 | - | 36 |
| பீஓஐ உடன் பதியப்படாத கம்பனிகள் | - | -15 | - | 62 |
| ஏனைய கம்பனிகள் | - | 93 | - | -13 |
| வருமானத்தின் மீள் முதலீடு | - | 380 | - | 341 |
| படுகடன் கருவிகள் | - | 425 | - | 256 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | - | 425 | - | 256 |
| பீஓஐ கம்பனிகள் | - | 424 | - | 110 |
| பங்குதாரர் முற்பணங்கள் | - | 208 | - | 126 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் | - | 224 | - | 76 |
| படுகடன் மீள்கொடுப்பனவுகள் | | -7 | - | -92 |
| பீஓஐ உடன் பதியப்படாத கம்பனிகள் | - | 1 | - | 145 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **-0.2** | **2,065** | **0.02** | **689** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | - | 178 | - | -58 |
| சிஎஸ்ஈ கம்பனிகள் | - | 178 | - | -58 |
| படுகடன் கருவிகள் | -0.2 | 1,887 | 0.02 | 747 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -0.2 | 250 | 0.02 | - |
| நீண்ட காலம் | -0.2 | 250 | 0.02 | - |
| அரசாங்கம் | - | 1,462 | - | 747 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | -173 | - | -392 |
| நீண்டகாலம் | - | 1,635 | - | 1,139 |
| திறைசேரி முறிகள் | - | 60 | - | -701 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | 75 | - | 190 |
| நாட்டுக்கான முறிகள் | - | 1,500 | - | 1,650 |
| ஏனைய துறைகள் | - | 175 | - | - |
| நீண்ட காலம் | - | 175 | - | - |
| **நிதியியல் பெறுதிகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு** | **973** | **1,165** | **553** | **1,857** |
| நாணயமும் வைப்புக்களும் | 276 | -292 | 143 | 1,457 |
| மத்திய வங்கி | - | 1 | - | 1,098 |
| குறுங்காலம் | - | 1 | - | -2 |
| நீண்ட காலம் | - | - | - | 1,100 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 276 | -293 | 143 | 359 |
| குறுங்காலம் | 142 | -293 | 152 | 359 |
| நீண்ட காலம் | 134 | - | -9 | - |
| பக்கம் ..... இல் தொடர்கிறது. | | | | |
| ஞாபகார்த்த விடயங்கள் | | | | |
| **சீஎஸ்ஈ இற்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்** | | **163** | | **4** |
| நேரடி முதலீடுகள் | | -15 | | 62 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | 178 | | -58 |
| **திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மீதான தேறிய முதலீடுகள் (நாட்டுக்கான முறிகள் நீங்கலாக)** | | **-113** | | **-1,093** |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 1,775 | | 1,211 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 1,889 | | 2,304 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஐ.அ.டொலர் 341 மில்லியன் மீள்முதலீட்டு வருவாய்களாகவும் ஐ.அ.டொலர் 126 மில்லியன் பங்குடமையாளர் முற்பணமாகவும் மற்றும் ஐ.அ.டொலர் 222 மில்லியன் கம்பனிகளுக்குள்ளேயான கடன்பாடுகளாகவும் காணப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 92 மில்லியன் கொண்ட கம்பனிகளுக்குள்ளேயான படுகடன் மற்றும் பங்குடமையாளர் முற்பணங்கள் இவ்வாண்டில் மீளச் செலுத்தப்பட்டன. மேலும், 2015ஆம் ஆண்டுப் பகுதியில் முதலீட்டுச் சபைக் கம்பனிகள் தொடர்புபடாத தரப்பினரிடமிருந்து ஐ.அ.டொலர் 480 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொண்டன.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சல்கள் சொத்து அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் தொலைத்தொடர்பூட்டல்களுடன் தொடர்பான செயற்றிட்டங்களுக்கு பெருமளவில் வழிப்படுத்தப்பட்டன.** இதன்படி, சொத்து அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் தொலைத்தொடர்பூட்டல் செயற்றிட்டங்கள் 2015இல் மொத்த வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்களில் முறையே 22 சதவீதத்திற்கும் 19 சதவீதத்திற்கும் 14 சதவீதத்திற்கும் வகைகூறின. முதலீடுகளின் உடனடி நாடுகள் என்ற அடிப்படையில் முதல் ஐந்து நேரடி முதலீட்டு நாடுகளாக ஹொங்கொங், மொறிஷியஸ், நெதர்லாந்து, சீனா மற்றும் இந்தியா என்பன விளங்கின. அதேவேளை, சொத்துக்களின் தேறிய கையேற்புக்களை தோற்றுவித்த வெளிநாடுகளிலுள்ள இலங்கைக் கம்பனிகளினால் செய்யப்பட்ட நேரடி முதலீடுகள் 2014இன் ஐ.அ.டொலர் 67 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 53 மில்லியனாகக் காணப்பட்டது. வெளிநாடுகளிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் முக்கியமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கைக் கம்பனிகளின் தனிப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் வடிவிலும் தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள பெருந்தோட்டத் துறைக்கு வழிப்படுத்தப்பட்ட முதலீடுகளின் வடிவிலும் காணப்பட்டன.

### 5.7.2 சொத்துப்பட்டியல் முதலீடுகள்

#### பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்

**2015இல் தோற்றம்பெற்றுவரும் சந்தைகளின் மீதான உலகளாவிய முதலீட்டாளர்களின் குறைவடைந்த மனோபாவம் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் கீழான பங்குரிமை மூலதனத்தின் செயற்பட்டா வெளிநாட்டு முதலீடுகளின் மீது பிரதிபலிக்கப்பட்டது.** இலங்கை கம்பனியொன்றில் 10 சதவீதத்திற்கும் குறைவான பங்கைக் கொண்டுள்ள வதிவற்றோரின் தனிப்பட்ட பங்குடமைகளைக் கொண்ட பங்குரிமை மூலதன முதலீடுகளான சொத்துப்பட்டியல் முதலீடுகளின் கீழ் பங்குரிமை மூலதனமாக இருக்கும் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் 2014இன் ஐ.அ.டொலர் 178 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 58 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை கம்பனிகளிலான நேரடி முதலீடுகள் தவிர்ந்த, வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் வதிவற்றோரினால் மேற்கொள்ளப்பட்ட நேரடி முதலீடுகளுடன் ஒப்பிடும் பொழுது கூடிய தளம்பல்களைக் கொண்ட பங்குரிமை மூலதன முதலீடுகள் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 94 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சலையும் முதனிலைச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 36 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலையும் பதிவுசெய்து சொத்துப்பட்டியல் முதலீடுகளின் கீழாக பங்குரிமையாக ஐ.அ.டொலர் 58 மில்லியன் கொண்ட ஒட்டுமொத்தத் தேறிய வெளிப்பாய்ச்சலைத் தோற்றுவித்தன. இது 2014இல் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 174 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களுடனும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் ஆரம்ப சந்தைக் கொடுக்கல்வாங்கல்களில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 4 மில்லியனை உள்ளடக்கிய மொத்தமாக ஐ.அ.டொலர் 178 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சல்களுடனும் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு மாறானதாகும்.

#### படுகடன் பிணையங்கள்

**அரசாங்கத்தின் ஐ.அ.டொலர் 2.15 பில்லியன் பெறுமதி கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டமையானது 2015இல் படுகடன் பிணையங்கள் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்களாகக் காணப்பட்டது.** 10 ஆண்டுகள் முதிர்ச்சியுடன் கூடிய ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 650 மில்லியன் கொண்ட இவ்விரண்டு முறிகளும் முறையே ஆண்டொன்றிற்கு 6.85 சதவீதம் மற்றும் 6.125 சதவீதங்களில் விலையிடப்பட்டன. இப்போட்டித்தன்மையைக் கொண்ட விளைவு வீதங்கள் உலகளாவிய மூலதனச் சந்தைகளில் உயர்ந்த வட்டி வீதங்களும் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வின் வட்டி வீத உயர்வும் சேர்ந்து காணப்பட்ட ஒரு நேரத்தில் கவரப்பட்டது. எனினும், சனவரியில் முதிர்ச்சியடைந்த 500 மில்லியன் ஐ.அ.டொலர்களைக் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறி 2015இல் நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல்களின் தேறிய தாக்கத்தைக் குறைவடையச் செய்தன. அதேவேளை, 2015இன் பெரும்பாலான காலப்பகுதியில் பெடரல் றிசேர்வ் வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட வட்டி வீத உயர்வு மற்றும் அதைத் தொடர்ந்து 2015 திசெம்பரில் அறிவிக்கப்பட்ட வட்டி வீத உயர்வின் பின்னணியிலும் தோற்றம்பெற்றுவரும் சந்தைகளிலிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு ஆண்டு முழுவதும்

மூலதன வெளிப்பாய்ச்சல்கள் இடம்பெற்றமை இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளில் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தவிர்ந்த அரச பிணையங்கள் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் கணிசமான வெளிப்பாய்ச்சல் இவ்வாண்டுப் பகுதியில் அவதானிக்கப்பட்டதன் மூலம் 2014இன் ஐ.அ.டொலர் 38 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 903 மில்லியன் கொண்ட

**அட்டவணை 5.8 ஆ — நிதியியல் கணக்கு (பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2014 (அ) | | 2015 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப் படுத்துகை | தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் | நிதியியல் சொத்துக் களில் தேறிய கைப் படுத்துகை | தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் |
| ஏனைய முதலீடு (பக்கம் ...... இலிருந்து தொடர்கிறது) | | | | |
| கடன்கள் | - | 1,713 | - | 734 |
| மத்திய வங்கி | - | -719 | - | -507 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | -719 | - | -507 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 1,358 | - | 787 |
| குறுங்காலம் | - | 1,156 | - | 657 |
| நீண்ட காலம் | - | 202 | - | 131 |
| அரசாங்கம் | - | 646 | - | 470 |
| நீண்ட காலம் | - | 646 | - | 470 |
| ஏனைய துறைகள் (இ) | - | 429 | - | -16 |
| நீண்ட காலம் | - | 429 | - | -16 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 383 | -407 | 166 | -376 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 8 | - | -30 | - |
| குறுங்காலம் | 8 | - | -30 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | 375 | -407 | 196 | -376 |
| குறுங்காலம் | 375 | -407 | 196 | -376 |
| பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 314 | 151 | 244 | 41 |
| மத்திய வங்கி | - | 151 | - | 41 |
| குறுங்காலம் (உ) | - | 151 | - | 41 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 314 | - | 244 | - |
| குறுங்காலம் | 314 | - | 244 | - |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சிஎஉ)** | - | - | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **1,548** | | **350** | |
| நாணயவியல் தங்கம் | 9 | | -39 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -6 | | -2 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 1,545 | | 391 | |
| நாணயமும் வைப்புக்களும் | 496 | | 116 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 462 | | 369 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 34 | | -253 | |
| பிணையங்கள் | 1,049 | | 275 | |
| படுகடன் பிணையங்கள் | 1,049 | | 275 | |
| நீண்ட காலம் | 1,049 | | 275 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-1,536** | | **-2,271** | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **646** | | **470** |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 1,439 | | 1,268 |
| மீள்கொடுப்பனவுகள் | | 793 | | 798 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

தேறிய வெளிப்பாய்ச்சல் பதிவுசெய்யப்பட்டது. இது, 2015இல் திறைசேரி உண்டியல்களின் ஐ.அ.டொலர் 392 மில்லியன், திறைசேரி முறிகளின் ஐ.அ.டொலர் 701 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் ஐ.அ.டொலர் 190 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களினால் பிணையங்களாக வைத்திருக்கப்பட்ட சொத்துக்கள் பெருமளவிற்கு மாற்றமின்றி 2014இன் மட்டங்களிலேயே காணப்பட்டது.

### 5.7.3 ஏனைய முதலீடுகள்

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**நாணயம் மற்றும் வைப்புக்களுடன் இணைந்த தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நாணய மற்றும் வைப்புக்களின் தேறிய கையேற்பு ஆகிய இரண்டும் 2015இல் சொத்துக்களாக அதிகரித்தன.** மத்திய வங்கியின் நாணயம் மற்றும் வைப்புக்களுடன் தொடர்புபட்ட பொறுப்புக்கள் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,098 மில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இது, ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இந்திய ஒதுக்கு வங்கியுடனான ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் கொண்ட நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளினதும் அதன் பின்னர் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட பரஸ்பர பரிமாற்றல் வசதியின் முதல் பகுதியின் மீள்கொடுப்பனவுகளினதும் தேறிய விளைவாகும். மேலும், ஏனைய வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களினால் வைத்திருக்கப்பட்ட நாணயம் மற்றும் வைப்புக்கள் 2015இல் ஐ.அ.டொலர் 359 மில்லியனால் அதிகரித்தன. இது, நாணயம் மற்றும் வைப்புக்கள் என்ற ரீதியில் மொத்தத் தேறிய நிகழ்வுப் பொறுப்புக்களை 2015இல் ஐ.அ.டொலர் 1,457 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகளின் கையேற்புடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 143 மில்லியனால் அதிகரித்தமைக்கு குறுங்கால நாணயத்திலும் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களினால் வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட வைப்புக்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணங்களாகும்.

#### கடன்கள்

**அரசாங்கத்திற்கான கடன் உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டுப் பகுதியில் மிதமடைந்தவிடத்து தனியார் துறை, வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றினால் செய்யப்பட்ட உயர்ந்த மீள்கொடுப்பனவுகள் 2015ஆம் ஆண்டில் தேறிய கடன் உட்பாய்ச்சல்களில் குறைவொன்றைத் தோற்றுவித்தன.** இதன்படி, வெளிநாட்டுக் கடன்களிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 1,713 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 734 மில்லியனாக விளங்கியது.

**அட்டவணை 5.9 2015இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர்கள் மில்லியன் |
|---|---|
| **அரசாங்க திட்டங்கள் - மொத்தம்** | **1,268** |
| இதில்; | |
| **சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி** | **295** |
| இதில்; | |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் விரிவாக்க கட்டுமானம் - பகுதி I மாத்தறையிலிருந்து பெலியத்தை வரை | 67 |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் விரிவாக்க கட்டுமானம் - பகுதி IV மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை | 36 |
| மாத்தறை - கதிர்காமம் புகையிரத வீதியில் மாத்தறை பெலியத்தை பகுதியின் விரிவாக்கல் செயற்றிட்டம் | 31 |
| பின்னதுவையிலிருந்து கொட்டகொட வரையிலான நெடுஞ்சாலை பகுதி செயற்றிட்டம் | 18 |
| புத்தளம் - மரிச்சிக்கடை - மன்னார் வீதி செயற்றிட்டத்தின் புனருத்தாபனம் மற்றும் முன்னேற்றம் | 18 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **288** |
| இதில்; | |
| இணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 31 |
| உள்நாட்டு அரசாங்க உயர்துறை செயற்றிட்டம் | 19 |
| தூய வலு மற்றும் முன்னேற்றத்தை அடைவதற்கான செயற்றிட்டம் | 18 |
| தேசிய நெடுஞ்சாலைத்துறை செயற்றிட்டம் | 17 |
| **சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம்** | **193** |
| இதில்; | |
| முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் 3இன் முன்னேற்றம் மற்றும் புனருத்தாபனம் - கட்டம் I | 109 |
| முன்னுரிமை வீதிச் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் மற்றும் புனருத்தாபனம் - கட்டம் II | 51 |
| மொறகஹகந்த அபிவிருத்திச் செயற்றிட்டம் | 24 |
| **ஜப்பானிய அரசாங்கம்** | **168** |
| இதில்; | |
| கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II | 57 |
| கொழும்பு பெரும்பாக போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் | 20 |
| நீர்த்துறை அபிவிருத்தி செயற்றிட்டம் II | 19 |
| **பன்னாட்டு அபிவிருத்தி சம்மேளனம்** | **118** |
| இதில்; | |
| இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 39 |
| பாடசாலை கல்வி முறையை அடிப்படை அறிவு மையமாக மாற்றுதல் செயற்றிட்டம் | 18 |
| **ஐரோப்பிய முதலீட்டு வங்கி** | **81** |
| இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பச்சை வலு உலகக் கடன் | 81 |
| **இந்திய அரசாங்கம்** | **73** |
| இதில்; | |
| வடக்கு புகையிரத சேவைகளை மீளமைக்கும் செயற்றிட்டம் | 28 |
| இரண்டு உயர்ந்த வெளிநாட்டு காவல் குழாய்களை பெறுதல் | 27 |
| **கோப் சென்றலே ரைபீசின் - போறன்லீன் பாங்க்** | **73** |
| இதில்; | |
| 463 கிராமிய பால கட்டுமான செயற்றிட்டம் | 20 |
| **டொயிஷ் பாங்க் ஏஜி** | **37** |
| 537 இரும்புகோல் பாலத்தின் கட்டுமான செயற்றிட்டம் | 37 |
| **எச்எஸ்பிசி (இ கே எப் டென்மார்க்கின் உத்தரவாதத்துடன்)** | **25** |
| படல்கமவின் பாலுற்பத்தி செயன்முறை தாவரங்களை உருவாக்குதல் | 25 |
| **மீள் கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி** | **19** |
| மெற்ரோ கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் | 19 |
| அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சி - மொத்தம் | **80** |
| புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டம் - கட்டம் II | 67 |
| துணை வேலைகள் மற்றும் கருவிகளை வழங்கலிற்கான அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் I | 9 |
| புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டம் - வாங்குபவரின் கொடுகடன் வசதி | 5 |

மூலம்: தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் வெளித்துறை மூலங்களிற்கான திணைக்களம்

**அரசிற்கான தேறிய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் குறைவாகக் காணப்பட்டன.** இரண்டு முக்கிய தேர்தல்கள் நடைபெற்ற பின்னணியில் 2015இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளில் முக்கிய அரச செயற்றிட்டங்களின் முன்னெடுப்புக்கள் செயற்றிட்டக் கடன்களின் உட்பாய்ச்சலில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தன. இதன் விளைவாக அரச செயற்றிட்டக் கடன் வடிவிலமைந்த கடன் உட்பாய்ச்சல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 1,439 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 1,268 மில்லியனாக விளங்கியது. மேலும், அரச கடன்களின் மீள்கொடுப்பனவுகள் 2014இன் ஐ.அ.டொலர் 793 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 798 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் அரச செயற்றிட்டங்களுக்கான முக்கிய கடன் உட்பாய்ச்சல்கள் முன்னுரிமை வீதிகளின் (கட்டம் I மற்றும் கட்டம் II) மேம்பாடு மற்றும் புத்தாக்கம், இலங்கை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் பசுமை வலு உலகளாவிய கடன் மாத்தறை - கதிர்காமம் புகைவண்டி விரிவாக்கச் செயற்றிட்டத்தின் மாத்தறை - பெலியத்தப் பிரிவு மற்றும் பெரும்பாக கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கட்டம் II என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**2015இல் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் தேறிய தொகையும் மிகக் கூடிய வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கிய வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களுக்கான தேறிய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 1,358 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 787 மில்லியனாக விளங்கியது. மொத்தத் தேறிய கடன் உட்பாய்ச்சல்களில், ஐ.அ.டொலர் 657 மில்லியன் குறுங்கால தேறிய உட்பாய்ச்சல்கள் வடிவில் காணப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 131 மில்லியன் நீண்ட கால தேறிய உட்பாய்ச்சல்கள் வடிவில் காணப்பட்டன.

**2015இல் மத்திய வங்கி பன்னாட்டு நாணய நிதியம் - துணைநில் ஒழுங்குவசதிகளின் கீழ் செலுத்த வேண்டிய தொகைகளின் மீள்கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.** இதன்படி, 2009 இலிருந்து 2012 வரை பகிர்ந்தளிக்கப்பட்ட பன்னாட்டு நாணயம் நிதியம் - துணைநில் ஒழுங்குவசதிகளின் முதல் தொகையான ஐ.அ.டொலர் 507 மில்லியன் மீளச்செலுத்தப்பட்டது. இவ்வசதிகளின் கீழ் பெறப்பட்ட மொத்தத் தொகையினையும் 2017 யூலை அளவில் முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

**தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் சிறிதளவு தேறிய வெளிப்பாய்ச்சல்களை பதிவுசெய்தமைக்கு**

**2015இன் கடன் உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் கடன் மீள்கொடுப்பனவுகள் உயர்வாக இருந்தமையே காரணமாகும்.** இவ்வாண்டுப் பகுதியில் இவ்விரு துறைகளுக்குமான கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 561 மில்லியனாகவும் மொத்தக் கடன் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 577 மில்லியனாகவும் அமைந்தமையின் காரணமாக ஐ.அ.டொலர் 16 மில்லயன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று விளைவிக்கப்பட்டது. இதேபோன்ற குறைந்த வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் அரசாங்கத்திற்கும் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களுக்கும் காணப்பட்ட வேளையில் தனியார் துறையும் 2015இல் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களையே பெற்றது. இத்துறைக்கான மொத்த வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களில் தனியார் துறை ஐ.அ.டொலர் 481 மில்லியனைப் பெற்ற வேளையில் அரசிற்குச் சொந்தமான வியாபார முயற்சிகள் மீதி ஐ.அ.டொலர் 80 மில்லியனைப் பெற்றன. தனியார் துறைக்கான கடன்கள் முக்கியமாக சுற்றுலா, தொலைத்தொடர்பூட்டல்கள் மற்றும் துறைமுக அபிவிருத்தித் துறைகளுக்கு வழிப்படுத்தப்பட்டது. கடந்த ஒரு சில ஆண்டுகளாக தனியார் துறையினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் உயர்வாக இருந்தமைக்கு உலகளாவிய வட்டி வீதங்கள் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டமையே காரணமாகும். எனினும், ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதங்கள் உயர்வடையத் தொடங்கியமையுடன் உலகளாவிய வட்டி வீதங்கள் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மட்டம் குறைவடையும் போல் தோன்றுகிறது.

### பெறத்தக்க/ கொடுபடத்தக்க வர்த்தகக் கொடுகடன் முற்பணங்கள் மற்றும் ஏனைய கணக்குகள்

**2015இல் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களும் முற்பணங்களும் அதிகரித்தன.** பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடனில் முக்கிய கூறாக இருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்தமையானது பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களின் தேறிய நிகழ்தகவுப் பொறுப்புக்களை 2014இன் ஐ.அ.டொலர் 407 மில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 376 மில்லியனுக்கு குறைவடையச் செய்தது. 2014இலிருந்து ஈரானிய மசகெண்ணெய் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட தடையின் காரணமாக குறுகிய கொடுகடன் காலப்பகுதியின் அடிப்படையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மசகெண்ணெயை வாங்குவதில் ஈடுபட்டிருந்தமையானது 2014இலும் அதேபோன்று 2015இலும் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்களில் படிப்படியான வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. அதேவேளை, இலங்கை ஏற்றுமதியாளர்களினால் அவர்களின் வெளிநாட்டிலுள்ள வர்த்தகப் பங்காளர்களுக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களைப் பிரதிபலிக்கின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் மீதான சொத்துக்களின் தேறிய கையேற்பு 2014இன் ஐ.அ.டொலர் 375 மில்லியன் கொண்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 196 மில்லியனால் அதிகரித்தது. மேலும், வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் 2015இல் ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட சொத்துக்களில் தேறிய வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன.


### 5.7.4 ஒதுக்குச் சொத்துக்கள்

**ஒதுக்குச் சொத்துக்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் 2015இல் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப் பகுதியில் ஒதுக்குச் சொத்துக்களின் இருப்பு குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும்.** இதற்கு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை நிதியிடுவதற்குப் போதாமலிருந்த நிதியியல் கணக்கிற்கான குறைந்த மட்ட உட்பாய்ச்சல்களின் பெறுபேறாக 2015இல் ஒதுக்குகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக ஒதுக்குச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்கள் 2014இன் ஐ.அ.டொலர் 1,548 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 350 மில்லியன் கொண்ட மிதமான அதிகரிப்பினை மட்டுமே பதிவுசெய்தன. 2015இல் ஒதுக்குக் கொடுக்கல்வாங்கல்கள், நாணய தங்கக் கொடுக்கல்வாங்கல்கள் ஐ.அ.டொலர் 39 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமையையும் நாணயம் மற்றும் வைப்புக்கள் ஐ.அ.டொலர் 116 மில்லியனால் அதிகரித்தமையையும் படுகடன் பிணையங்கள் ஐ.அ.டொலர் 275 மில்லியனால் அதிகரித்தமையையும் முக்கிய பண்புகளாக கொண்டிருந்தன.

## 5.8 சென்மதி நிலுவை

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகளில் மாற்றத்தினை ஏற்படுத்தும் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2015ஆம் ஆண்டுப் பகுதியில் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.** நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தமை என்பன சென்மதி நிலுவையின் திரண்ட மீதி 2014இல் பதிவுசெய்த ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,489 மில்லியனுக்கு மோசமடைவதற்கு காரணமாகியது.

வரைபடம் 5.10 சென்மதி நிலுவை




## 5.9 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

நிதியியல் கணக்கிற்கான மிதமான உட்பாய்ச்சல்களின் விளைவாக இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமை மிதமாக அதிகரித்த வேளையில் வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலைமை 2015ஆம் ஆண்டின் இறுதியில் வீழ்ச்சியடைந்தது. ஒதுக்குச் சொத்துக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் பெறுபேறாக மொத்த வெளிநாட்டு சொத்துக்களின் நிலைமை 2014ஆம் ஆண்டின் இறுதியின் ஐ.அ.டொலர் 11,186 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 10,887 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2015இன் இறுதியிலுள்ளவாறு மொத்த நிதியியல் சொத்துக்களின் நிலைமையில் ஒதுக்குச் சொத்துக்களின் நிலைமை 67 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை மற்றும் பெறத்தக்க ஏனைய கணக்குகளின் நிலைமை என்பன முன்னைய ஆண்டின் தொடக்கத்துடன் ஒப்பிடுகையில் 2015இன் இறுதியில் அதிகரித்தன. மொத்தப் பொறுப்பு நிலைமை மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்ததன் பெறுபேறாக 2015 இறுதியில் வெளிநின்ற பொறுப்பு நிலைமை 2014இன் இறுதியின் ஐ.அ.டொலர் 52,811 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 53,586 மில்லியனாகக் காணப்பட்டது. பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் மூன்று முக்கிய பொறுப்புக்கூறுகளில் சொத்துப்பட்டியல் பொறுப்பு நிலைமை அதேபோன்று நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமை ஆகிய இரண்டும் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையில் மாத்திரம் சிறிதளவு அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டது. நிதியியல் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் தேறிய தாக்கம் யாதெனில் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2014 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 41,625 மில்லியன் கொண்ட வெளிநின்ற தேறிய

அட்டவணை 5.10 பன்னாட்டு முதலீட்டு நிலைமை (பீ.பி.எம்.6 சமர்ப்பிப்பு வடிவமைப்பு)

ஐ.அ.டொ.மில்லியன்

(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2014 (அ) | | 2015 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | **607** | **10,572** | **660** | **9,972** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | 604 | 8,028 | 657 | 7,253 |
| படுகடன் கருவிகள் | 3 | 2,544 | 3 | 2,719 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | **0.1** | **12,664** | **0.1** | **12,375** |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | - | 1,869 | - | 1,536 |
| ஏனைய துறைகள் | - | 1,869 | - | 1,536 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | 0.1 | 10,795 | 0.1 | 10,839 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 0.1 | 2,263 | 0.1 | 2,140 |
| நீண்ட காலம் | 0.1 | 2,263 | - | 2,140 |
| அரசாங்கம் | - | 8,358 | - | 8,534 |
| குறுங்காலம் | - | 399 | - | 33 |
| நீண்ட காலம் | - | 7,959 | - | 8,501 |
| ஏனைய துறைகள் | - | 174 | - | 164 |
| நீண்ட காலம் | - | 174 | - | 164 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **2,370** | **29,575** | **2,923** | **31,240** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **558** | **1,594** | **701** | **3,051** |
| மத்திய வங்கி | - | 6 | - | 1,105 |
| குறுங்காலம் | - | 6 | - | 5 |
| நீண்ட காலம் | - | - | - | 1,100 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 558 | 1,587 | 701 | 1,946 |
| குறுங்காலம் | 388 | 1,587 | 539 | 1,946 |
| நீண்ட காலம் | 171 | - | 162 | - |
| **கடன்கள்** | - | **25,297** | - | **25,864** |
| மத்திய வங்கி | - | 1,248 | - | 692 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | 1,248 | - | 692 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 4,282 | - | 5,070 |
| குறுங்காலம் | - | 3,159 | - | 3,816 |
| நீண்ட காலம் | - | 1,123 | - | 1,253 |
| அரசாங்கம் | - | 15,774 | - | 16,147 |
| நீண்ட காலம் | - | 15,774 | - | 16,147 |
| ஏனைய துறைகள் (உ) | - | 3,993 | - | 3,956 |
| நீண்ட காலம் | - | 3,993 | - | 3,956 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **820** | **1,674** | **986** | **1,299** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 126 | - | 96 | - |
| குறுங்காலம் | 126 | - | 96 | - |
| ஏனைய துறைகள் (ஊ) | 694 | 1,674 | 890 | 1,299 |
| குறுங்காலம் | 694 | 1,674 | 890 | 1,299 |
| **பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள்** | **992** | **437** | **1,236** | **478** |
| மத்திய வங்கி (எ) | - | 437 | - | 478 |
| குறுங்காலம் | - | 437 | - | 478 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 992 | - | 1,236 | - |
| குறுங்காலம் | 992 | - | 1,236 | - |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சி.எ.உ.)** | - | **573** | - | **548** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **8,208** | | **7,304** | |
| நாணயவியல் தங்கம் | 893 | | 760 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 9 | | 7 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 69 | | 66 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 7,237 | | 6,470 | |
| நாணயமும் வைப்புக்களும் | 3,795 | | 3,911 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 1,798 | | 2,167 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 1,997 | | 1,745 | |
| பிணையங்கள் | 3,442 | | 2,559 | |
| படுகடன் பிணையங்கள் | 3,442 | | 2,559 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **11,186** | **52,811** | **10,887** | **53,586** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-41,625** | | **-42,699** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுறி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 11,186 | 52,811 | 10,887 | 53,586 |
| குறுங்காலம் | 6,957 | 9,132 | 7,499 | 9,113 |
| நீண்ட காலம் | 4,229 | 43,679 | 3,388 | 44,473 |

(அ) திருத்தப்பட்டது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) தற்காலிகமானது

(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.

(ஈ) உள்நாட்டு நாணய வெளியீடுகள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வெளியீடுகள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(உ) அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.

(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.

(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலமை

பொறுப்பு நிலைமையிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 42,699 மில்லியன் கொண்ட வெளிநின்ற தேறிய பொறுப்பு நிலைமைக்கு விரிவடைந்தமையேயாகும்.

### 5.9.1 நேரடி முதலீட்டு நிலைமை

**சந்தை விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் விளைவாக 2015 இறுதியில் நேரடி முதலீட்டுப் பொறுப்பு நிலைமை வீழ்ச்சியடைந்த வேளையில் நேரடி முதலீட்டு சொத்து நிலைமை சிறிதளவு அதிகரிப்பினை ஆண்டுப் பகுதியில் பதிவுசெய்தது.** 2015ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுக்கல்வாங்கல்களில் தேறிய உட்பாய்ச்சலொன்று காணப்பட்ட போதும் நேரடி முதலீட்டுப் பொறுப்பு இருப்பு நிலைமை 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 10,572 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 9,972 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு செலாவணி வீத வேறுபாடுகளின் காரணமாக மதிப்பீட்டில் இழப்புக்கள் ஏற்பட்டமைக்குப் புறம்பாக பகிரங்கமாகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் நேரடி முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட வாக்களிக்கும் பங்குகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். பங்குரிமை மூலதனத்தில் ஏற்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் கொண்ட மொத்த மதிப்பீட்டு இழப்புக்களின் 70 சதவீதத்திற்கும் கூடுதலானவைக்கு பத்து முக்கிய பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட குறைப்புக்களே காரணமாகும். மேலும், சென்மதி நிலுவையில் கொடுக்கல்வாங்கல்கள் எதையும் பதிவுசெய்யாத பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் அளவில் ஏனைய மாற்றமொன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ள இயற்கை மூலவள கண்டுபிடிப்புத் துறையிலுள்ள முக்கிய நிறுவனங்களினால் பதிவழிக்கப்பட்ட படுகடனும் 2015இல் நேரடி முதலீட்டு கம்பனிகளுக்குள்ளேயான படுகடன் நிலைமையில் ஏற்பட்ட குறைவிற்குப் பங்களித்தது. மொத்த நேரடி முதலீட்டு நிலைமையில், 42 சதவீதம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டவையாகவும் 53 சதவீதம் முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டவையாகவும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டவையாகவும் 5 சதவீதம் முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்படாததுடன் பட்டியலிடப்படாத தனியார் துறை நிறுவனங்கள் வசமிருந்தன.

**பன்னாட்டு நாணய நிதியத்தின் இணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீட்டில் பங்கேற்பதன் காரணமாக இலங்கை தற்பொழுது நாடுகளின் அடிப்படையிலான நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமையினை அறிவிக்கிறது.** இதன்படி, 2015 இறுதியில் ஐக்கிய இராச்சியம், நெதர்லாந்து, இந்தியா, மலேசியா மற்றும் சீனா என்பன இருப்பு நிலைமை நியதிகளில் நேரடி முதலீடுகளின் முதல் ஐந்து மூலங்களாகக் காணப்படுகின்றன. மேலும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் மொத்த வெளிநாட்டு முதலீட்டான ஐ.அ.டொலர் 5,675 மில்லியனில் 73 சதவீதம் கொண்ட வெளிநின்ற நிலைமை நேரடி முதலீட்டாளர் வசமிருந்த வேளையில் தனிப்பட்ட கம்பனிகளின் பங்குடமையில் 10 சதவீதத்திற்கும் குறைவான பங்குரிமை மூலதனத்தைக் கொண்டிருந்த சொத்துப்பட்டியல் முதலீட்டாளர்களின் வெளிநின்ற நிலைமைக்கு 27 சதவீதம் பங்களித்தது. சொத்துப்பட்டியல் முதலீடுகள் மிகக்கூடிய தளம்பல்களைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றவிடத்து நேரடி முதலீடுகள் அவற்றின் முதலீடுகளில் மிக நீண்ட கால வட்டி வீதங்களைக் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றமையின் காரணமாக கொழும்புப் பங்குச் சந்தையின் மொத்த வெளிநாட்டு முதலீடுகளில் வெளிநின்ற நேரடி முதலீட்டாளர்களின் உயர் பங்கு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகளின் ஒப்பீட்டு ரீதியான உறுதிப்பாட்டினை எடுத்துக்காட்டுகிறது. அதேவேளை, இலங்கையர்களின் முதலீட்டு நிதியங்களில் பெரும் எண்ணிக்கையானவை தனியார் வசமுள்ள பங்குரிமை மூலதனங்களில் குறிப்பாக, தென்கிழக்காசியப் பிராந்தியங்களிலுள்ள பங்குரிமை மூலதனங்களில் முதலீடு செய்யப்பட்டமையின் காரணமாக வெளிமுக நேரடி முதலீட்டு நிலைமை அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

### 5.9.2 சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை

**பங்குரிமை மூலதன நியதிகளில் சொத்துப்பட்டியல் முதலீட்டு இருப்பு நிலைமை வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிநின்ற படுகடன் பிணையங்கள் 2015ஆம் ஆண்டுப் பகுதியில் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.** இலங்கைக் கம்பனிகளின் மொத்தப் பங்குடமையில் 10 சதவீதத்திற்கும் குறைவான வாக்களிக்கும் பங்குகளிலுள்ள வெளிநாட்டு முதலீடுகளான பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிய பங்குகளின் பொறுப்பு நிலைமை 2014இன் இறுதியின் ஐ.அ.டொலர் 1,869 மில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 1,536 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2015 காலப்பகுதியில் கொடுக்கல்வாங்கல்களின் தேறிய வெளிப்பாய்ச்சல்களுக்குப் புறம்பாக சந்தை விலைகள் மற்றும் பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் செலாவணி வீதங்கள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக குறிப்பிடத்தக்க மதிப்பீட்டு இழப்புக்கள் ஏற்பட்டமையே முக்கிய காரணமாகும். வதிவற்றோர் வசமுள்ள படுகடன் பிணையங்களின் வெளிநின்ற இருப்பு நிலைமையும் 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 10,795 மில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 10,839 மில்லியனுக்கு மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. இதற்கு முக்கியமாக, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் மற்றும் ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான நாட்டிற்கான பன்னாட்டு

முறிகளின் முதிர்ச்சி ஆகிய வடிவில் கொடுக்கல்வாங்கல்களின் வெளிப்பாய்ச்சல்களின் காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் புதிய வழங்கல்களின் தாக்கத்தை ஓரளவிற்குத் தணித்தமையே காரணமாகும். தேறிய உட்பாய்ச்சல்களுக்கு ஐ.அ.டொலர் 2,150 மில்லியன் பெறுமதியான இரண்டு புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்களும் மற்றும் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல்களுமே கிடைத்த தேறிய முக்கிய காரணங்களாகக் காணப்பட்டன. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீடுகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சல்களின் காரணமாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மொத்த வெளிநின்ற நிலைமை 2014இன் இறுதியின் ஐ.அ.டொலர் 2,996 மில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 1,844 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதி 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 5,287 மில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 6,425 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, வதிவற்றோர் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகளின் வெளிநின்ற நிலைமை 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 265 மில்லியனாகக் காணப்பட்டது.

### 5.9.3 ஏனைய முதலீட்டு நிலைமை

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**நாணயம் மற்றும் வைப்புக்களின் சொத்து மற்றும் பொறுப்பு நிலைமை ஆகிய இரண்டும் 2015ஆம் ஆண்டில் அதிகரித்தன.** இலங்கை மத்திய வங்கியினதும் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களினதும் நாணய மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமை 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 1,594 மில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 3,051 மில்லியனுக்கு அதிகரித்தது. மத்திய வங்கியின் நாணய மற்றும் வைப்பு நிலைமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மத்திய வங்கிக்கும் இந்திய ஒதுக்கு வங்கிக்குமிடையிலான ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகள் காரணமாக இருந்ததுடன் இதில் ஐ.அ.டொலர் 400 மில்லியன் 2015 காலப்பகுதியில் மீளச் செலுத்தப்பட்டது. இதன் விளைவாக, மத்திய வங்கியின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமை 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 1,105 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் சொத்துக்களை உள்ளடக்கிய நாணயம் மற்றும் வைப்புச் சொத்துக்களின் நிலைமை 2015இல் மிதமாக அதிகரித்தது.


#### கடன்கள்

**அரசாங்கத்தினதும் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களினதும் வெளிநாட்டுக் கடன்களின் வெளிநின்ற இருப்பு அதிகரித்த வேளையில் மத்திய வங்கியினதும் தனியார் துறை நிறுவனங்களினதும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினதும் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களின் நிலைமை 2015 காலப்பதியில் வீழ்ச்சியடைந்தது.** நாட்டின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களில் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு வகைகூறிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களின் வெளிநின்ற நிலைமை 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 15,774 மில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 16,147 மில்லியனுக்கு சிறிதளவால் மாத்திரம் அதிகரித்தது. இதற்கு குறைந்தமட்ட உட்பாய்ச்சல்களும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுப் படுகடன்களின் செலாவணி வீத மதிப்பீடுகளுமே முக்கிய காரணங்களாகும். இது ஐ.அ.டொலர் நியதிகளில் விளக்கமளிக்கும் பொழுது இருப்பு நிலைமைகளில் குறைப்பொன்றினைத் தோற்றுவித்திருக்கிறது. வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் கடன் பொறுப்புக்கள் அதிகரித்த வேளையில் தனியார் துறைக் கடன் பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப் பகுதியில் தனியார் துறைக்கான கடன் உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் மீள்கொடுப்பனவுகள் உயர்வாக இருந்தமையே காரணமாகும். அதேவேளை, மத்திய வங்கி பன்னாட்டு நாணய நிதிய துணைநில் ஒழுங்கு கடன் வசதிகளை தொடர்ந்தும் மீளச்செலுத்தி வருகின்ற வேளையில் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளும் இவ்வாண்டுக் காலத்தில் கடன் பகிர்ந்தளிப்புக்களிலும் பார்க்க கூடுதலான மீள்கொடுப்பனவுகளைப் பதிவுசெய்தன.

#### வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள்

**பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை வீழ்ச்சியடைந்த அதேவேளை வழங்கப்பட்ட கொடுகடன் மற்றும் முற்பணங்களின் சொத்து நிலைமை 2015இல் அதிகரித்தது.** வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 1,674 மில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 1,299 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற எண்ணெய்ச் செலவின் அதிகரித்த மீள்கொடுப்பனவுகளே காரணமாகும். இவ்வாண்டுப் பகுதியில் இரண்டு திசைகளிலும் சுற்றுவட்ட ரீதியான தளம்பல்களைக் காட்டிய வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்து நிலைமை 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 820 மில்லியன்

வரைபடம் 5.11
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




கொண்ட வெளிநின்ற நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 986 மில்லியன் கொண்ட வெளிநின்ற நிலைமையொன்றில் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

### பெறத்தக்க/ கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள்

**பெறத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமையும் கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமையும் 2015இல் அதிகரித்தன.** பெறத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமை வைப்புகளை ஏற்கின்ற நிறுவனங்களின் பெறத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற சொத்து நிலைமையின் அடிப்படையில் சுற்றுவட்ட ரீதியாக வேறுபடுகின்றதுடன் 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 1,236 மில்லியன் கொண்ட தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டது. அதேவேளை, கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமை 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 478 மில்லியனால் அதிகரித்தமைக்கு 2015 இறுதியில் மத்திய வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

### 5.9.4 ஒதுக்குச் சொத்து நிலைமை

**2015 இறுதியிலுள்ளவாறு மத்திய வங்கிக்கும் அரசிற்கும் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்களின் நிலைமை ஐ.அ.டொலர் 7.3 பில்லியனாக விளங்கியது.** 2014 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனில் காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைந்தமைக்கு அட்டவணையிடப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவு, பன்னாட்டு நாணய நிதியம் - துணைநில் ஒழுங்குவிதிகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைக்கான திரவத்தன்மை வழங்கல் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. அதேவேளை, வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2014 இறுதியின் ஐ.அ.டொலர் 9.9 பில்லியனிலிருந்து 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 9.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சி நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் வீழ்ச்சியை ஏற்படுத்திய போதும் பெருமளவு வீழ்ச்சி இவ்வாண்டுப் பகுதியில் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் மூலம்

அட்டவணை 5.11
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் ஒட்டுமொத்த மீதி


(கால இறுதியிலான நிலை)

| | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 (அ) | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 (அ) |
| 1. அரசின் வெளிநாட்டு சொத்து | 615 | 631 | 465 | 635 | 470 | 70,088 | 80,209 | 60,857 | 83,262 | 67,690 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்து | 6,134 | 6,475 | 7,030 | 7,573 | 6,834 | 698,666 | 823,375 | 919,171 | 992,438 | 984,489 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 6,749 | 7,106 | 7,495 | 8,208 | 7,304 | 768,754 | 903,584 | 980,028 | 1,075,700 | 1,052,178 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்து | 1,241 | 1,481 | 1,078 | 1,676 | 2,033 | 141,394 | 188,195 | 141,008 | 219,641 | 292,916 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 7,991 | 8,587 | 8,573 | 9,884 | 9,337 | 910,148 | 1,091,779 | 1,121,036 | 1,295,342 | 1,345,095 |
| 6. ஒதுக்குக்கடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 2,737 | 2,943 | 2,347 | 1,691 | 2,275 | 311,773 | 373,984 | 306,825 | 221,593 | 327,725 |
| 7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6) | 4,012 | 4,163 | 5,148 | 6,517 | 5,029 | 456,981 | 529,600 | 673,203 | 854,107 | 724,453 |
| 8. திரண்ட நிலுவை (ஈ) | -1,059 | 151 | 985 | 1,369 | -1,489 | -105,712 | 72,619 | 143,603 | 180,904 | -129,654 |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 4.0 | 4.4 | 5.0 | 5.1 | 4.6 | | | | | |
| 9.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 3.6 | 3.9 | 4.2 | 4.3 | 3.8 | | | | | |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 4.7 | 5.4 | 5.7 | 6.1 | 5.9 | | | | | |
| 10.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 4.3 | 4.7 | 4.8 | 5.1 | 4.9 | | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5.12** வெளிநாட்டுப் படுகடன்




தணிக்கப்பட்டது. 2015 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் போதுமாந்தன்மையின் நியதிகளில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் பொருட்களின் 4.6 மாத இறக்குமதிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளின் 3.8 மாத இறக்குமதிக்கும் சமமானதாக இருந்தது. இது, பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 3 மாத இறக்குமதிகளின் அளவினை விடக் கூடுதலானதாகும். அதேவேளை, மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 5.6 மாத பொருட்களின் இறக்குமதிக்கும் 4.9 மாத பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமமானதாகக் காணப்பட்டது. 2015 இறுதியில் ஒதுக்குச் சொத்து நிலைமை நாட்டின் குறுங்காலப் படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 60 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது.

## 5.10 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு

### 5.10.1 வெளிநாட்டுப் படுகடன்

நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 44.8 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 2014 இறுதியின் மொ.உ.உற்பத்தியின் 53.6 சதவீதத்திற்கு வகைகூறிய ஐ.அ.டொலர் 42.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 54.4 சதவீதத்திற்கு வகைகூறியது. வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியான சிறிய இவ்வதிகரிப்பிற்கு முதிர்ச்சியடைந்த படுகடன் பிணையங்களின் மீள்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய அட்டவணையிடப்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றுடன் இணைந்த வெளிநாட்டுக் கடன்களின் மிதமான உட்பாய்ச்சலே முக்கிய காரணமாகும். ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனானது செலாவணி வீத மதிப்பீட்டு வேறுபாடுகளின் உயர்ந்த மட்டம் காரணமாக மிதமாக மட்டும் அதிகரித்தது. அதேவேளை, குறுங்கால மற்றும் நீண்ட காலப் படுகடன் உள்ளமைப்பு

**அட்டவணை 5.12** வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை (பீபிஎம் 6 வெளிப்படுத்துகை கட்டமைப்பு)

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2014 (அ) | 2015 (ஆ) |
|---|---|---|
| **அரசாங்கம்** | **24,132** | **24,681** |
| **குறுங்காலம்** | **399** | **33** |
| படுகடன் பிணையங்கள் | 399 | 33 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 399 | 33 |
| **நீண்ட காலம்** | **23,733** | **24,647** |
| படுகடன் பிணையங்கள் | 7,959 | 8,501 |
| திறைசேரி முறிகள் (இ) | 2,597 | 1,811 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 75 | 265 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 5,287 | 6,425 |
| கடன்கள் | 15,774 | 16,147 |
| **மத்திய வங்கி** | **2,264** | **2,823** |
| **குறுங்காலம்** | **443** | **483** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 6 | 5 |
| கொடுக்கவேண்டிய ஏனைய கணக்குகள் | 437 | 478 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 437 | 478 |
| **நீண்ட காலம்** | **1,821** | **2,340** |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 573 | 548 |
| நாணய மற்றும் வைப்புகள் | - | 1,100 |
| கடன்கள் | 1,248 | 692 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 1,248 | 692 |
| துணைநில் ஒழுங்குகள் (ப.நா.நி- து.நில் வசதி) | 1,248 | 692 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **8,133** | **9,156** |
| **குறுங்காலம்** | **4,747** | **5,762** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 1,587 | 1,946 |
| வர்த்தக வங்கிகள் | 1,587 | 1,946 |
| கடன்கள் | 3,159 | 3,816 |
| வர்த்தக வங்கிகள் | 3,159 | 3,816 |
| **நீண்ட காலம்** | **3,386** | **3,393** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 2,263 | 2,140 |
| வர்த்தக வங்கிகள் | 1,037 | 1,112 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 1,226 | 1,028 |
| கடன்கள் | 1,123 | 1,253 |
| வர்த்தக வங்கிகள் | 1,064 | 1,240 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 59 | 13 |
| **ஏனைய துறைகள் (எ)** | **5,841** | **5,419** |
| **குறுங்காலம்** | **1,674** | **1,299** |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 1,674 | 1,299 |
| **நீண்ட காலம்** | **4,167** | **4,120** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 174 | 164 |
| கடன்கள் | 3,993 | 3,956 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 1,363 | 1,533 |
| அரசிற்கு சொந்தமான நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | 2,630 | 2,423 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ)** | **2,544** | **2,719** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **42,914** | **44,797** |
| **மொ.உ.உ. சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 53.6 | 54.4 |
| குறுங்கால படுகடன் | 9.1 | 9.2 |
| நீண்டகால படுகடன் | 44.5 | 45.2 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 16.9 | 16.9 |
| நீண்டகால படுகடன் | 83.1 | 83.1 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **10,839** | **11,299** |
| அரசாங்கம் | 8,564 | 9,024 |
| திறைசேரி உண்டியல்கள் | 424 | 35 |
| திறைசேரி முறிகள் | 3,065 | 2,074 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 75 | 265 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 5,000 | 6,650 |
| மத்திய வங்கி தவிர்ந்த, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனம் | 2,100 | 2,100 |
| வர்த்தக வங்கிகள் | 1,000 | 1,100 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 1,100 | 1,000 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் மீது கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஆண்டின் தொடக்கத்திலும் இறுதியிலும் அதேமட்டத்திலேயே காணப்பட்டது. 2015 இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் முக்கிய பங்களிப்பாளராக விளங்கி 2015 இறுதியில் மொத்தப் வெளிநாட்டுப் படுகடனில் 58 சதவீதமாகக் காணப்பட்டது. படுகடன் பிணையங்கள் மற்றும் நாணயங்களின் நியதிகளில் வெளிநின்ற சொத்துப்பட்டியல் முதலீடுகளும் வைப்புப் பொறுப்புக்களும் 2015 இறுதியில் முறையே 24 சதவீதமாகவும் 7 சதவீதமாகவும் விளங்கின. துறைவாரியான பிரிப்பின்படி, அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 55 சதவீதம் கொண்ட மொத்த வெளிநாட்டுப் படுகடனின் பாரிய பங்கிற்கு வகைகூறிய வேளையில் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள், தனியார் துறைக் நிறுவனங்கள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மத்திய வங்கி மற்றும் நேரடி முதலீடு தொழில்முயற்சிகள் என்பன 2015 இறுதியின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் முறையே 20 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் பங்களித்தன.

### 5.10.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**2015இல் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் மீதான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.** 2015இல் முதல் தொகை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டும் 2014இன் ஐ.அ.டொலர் 2,323 மில்லியன் கொண்ட முதல் தொகையுடனும் ஐ.அ.டொலர் 1,156 மில்லியன் கொண்ட வட்டிக் கொடுப்பனவுகளுடனும் ஒப்பிடுகையில் முறையே ஐ.அ.டொலர் 3,460 மில்லியனுக்கும் ஐ.அ.டொலர் 1,223 மில்லியனுக்கும் அதிகரித்தன. முதல் தொகைக் கொடுப்பனவானது ஐ.அ.டொலர்

அட்டவணை 5.13

**வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் (அ)**

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் 2011 | 2012 | 2013 | 2014 (ஆ) | 2015 (இ) | ரூபா.மில்லியன் 2011 | 2012 | 2013 | 2014 (ஆ) | 2015 (இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **1,797** | **2,675** | **4,040** | **3,479** | **4,683** | **198,662** | **341,382** | **521,626** | **454,248** | **636,614** |
| **1.1 கடன் தீர்த்தல்** | **1,090** | **1,795** | **2,982** | **2,323** | **3,460** | **120,569** | **229,049** | **384,942** | **303,347** | **470,301** |
| அரசாங்கம் | 884 | 1,490 | 1,555 | 1,296 | 1,976 | 97,732 | 190,088 | 200,705 | 169,150 | 268,583 |
| செயற்றிட்டக் கடன்கள் | 789 | 862 | 836 | 793 | 798 | 87,263 | 109,975 | 107,906 | 103,540 | 108,503 |
| படுகடன் பிணையங்கள் | 95 | 628 | 719 | 503 | 1,178 | 10,469 | 80,114 | 92,799 | 65,610 | 160,081 |
| மத்திய வங்கி | 11 | 57 | 653 | 719 | 907 | 1,245 | 7,268 | 84,285 | 93,917 | 123,229 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 11 | 57 | 453 | 719 | 507 | 1,245 | 7,268 | 58,463 | 93,917 | 68,854 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | - | - | 200 | - | 400 | - | - | 25,822 | - | 54,375 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 195 | 248 | 774 | 309 | 577 | 21,592 | 31,692 | 99,952 | 40,280 | 78,489 |
| வெளிநாட்டு கடன்கள் | 195 | 248 | 774 | 309 | 577 | 21,592 | 31,692 | 99,952 | 40,280 | 78,489 |
| படுகடன் பிணையங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **706** | **880** | **1,059** | **1,156** | **1,223** | **78,093** | **112,333** | **136,685** | **150,901** | **166,313** |
| அரசாங்கம் | 591 | 702 | 832 | 876 | 867 | 65,292 | 89,547 | 107,357 | 114,368 | 117,843 |
| செயற்றிட்ட கடன்கள் | 363 | 294 | 255 | 260 | 266 | 40,149 | 37,464 | 32,982 | 33,883 | 36,150 |
| படுகடன் பிணையங்கள் | 227 | 408 | 576 | 616 | 601 | 25,143 | 52,083 | 74,376 | 80,485 | 81,693 |
| மத்திய வங்கி | 10 | 43 | 35 | 20 | 13 | 1,082 | 5,512 | 4,507 | 2,546 | 1,714 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 10 | 36 | 33 | 20 | 10 | 1,082 | 4,593 | 4,313 | 2,546 | 1,402 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | - | 7 | 2 | - | 2 | - | 919 | 194 | - | 311 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 106 | 135 | 192 | 260 | 344 | 11,719 | 17,274 | 24,820 | 33,986 | 46,757 |
| வெளிநாட்டு கடன்கள் | 106 | 135 | 145 | 118 | 185 | 11,719 | 17,274 | 18,663 | 15,470 | 25,097 |
| படுகடன் பிணையங்கள் | - | - | 48 | 142 | 159 | - | - | 6,157 | 18,517 | 21,660 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **13,643** | **13,573** | **15,079** | **16,735** | **16,902** | | | | | |
| **3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **19,314** | **19,754** | **21,639** | **23,936** | **24,036** | | | | | |
| **4. படுகடன் பணி விகிதம்** | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| i. ஒட்டு மொத்த விகிதம் | 13.2 | 19.7 | 26.8 | 20.8 | 27.7 | | | | | |
| ii. ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக | 13.0 | 19.0 | 23.6 | 16.4 | 24.7 | | | | | |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| i. ஒட்டு மொத்த விகிதம் | 9.3 | 13.5 | 18.7 | 14.5 | 19.5 | | | | | |
| ii. ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 9.2 | 13.1 | 16.4 | 11.4 | 17.3 | | | | | |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (ஈ) | 1,474 | 2,191 | 2,386 | 2,172 | 2,843 | | | | | |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 82.1 | 81.9 | 59.1 | 62.4 | 60.7 | | | | | |

(அ) பிபீஎம்6 வெளிப்படுத்துகை கட்டமைப்புடன் முடிந்தளவு இணைக்கும் நோக்குடன் படுகடன் பணிகளின் துறை நீதியான வகைப்படுத்தலானது முன்னைய ஆண்டிலிருந்து மாறுபடுகிறது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக


மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி


798 மில்லியன் கொண்ட அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், ஐ.அ.டொலர் 678 மில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த திறைசேரி முறிகள், ஐ.அ.டொலர் 507 மில்லியன் கொண்ட பன்னாட்டு நாணய நிதியம் - சிறப்பு துணைநில் ஒழுங்குவசதி மீள்கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 577 மில்லியன் கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட மத்திய வங்கியின் இந்திய ஒதுக்கு வங்கிக்கான பரஸ்பர பரிமாற்றல் வசதியின் மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றின் காரணமாக அதிகரித்தன. அதிகரித்த முதல் தொகை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் பொருட்களின் குறைந்த ஏற்றுமதிகள் என்பனவற்றின் விளைவாக பொறுப்புக்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளினது சதவீதமாக படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பவனவுகள் முன்னைய ஆண்டின் 20.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 27.7 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. மேலதிக எதிர்கால கடன்பாட்டுத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் போன்ற படுகடனை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்களின் உட்பாய்ச்சலை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தாலொழிய ஏற்றுமதிகளில் எதிர்பார்க்கப்படும் மிதமான வளர்ச்சியின் பின்னணியில் உலகளாவிய வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படும் படிப்படியான அதிகரிப்பு மற்றும் படுகடன் நிதியிடலூடாக பூர்த்திசெய்யப்பட வேண்டியிருக்கும் நிதியிடல் தேவைப்பாடுகள் என்பனவற்றின் காரணமாக பொருட்கள் மற்றும் பணிகளினது ஏற்றுமதிகளின் சதவீதமாக படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் சதவீதம் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.11 செலாவணி வீத அசைவுகள்

**இலங்கையின் ரூபா 2015இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பெருமளவிற்கு உறுதியாகக் காணப்பட்டதெனினும் செலாவணி வீதங்களை நிர்ணயிப்பதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதிப்பதென்ற மத்திய வங்கியின் தீர்மானத்தின் விளைவாக அதன் பின்னர் கணிசமாகத் தேய்வடைந்தது.** எதிர்பார்க்கப்பட்டதிலும் குறைவான செலாவணி வீத உட்பாய்ச்சல்கள் உயர்ந்தமட்ட வெளிப்பாய்ச்சல்களுடன் இணைந்து இவ்வாண்டுப் பகுதியில் செலாவணி வீதத்தின் மீது குறிப்பிடத்தக்கதொரு அழுத்தத்தைத் தோற்றுவித்தது. இதற்கு ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதங்கள் உயருமென்ற எதிர்பார்ப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து வட்டி வீதங்கள் உயர்வடைந்தமை என்பனவற்றின் காரணமாக அரச ரூபாப் பிணையங்களின் வெளிநாட்டு முதலீடுகள் மாற்றமடைந்தமை மற்றும் எண்ணெய் அல்லா இறக்குமதி மீதான அதிகரித்த செலவினமும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் காரணமாக வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி உயர்மட்டத்தில் காணப்பட்டமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. ஐ.அ.டொலருக்கெதிராக தொடர்ச்சியாக தேய்வடைந்தமையின் அழுத்தம் தளம்பல்களைக் குறைப்பதற்காக உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தொடர்ச்சியான தலையீட்டினைத் தேவைப்படுத்தியது. தேறிய அடிப்படையில் மத்திய வங்கியினால் ஐ.அ.டொலர் 1.9 பில்லியன் நிரம்பல் செய்யப்பட்டமையின் உதவியுடன் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 2.42 சதவீதம் கொண்ட சிறிதளவு தேய்வினைப் பதிவுசெய்தது. எனினும், 2015 செத்தெம்பர் 3ஆம் திகதி உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி அதன் தலையீடுகளை மட்டுப்படுத்திக் கொள்வதற்கும் செலாவணி வீதங்கள், சந்தையின் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளினால் பெருமளவிற்கு நிர்ணயிப்பதனை அனுமதிப்பதற்கும் தீர்மானித்தது. இது, 2015 செத்தெம்பர்

வரைபடம் 5.13 செலாவணி வீத அசைவுகள்



**அட்டவணை 5.14 செலாவணி வீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2013 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| யூரோ | 180.45 | 159.42 | 157.37 | 171.51 | 173.47 | 150.84 | 13.19 | 1.30 | -1.13 | 15.00 |
| இந்திய ரூபா | 2.11 | 2.07 | 2.17 | 2.21 | 2.14 | 2.12 | 2.13 | -4.62 | 3.28 | 1.12 |
| யப்பானிய யென் | 1.25 | 1.10 | 1.20 | 1.32 | 1.24 | 1.12 | 13.48 | -8.20 | 7.17 | 10.08 |
| ஸ்டேர்லிங் பவுண் | 215.58 | 204.04 | 213.57 | 202.08 | 215.16 | 207.99 | 5.65 | -4.46 | -6.08 | 3.45 |
| ஐ.அ.டொலர் | 130.75 | 131.05 | 144.06 | 129.11 | 130.56 | 135.94 | -0.23 | -9.03 | -1.11 | -3.96 |
| சி.எ.உ. | 201.36 | 189.86 | 199.63 | 196.19 | 198.35 | 190.16 | 6.05 | -4.89 | -1.09 | 4.31 |
| தாக்கமுள்ள நாணயமாற்று வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) (2010=100) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2013 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| பெ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 90.97 | 96.44 | 93.53 | 91.39 | 91.99 | 96.61 | 6.02 | -3.02 | 0.66 | 5.02 |
| உ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 100.30 | 106.30 | 103.90 | 100.61 | 101.94 | 106.18 | 5.97 | -2.26 | 1.32 | 4.16 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. - அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்கம் வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியல் நேரடியாக பிரதிபலித்தது.

குறிப்பு: பெ.தா.செ.வீ. = பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம்
உ.தா.செ.வீ. = உண்மை தாக்கமுள்ள செலாவணி வீதம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

4ஆம் திகதியிலிருந்து 2015 இறுதி வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 6.64 சதவீதத்தினால் தேய்வடையக் காரணமாயிற்று. ஒட்டுமொத்தமாக, 2015 இறுதியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 9.03 சதவீதத்தினால் ரூ.144.06 இற்கு தேய்வடைந்தது. ஐ.அ.டொலருக்கெதிராக ரூபாவின் ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 2014இன் ரூ.130.56 இலிருந்து 2015இல் ரூ.135.94 இற்கு தேய்வடைந்தது.

**அதேவேளை, குறுக்கு நாணயச் செலாவணி வீதத்தின் அசைவினைப் பொறுத்து 2015ஆம் ஆண்டுப் பகுதியில் மற்றைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது.** இதன்படி, ரூபா ஸ்ரேலிங் பவுணுக்கெதிராக 4.46 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னிற்கு எதிராக 8.20 சதவீதத்தினாலும் மற்றும் இந்திய ரூபாவிற்கெதிராக 4.62 சதவீதத்தினாலும் தேய்வடைந்த வேளையில் யூரோவிற்கெதிராக 1.30 சதவீதத்தினால் பெறுமதி உயர்வடைந்தது. பன்னாட்டுச் சந்தையில் ஐ.அ.டொலருக்கெதிராக முக்கிய நாணயங்களின் அசைவுகளினது ஒட்டுமொத்தத் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபா 2015ஆம் ஆண்டுப் பகுதியில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கெதிராக 4.89 சதவீதத்தினால் தேய்வடைந்தது.


## 5.11.1 பெயரளவு மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**5 நாணயங்கள் மற்றும் 24 நாணயங்களின் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 2015இல் தேய்வடைந்தது.** குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளையும் நாணயக் கூடையிலுள்ள பெரும்பாலான நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் 5 நாணயங்கள் மற்றும் 24 நாணயங்கள் ஆகிய இரண்டினதும் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (2010 = 100), 2015ஆம் ஆண்டுப் பகுதியில் முறையே 4.12 சதவீதத்தினாலும் 3.02 சதவீதத்தினாலும் தேய்வடைந்தன. பெயரளவு செலாவணி வீதங்களில் காணப்படும் வேறுபாடுகளுக்குப் புறம்பாக நாடுகளுக்கிடையேயான பணவீக்க வேறுபாடுகளையும் கவனத்தில் கொண்ட உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் இக்காலப்பகுதியில் தேய்வடைந்தது. இதன்படி, 5 நாணயங்கள் மற்றும் 24 நாணயங்கள் இரண்டினதும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் இவ்வாண்டில் முறையே 3.07 சதவீதத்தினாலும் 2.26 சதவீதத்தினாலும் தேய்வடைந்தன. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களின் இத்தேய்வு பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களின் தேய்விலும் பிரதிபலிக்கப்பட்டதுடன் பெரும்பாலான வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுப் பணவீக்கம் ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த மட்டங்களில் காணப்பட்டமையையும் பிரதிபலித்தது.

## 5.11.2 உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**உள்நாட்டு செலாவணிச் சந்தையில் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2014இல் அவதானிக்கப்பட்ட விரிவாக்கத்திற்கு மாறாக 2015இல் சுருக்கமடைந்தது.** இதற்கு மொத்தக்

வரைபடம் 5.14 காலாண்டுக்கான வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் அளவுகள்




கொடுக்கல்வாங்கல்களில் 50.5 சதவீதத்திற்கு வகைகூறும் உடனடிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2014இன் ஐ.அ.டொலர் 8,804 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 6,867 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டு வர்த்தகம் மெதுவடைந்தமையும் உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைக்கு வெளிநாட்டு நாணயங்களின் உட்பாய்ச்சல் மட்டுப்படுத்தப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். எனினும், முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2014இன் ஐ.அ.டொலர் 6,672 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 6,732 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. ஒட்டுமொத்தமாக வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2014இன் ஐ.அ.டொலர் 15,475 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ஐ.அ.டொலர் 13,600 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மத்திய வங்கி தேறிய நிரம்பலர் என்ற ரீதியில் ஆண்டு முழுவதும் உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. இதன்படி, மத்திய வங்கி சந்தைக்கு ஐ.அ.டொலர் 3,429 மில்லியனை வழங்கல் செய்த வேளையில் ஐ.அ.டொலர் 179 மில்லியனை ஈர்த்துக் கொண்டதன் மூலம் இவ்வாண்டுப் பகுதியில் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 3,250 மில்லியன் நிரம்பலுக்குக் காரணமாகியது. எனினும், ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு அரச பிணையங்கள் சந்தையிலிருந்து தமது நிதிகளை அகற்றிக் கொண்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து வருகின்ற கேள்வியை ஈடுசெய்வதற்கும் எண்ணெய் இறக்குமதிச் செலவினை நிதியிடுவதற்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

**2015இல் மூன்று மாத மற்றும் ஆறு மாதங்களுக்கான முன்னோக்கிய மிகை மதிப்பு சராசரி வட்டி வீத வேறுபாடுகளிலும் பார்க்கக் குறைவானதாகவிருந்தது.** இது, உள்நாட்டுச் செலாவணிச் சந்தையில் எதிர்கால உட்பாய்ச்சல்கள் தொடருமென்ற சந்தை எதிர்பார்ப்பினை பிரதிபலித்தது. எனினும், ஒரு மாதத்திற்கான முன்னோக்கிய மிகை மதிப்பு 2015இன் பெரும்பாலான காலப்பகுதியில் வட்டி வீத வேறுபாடுகளிலும் பார்க்க உயர்வாகவே காணப்பட்டு அண்மைய காலத்தில் செலாவணி வீதம் தேய்வடையுமென்ற சந்தை எதிர்பார்ப்பினை எடுத்துக்காட்டியது. ஐ.அ. டொலருக்கெதிராக ரூபா அண்மைய காலத்தில் தேய்வடையுமென்ற எதிர்பார்ப்பு இவ்வாண்டுக் காலத்தில் சராசரியாக நேர்க்கணிய மட்டத்தில் பேணப்பட்ட வர்த்தக வங்கிகளின் தேறிய திறந்த நிலைமைகளினாலும் பிரதிபலிக்கப்பட்டது.